

# பெய்யெனப் பெய்யும் மழை



யாழ்/நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், கிளி/சக்திபுரம், (எள்ளுக்காடு) உருத்திரபுரத்தை வாழ்விடமாகவும் கொண்ட இருமரபும் தூய தனிநாயக முதலி வழித்தோன்றல்

## அமரர்.திருவாட்டி நாகமுத்து வைத்திலிங்கம்

அவர்களின் 31ஆம் நாள் நினைவு மலராய் மலரும்

# நாகமலர்

திருவள்ளுவர் ஆண்டு 16.11.2042(02.12.2011)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் படையல்

வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான்புலம்
என்னும் வள்ளுவன் வாக்கிலொழுகி
அன்பும் அறனும் பண்பும் காட்டி
கண்ணீரில் கரைந்து எமையெல்லாம் செப்பமிட்டு
அழுக்காறு(பெறாமை), அவா(ஆசை), வெகுளி
(கோபம்), இன்னாசொல் (கடுஞ்சொல்) க்கு
அடிபணியவையாது வளர்த்தெடுத்து
பரிந்து ஓம்பிக்காக்க ஒழுக்கம் தெரிந்து ஓம்பித்
தேரினும் அ..தே துணை
என்னும் நெறியில் வழிநடத்தி
இவ்வையத்தில் எமையெல்லாம் முந்தியிருக்கச்
செயல்செய்த
தெய்வமே இனி என்று காண்போம் உன்னை!
நீராய், நெருப்பாய், நிலமாய், காற்றாய், விண்ணாய்,
ஐம்பூதங்களாய் நாம் ஆகும்வரை
நீயாய் நாம் வாழ்ந்திருக்க
எமக்கு அருள்தருவாய் தாயே!
பெய்யெனப்பெய்யும் மழையாய் வாழ்ந்த
உன் காலடிக்கு இந்நூலை கண்ணீர் படையலாக்
குகின்றோம்.

நீங்காத நினைவுடன்

**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



மண்ணில்

**16.11.1924**

விண்ணில்

**02.11.2011**

யாழ்ப்பாணம் நெடுந்தீவு பெருக்கடிப் பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் உருத்திரபுரம் சக்திபுரத்தை வாழ்விடமாகவும் தற்காலிகமாக இல.677, செல்வாநகரில் வசித்தவருமாகிய

## அமரர்.

# திருவாட்டி நாகமுத்து வைத்திலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பஞ்சபுராணம்

## தேவாரம்

வண்டார் குழ லரிவையொடு
பிரியா வகை பாகம்
பெண்டான் மிக வானான்பிறைச்
சென்னிப் பெரு மானூர்
தண்டா மரை மலராளுறை
தவளந் நெடு மாடம்
விண்டாங்குவ போலு மிகு
வேணுபுர மதுவே.

## திருவாசகம்

உடையாள் உன்தன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்பதனால் அடியேன் - உன்
அடியார் நடுவுள் இருக்கும் அருளைப்
புரியாய் பொன்னம் பலத்தெம்
முடியா முதலே என்கருத்து
முடியும் வண்ணம் முன்னின்றே.

## திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக் கண்ணுடைய தோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் மற்புதக் கூத்தா
அம்பொன் செய் அம்பலத் தரசே
ஏறணி கொடி யெம் மீசனே உன்னைத்
தொண்டனே னிசையுமா றிசையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப் பொருள்
    சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ் சில
    தேவர் சிறு நெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரள்
    மேரு விடங்கன் விடைப்பாகன்
பல்லாண்டெனும் பதங்கடந் தானுக்கே
    பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

உலகெலாம் உணர்ந் தோதற் கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகிற் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமற் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் பிறமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேச
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்.

*திருச்சிற்றம்பலம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினத்தார் பாடல்கள்

1. பிறக்கும் பொழுது கொண்டு வந்ததில்லை பிறந்து மண்மேல்
இறக்கும்பொழுது கொண்டு போவதில்லை இடைநடுவில்
குறிக்கும் இச்செல்வஞ் சிவன் தந்ததென்று கொடுக்கறியா(து)
இறக்கும் குலாமருக்கு என் சொல்லுவேன் கச்சியேகம்பனே

2. ஓயாமல் பொய் சொல்வார் நல்லோரை நிந்திப்பார்
உற்றுப்பெற்ற
தாயாரை வைவார் கதி ஆயிரஞ் செய்வார் சாத்திரங்கள்
ஆயார் பிறர்க்குபகாரஞ் செய்யார் தமையண்டினர்க் கொள்ளும்
ஈயார் இருந்தென்ன போயென்னே கச்சிகம்பனே

3. சொல்லாமல் கொன்றதைத்தின்னாமல் சூத்திரங்கோள்களவு
கல்லாமல் கைத்தவரோடு இணங்காமல் கனவிலும் பொய்
சொல்லாமல் சொற்களைக் கேளாமல் தோகையர் மாயையிலே
சொல்லாமல் செல்வந்தருவாய் சிதம்பர தேசிகனே

4. முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும் முடிவிலொரு
பிடிசாம்பராய் வெந்து மண்ணாவதுங் கண்டு பின்னும் இந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பதெல்லால்
பொன்னின் அம்பலவன்
அடிசார்ந்த நாம் உய்யவேண்டுமன்றே அறிவாரில்லையே

5. பிறவாதிருக்க வரம்தரல் வேண்டும் பிறந்து விட்டால்
இறவாதிருக்க மருந்துண்டு காண் இது எப்படியோ
அறமார் புகழ்வதில்லை அம்பலவாணர் அடிக்கமலம்
மறவாதிருமணமே அது காண்நல் மருந்துனக்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. ஐயும் தொடர்ந்து விழியுஞ்செருகி அறிவழிந்து
மெய்யும் பொய்யாகி விடுகின்ற போதொன்றும்
வேண்டுவன் யான்
செய்யுந் திருவொற்றியூர் உடையீர் திருநீறுமிட்டுக்
கையுந் தொழப்பண்ணி ஐந்தெழுத்தோதவும் கற்பியுமே

7. பொன்னால் பிரயோசனம் பொன்படைத்தாரங்குண்டு
பொன்படைத்தோன்
தன்னால் பிரயோசனம் பொன்னுக்கங்கேதுண்டு
அத்தன்மையைப்போல்
உன்னால் பிரயோசனம் வேணதெல்லா் உண்டு உன்னைப்
பணியும்
என்னால் பிரயோசனம் ஏதுண்டு காளத்தி யீச்சரனே

8. வருந்தேன் பிறந்தும் இறந்தும் மயங்கும் புலன்வழிப் போய்ப்
பொருந்தேன் நரகில் புகுகின்றிலேன் புகழ்வாரிடத்தில்
இருந்தேன் இனியவர் கூட்டம் விடேன் இயல் அஞ்செழுத்தாம்
அரும்தேன் அருந்துவன் நின் அருளால் கியலாயத்தானே

7. கண்ணுண்டு காணக் கருத்துண்டு நோக்கம் கசிந்துருகிப்
பண்ணுண்டு பாடச்செவியுண்டு கேட்கப் பல்பச்சிலையால்
எண்ணுண்டு சாத்த எதிர்நிற்க இருக்கையிலே
மண்ணுண்டு போகுதையோ கெடுவீர் இந்தமானுடமே

10. மாடுண்டு கன்றுண்டு மக்களுண்டு என்று மகிழ்வதெல்லாம்
கேடுண்டு எனும்படி கேட்டுவிட்டோம் இனிக்கேள்மனமே
'ஓடுண்டு கந்தையுண்டுள்ளே எழுத்தைந்தும் ஓதவுண்டு
தோடுண்ட கண்டனடியார் நமக்குத் துணையுமண்டே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாட்டி நாகமுத்து வைத்திலிங்கம்

அவர்களின்

## ஊர் சிறப்பும் வாழ்க்கை வரலாறும்

இயக்க இனத்தலைவனும், தொல்தமிழனும், யாழ்மீட்டலில் வல்லவனும், அறுபத்துநான்கு கலைகளில் மிகச்சிறந்த பத்துக்கலைகளில் வல்லவனும் (வாலறிவன்), சிவ பற்றாளனுமான இராவணன் ஆண்ட **இலங்காபுரி (மேகலை நகரங்களில் ஒன்று)** அல்லது குமரி(இந்து)மாவாரியில் அமிழ்ந்துபோன குமரிக்கண்டத்தின் ஒரு எஞ்சிய பகுதியாகிய இன்றைய இலங்கையின் வடகடலெல்லையின் பாதுகாப்பு அரணாய் விளங்குவது தமிழன் கால்வாயில்(பாக்கு நீரிணை) வெள்ளிக்தடம்போல் நீட்டிநிமிர்ந்து மிதந்துகொண்டிருக்கும் நெடுந்தீவாகும்.இத்தீவவானது 2000 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாற்றுப் பெருமையும் கொண்டதாகும்.இன்றும் இவ்வரலாற்று எச்சங்களான வெடியரசன், மீகாமன் கோட்டைகள் இடிந்து அழிந்த நிலையில் காணக்கூடியதாக உள்ளன.இத்தீவை மேழிக்(கலப்பை)கொடி கொண்டு வெடியரசன் ஆட்சி செய்ததாகவும்,இவனிடமிருந்த மாணிக்கக் கற்களைச் சூறையாட மாநாயக்கனாகிய கண்ணகியின் தந்தை மீகாமனென்பானை சிறிய கப்பற்படையுடன் நெடுந்தீவிற்கு அனுப்பியதாகவும், சண்டையில் வெடியரசன் தோற்க அவன்தம்பியான வீரநாராயணன் மீகாமனைத் தடுத்து நிறுத்தி சிறையிட்டதாகவும் ,பின் சமாதானம் ஆகி மாணிக்கக் கற்களை மீகாமன் எடுத்துச்செல்ல அனுமதித்ததாகவும் சிலப்பதிகார வழிநூலாகிய **கண்ணகி வழக்குரை கதை** கூறுகின்றதாம். வேறு சில சிலப்பதிகார வழி நூல்களும் ஏழ்கடலென்னும் சொற்பதத்தைப் பயன்படுத்துவதாலும் கண்ணகியின் சிலம்புடன் நெடுந்தீவு தொடர்புபட்டதாய் இருக்கலாமென கூறப்படுகின்றது. அத்தோடு சோழர்காலத்தில் சில சிலாசனங்கள் (கல்வெட்டுக்கள்) இங்கிருந்து எடுத்துச் செல்லப் பெற்றதாகவும் கூறப்பெறுகிறது. யாழ் தீபகற்பத்தின் பனை வளத்தின் அரைப்பங்கு இங்கு காணப்படுகிறது. அமிழ்ந்து போன குமரிக்கண்டத்துடன் கூடிய 49 நாடுகளில் **ஏழ் சிறு பனை.** நாடுகளின் எஞ்சிய பகுதியாகவும் இது இருக்கலாமென ஆய்வாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுவர். நெடுந்தீவில் பல இலைவகை, கிழங்குவகை மூலிகைகள் காணப்படுவதாலும் **இலை மூலிகை** எனும் சொல்லே **இலெமூரியா** (இலை + மூலிகை - இலை மூலி - இலைமூரி - இலெமூரி - இலெமூரியா) என மருவியும் இருக்கலாம் என்பர் சிலர். குமரிக் கண்டம் என்னும் பெயரும் குமரிச்செடி (குமரிக்கற்றாளை சோற்றுக்கற்றாளை) **குமரிக் கற்றாளை** எனும் பெயரால் அழைக்கப்பெறுவதாலும், **பனங்காணி முனையிலிருந்து மாவிலித்துறைவரை** குமரிக்கற்றாளை காணப்படுவதாலும் நெடுந்தீவு குமரிக்கண்டத்தின் ஒரு பகுதியாகவும் இருக்கலாமெனவும் நூலியலாளர்கள் கருதுகின்றனர் (ஆய்விற்குரியது).

இத்தனை இயற்கை வரலாற்றுச் சிறப்புக்களுடனும் குமரி(இந்து)மா வாரியின் 100 விழுக்காடு தமிழர்களின் வாழ்விடமான **தமிழன் கால்வாயில் (பாக்கு நீரிணை)** ஒரு முதன்மையான இடத்தில் நெடுந்தீவு அமைந்திருப்பதால் இதன் இயற்கைச் சமநிலையைக் கெடுத்து உல்லாசப்பயணிகளை உள்வாங்கவும், கடற்படைததளம் அமைக்கவும்,பெரும்பான்மையினத்தவர்களை கொண்டுவந்து குடியேற்றவும் திரை மறைவில் அலுவல்கள் நடைபெறுவதாக உறுதிப்படுத்தப்படாத செய்திகள் கூறுகின்றன. இத்தீவிற்கு **பசுந்தீவென்றும் ஆ(பசு)த் தீவென்றும் பருத்தித் தீவென்றும், கோரைத் தீவென்றும், மூலிகை தீவென்றும், குதிரைத் தீவென்றும்** பலவாறு பெயரிட்டழைப்பர். ஒல்லாந்தர் இத்தீவில் காலடி வைத்தபோது இத்தீவு பச்சைப் பசேல் எனக் காட்சியளித்ததால் தம் நாட்டுப் புல்வெளிபோன்ற தோற்றத்தைக் கண்டு நம் தீவிற்கும் தம் நாட்டுப் பெயரான "டெல்ப்ற்"(delft) என்னும் பெயரைச் சூட்டினர்.

பால் வளமும், பனை,தெங்கு வளமும் கடல் வளமும் (மீன் உப்பு) இவை எல்லாவற்றிற்கும் இமையம் போல் சுண்ணெய்(பெற்றோலியம்) வளமும் கொண்ட வளம்மிக்க நாடாம் நெடுந்தீவில் தமிழரின் முழுமுதற் கடவுளர்களான முருகன், ஐயனார், கொத்தியார் (கொற்றவை) அம்மன் போன்ற தெய்வங்கள் கோவில் கொண்டுள்ளனர். கி.பி 13ஆம் நூற்றாண்டின் பின் இங்கு வருகை தந்த வைதீக ஆரிய மதத்தினரால் பிள்ளையார் கோவில்களும், கி.பி.15ஆம் நூற்றாண்டில் வருகை தந்த போர்த்துக்கேயரால் மாதா,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அமரர்.வைத்திலிங்கம் நாகமுத்து இணையரின் இளமை, முதுமைத் தோற்றங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சல்லேரான்சியார், தொம்மையப்பர், சவேரியார் கோவில்களும் ஒல்லாந்தர் வருகைக்குப் பின் ஒரு புரட்டசுதாந்து கிறீத்து கோவிலுமாக பல்சமயத்தவர் வாழும் ஒரு வாழ்விடமாக இது மாற்றப்பட்டுள்ளது.

உலகத்தமிழர்களை எல்லாம் தட்டியெழுப்பி பல்மொழி மொழியியலாளர்களை எல்லாம் தமதாக்கி **உலகத் தமிழ் ஆராச்சி மாநாட்டிற்கு** வித்திட்டு தமிழன்னைக்குப் பெருமைதந்த **தனிநாயக அடிகளாரையும்** இலங்கையின் **முதற்பெண் ஊரக(கிராம)த் தலைவர் திருவாட்டி பொன்னம்மா** நாகேந்திரமவர்களையும், **கிளிநொச்சி யெயந்திநகர் மண்ணிலே** காந்தீயம் பேணி,வள்ளலார் அடியொற்றி பல்மத இறை (சன்மார்க்க சர்வசக்தி) பீடத்துடன் கூடிய **குருகுல மமைத்து,** வள்ளுவத்தைப்போற்றி பொருளாதார வலுக்குன்றிய பிள்ளைகளுக்கு கல்வியூட்டி வாழ்வழித்த **அப்பு கதிரவேலு** அவர்களைப்போன்ற **இராமநாதமுதலி (கறுவராம உடையார்)பேரர்** வழிவந்தோரையும், சிதறுண்டு, சின்னாபின்னப்பட்டு, அல்லலுறும் தமிழ் மக்களுக்காய் ஓயாது தொண்டு பல ஆற்றியும், குரல்கொடுக்கும் **மன்னார் ஆயர் இராயப்பு யோசப்** அடிகளாரையும், நெடுந்தீவு மக்களுக்காய் கவிமழை பொழிந்த **கவிமாமணி ஞானப்பிரகாசர், நடனமேதை வேலானந்தன், கவிஞரும் நடிகருமான யெயபாலன்** அவர்களையும், **நெடுந்தீவின் வரலாற்றை** ஓரளவேனும் தந்த **சிவநாயகமூர்த்தி** அவர்களையும் இவர் போன்ற பல கல்வியாளர்களையும், சான்றோர்களையும் உருவாக்கிய இப்புகழ் பூத்தமண்ணிலே தனிநாயக முதலி மரபில் வந்த,நெடுந்தீவின் நடுவகமாகவுள்ள **பெருக்கடிப்பிள்ளையார் கோவிலைக் கட்டுவித்தவரும் அதன் உரிமையாளருமான இராமநாதமுதலி அல்லது கறுவராம உடையாரின்** பேரரிருவரில் (சின்னத்தம்பி, விசுவநாதர்) ஒருவரான **சின்னத்தம்பியின் மகன் சோமநாதரின்** மகள்களான **வள்ளியம்மை,** நாகமுத்து, ஐயாத்தை என்பாரில் மூத்தவரான வள்ளியம்மையை சரவணையூரில் பெண்கொண்ட **கந்தப்பமுதலியின்** இரட்டைப் பிலள்ளைகளில் (தனுக்கோடி, ஐயாத்தை) ஒருவரான **தனுக்கோடி சின்னாச்சி இணையரின்** பிள்ளைகளான **சின்னத்தம்பி,** இராமநாதர், சேதுப்பிள்ளை (தண்டல்காரன் வளவு) ஆகியோரில் மூத்தவரான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னத்தம்பிக்கு மணம்முடித்து வைத்தனர் பெற்றோர். இவருக்கு சரவணையூரிலும், நெடுந்தீவிலும் பல காணிகள் இருந்ததால் சரவணையூர்க் காணிகளை தனது **சிறியதாயாரின்** (தாயின் தங்கை) **மகன் நாகேந்திரர்க்குக்** கையளித்து தன்னை நெடுந்தீவிலேயே நிலைப் படத்திக்கொண்டார். சின்னத்தம்பி வள்ளியம்மை இணையரின் இல்லறவாழ்வின் பெறுபேறாய் **வேலுப்பிள்ளை, அம்பலவாணரின் தாயார்(கரடி சின்னத்தம்பியின் துணைவி), கணபதிப்பிள்ளை,நாகமுத்து, சேதுப்பிள்ளை, சின்னாச்சி(டெய்சி),** சிறுவயதிலேயே அமரர்னளாகிவிட்ட இன்னும் மூவரையும் பெற்றெடுத்தனர். இவர்களின் நிலபுலங்கள் பெருக்கடிப்பிள்ளையார் கோவிலைச் சுற்றியும் இருந்தன. பிள்ளைகளும் திருமணப்பருவம் எய்தவே மூத்தவரான வேலுப்பிள்ளைக்கு (8ம் வாய்க்கால்) சிதம்பரியாரின் மூத்த மகள் கமலத்தையும், சேதுப் பிள்ளைக்கு அப்புக்குட்டி சரவணமுத்துவையும், சின்னாச்சி (டெய்சி)க்கு சின்னத்தம்பி அந்தோனிப்பிள்ளை அவர்களையும் மணம்முடித்து வைத்தனர். கணபதிப் பிள்ளையவர்கள் கடைசிவரை திருமணமாகா மலேயே தமது 84வது அகவையில் காலமானார்.

சோமநாதரின் உடன் பிறந்தவரான **இராமநாதரின்(பெத்தார்)** பிள்ளைகளான **டானியல் நாகலிங்கம்,** சுப்பிரமணியம்(குளிர்), வள்ளிப்பிள்ளை, இராமாயி ஆகியோரில் மூத்தவரான நாகலிங்கம் அவர்கள் இராமநாதமுதலியின் **உடன் பிறப்பு பசுபதிவழிவந்த சுட்டார் சட்டம்பி ஐயம்பிள்ளையின்** மூத்தமகள் **சூசின் பொன்னம்மாவைக்** கைபிடித்து மக்கள் **யோண் வைத்திலிங்கம்,யோர்ச் தம்பியையா, தருமலிங்கம், அன்னபூரணம், தங்கப்பிள்ளை** ஆகியோரைப் பெற்றெடுத்தனர். (பொன்னம்மா அவர்களின் உடன்பிறப்பான **தங்கம்மா** அவர்களின் **மகனே குருகுல அப்பு கதிரவேலு** ஆவார்.) **நாகலிங்கமவர்கள்** பெருக்கடிப் பிள்ளையார் கோவில் உரிமைக்கும் தேர்த்திருவிழாவிற்கும் உரித்தானவராகவும், யாழ்.தென்னிந்திய திருச்சபையின் நெடுந்தீவு உறுப்பினராகவும் இருந்து சமயப்பன்மையியம் பேணி,காந்தீயம் போற்றி, ஊரில் போட்டியற்ற தலைமைகள் உருவாகவும் பாடுபட்டார். இலங்கைக்கு முதன்முறையாக எலிசபேத் மாராணி வந்தபோதும் நெடுந்தீவின் பிரதிநிதியாகக் கலந்துகொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வானொலியிலும் நெடுந்தீவின் அபிவிருத்தி, மந்தைவளர்ப்பு, பனை உற்பத்தி பொருட்கள் சந்தைப்படுத்தல் போன்ற பலதலைப்புக்களில் சொற்பொழிவுகள் ஆற்றியவர். **தனது இல்லத்தில்** 1947ஆம் ஆண்டிலிருந்து **நூலகமமைத்து** (கட்சன் வாசிகசாலை) பிள்ளைகளின் கல்விக்கு வித்திட்டார். இலங்கைப்பிரதமராயிருந்த **கொத்தலாவலை** அவர்கள் நெடுந்தீவு வந்தபோது அவர்சென்ற குதிரை வண்டிக்குப் பக்கத்திலேயே காந்திக்குல்லாவுடன் தானும் ஓடிக்கொண்டு **வண் கை இங்கிலீசு கூல்** என்று திரும்பத்திரும்ப உரத்து சத்தமிட்டு சென்றதாக நேரில் கண்டவர் கூறுவர்.அத்தோடு நின்றுவிடாது தனது, தனது உறவுகளின் காணிகளைப் பெற்றுவழங்கி ஓர் **உயர் நிலைப்பள்ளியும் (மகாவித்தியாலயம்), அதற்கான ஒருவிளையாட்டுத் திடலும் நெடுந்தீவின் நடுவில் அமைய வித்திட்டவருமாவார்.** சமுகநன்மை நோக்கி பல துண்டு வெளியீடுகளையும் வெளியிட்டு தனது சமுகத்தன்னார்வப் பணியை வெளிப்படுத்தினார். இவற்றையெல்லாம் மற்றவர் செய்யும் **தெருத்தேங்காய் வழிப்பிள்ளையார்** என்றில்லாமல் தன் வருமானத்திலேயே செலவிட்டுச் செயல்பட்டார்.

இவர்களின் மூத்தமகனான **வைத்திலிங்கமவர்கள்** சிறந்த விளையாட்டு வீரராகவும் படித்தவராகவும் காணப்பட்டார். மேற்குறித்த அரத்த உறவுக்காரரான **சின்னத்தம்பி வள்ளியம்மையின் மகள் அமரர் நாகமுத்து** அவர்களை இவருக்கு **1943இல் மணம்முடித்து வைத்தனர்** பெற்றோர். இல்லறவாழ்வில் இனிதே இணைந்திருந்த இவர்கள் **கனகராசா, மகேந்திரராசா, குகராசா, அரியராசா, பரமராசா, கோணேசுவரி, சாந்தீசுவரி** ஆகியோரைப் பெற்றெடுத்து தாலாட்டிச் சீராட்டிக் கல்வியூட்டி வளர்த்தனர். இக்காலப்பகுதியில், தந்தையவர்களுக்கு அரச மருத்துவ சேவையில் தொழில் கிடைத்தது. மூத்தவரான கனகராசா 8வயதில் திடீரெனக் காலமானதால் அன்னையவர்களால் இதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. **அன்பும், அறனும், பண்பும், ஒழுக்கமும் தாம்பேணி** பிள்ளைகளையும் அவ்வழி ஒழுக வாஞ்சித்துச் செயலாற்றினர். பிள்ளைகளின் இளமைக்கல்வி நெடு.அமெரிக்கன் மிசன் பள்ளியிலும், பின் நெடு.மத்தி உயர்நிலைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளியிலும் தொடர்ந்தனர். குடும்பத்தலைவர் தொழில் காரணமாக திருகோணமலை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, நெடுந்தீவென இடமாற்றம் பெற்றுச்சென்றபோது அன்னையவர்களும் பிள்ளைகளுடன் அவரைப் பின்தொடர்ந்தார்.

1960இல் துணைவருக்கு கிளிநொச்சி அரச மருத்துவமனைக்கு இடமாற்றம் கிடைத்ததால் அன்னையும் பிள்ளைகளுடன் கிளிநொச்சிக்குப் புலம்பெயர்ந்தனர். **கிளிநொச்சிப் பைந்திரம்** இலங்கையின் வடமாநிலத்தின் நெற்களஞ்சியமெனப் போற்றப்படும் வயலும்,வயல்சார்ந்த **மருதநிலமாயும்,** கடலும், கடல் சார்ந்த **நெய்தல் நிலமாயும்,** பல்வளங்களையும் கொண்ட பொன்கொழிக்கும் புவியாகும்.இந்நிலத்தில் அரச குடியேற்றங்கள் (1936,1949,....) உருவாவதற்கு முன்னரே யாழ்ப்பாணத்தை ஆண்ட **சிங்கையாரியனால்** வேளாண்மை செய்வதற்கென **குலசேகரமுதலி, இராசஅம்பலமுதலி, வீரவேலாயுதமுதலி, குணநாயகமுதலி, நல்லமாப்பானமுதலி, மழுவராயமுதலி, குந்தமாமுதலி, சரபமுழுவமுதலி, நிற்சிங்கராயமுதலி, நிற்கனகராசமுதலி, மரகதவல்லி (பெண்),** ஆகியோருடன் உடன்பிறந்த **மூத்தவரான தனிநாயகமுதலி** தலைமுறையினர்க்கு வழங்கப் பெற்றதாகவும், இதற்கான ஆவணப்பதிவுகள் யாழ்ப்பாணச் செயலகத்தில் காணப்பட்டதாகவும் முன்னாள் **காணி அலுவலரும் ஈழமுரசு செய்தித் தாளின் ஆசிரியருமான அமரர்.அமிர்தலிங்கமவர்கள்** கூறுவார் (ஆய்வுக்குரியது).

அன்னையின் தந்தையார் சின்னத்தம்பி அவர்களுக்கும் உருத்திரபுரம் 8ஆம் வாய்க்காலில் குடியேற்றக்காணி கிடைத்து அவருடன் மகன் வேலுப்பிள்ளையின் குடும்பமும்,மகள் டெய்சியின் குடும்பமும் வாழ்ந்து வந்தனர். இக்காலகட்டத்தில் அன்னாரின் பிள்ளைகளான குகராசா, அரியராசா, பரமராசா குருகுலத்தில் சேர்ந்து இன்றைய இந்துக்கல்லூரியில் கல்வியைத்தொடர்ந்தனர். மீண்டும் துணைவருக்குக்கிடைத்த இடமாற்றத்தால் நெடுந்தீவு செல்ல வெண்டியதாயிற்று. ஆனாலும் இவருக்குத் **தமிழரின் முழு முதற்கடவுளும் உலக முதற்தமிழ்ச் சங்கத் தலைவனும், உலகநாகரிகத்தின் முன்னோடிகளான நாகர்களின் தலைவனுமான**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்னையார், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகளுடன்



அமரர.நா.வை.அரியராசா



அன்னையார், மூத்த பூட்டப்பிள்ளையுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிவனை சிவநகரிலும்**, தன்ஆற்றல்களையெல்லாம் **அம்மனாக்கிப் பெறிக்கடவையிலும்,** இலங்கையில் தமிழரின் தொன்மையை வெளிப்படுத்துகின்ற அகழ்வுச் சான்றுகளை உள்ளடக்கிய உருத்திரபுரத்தின் சக்திபுரத்தில் (எள்ளுக்காடு)காணி கிடைத்திருந்ததால், துணைவரின் தொழில் ஓய்வுக்குப்பின் 1972களிலிருந்து சக்திபுரத்தை தமது வாழ்விடமாக மாற்றிக்கொண்டனர்

1960ம் ஆண்டு பாட்டன் டானியல் நாகலிங்கத்தின் பெரும் முயற்சியால் இருப்பவரில் மூத்தவரான **மகேந்திரராசாவுக்கு** வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரயில் படிக்க இடம் கிடைத்தது. அங்கு 1967வரை கல்விகற்று மொறட்டுவை பல்கலைக்கழகம் சென்று தனது மின்பொறியியற் கல்வியைப் படித்து பட்டயம் பெற்றார். 1971ம் ஆண்டு இலங்கை மின்சார சபையில் மின் கண்காணிப்பாளராக (அத்தியட்சகராக) தொழில் பெற்று நோட்டன் பிறிச், அம்பாந்தோட்டை, களணி போன்ற இடங்களில் தொழில் பார்த்தார். இந்நிலையில் **இராமநாதமுதலி உடன்பிறப்புக்களான பசுபதி, ஐயம்பெருமாள் மரபுவழியினரும் கிளி.யெயந்திநகரை வாழ்விடமாகக்** கொண்டவர்களுமான **வேலுப்பிள்ளை சின்னத்தங்கச்சி இணையரின்** ஒரே மகளான **புனிதலீலாவதியை** இவருக்குத் திருமணம் செய்துவைத்தனர் பெற்றோர். இல்லறத்தில் இணைந்திருந்த இவர்களுக்கு **டானியல் புனிதராசா, டேவிட் மதன்ராசா, யோண் தமிழ்ராசா சுவேந்தினி, யெயந்தி** ஆகியயோர் பிறந்தனர்.இவர் யாழ்ப்பாணம் மாற்றலாகி வந்து நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு போன்ற இடங்களிலிருந்த மருத்துவ மனைகளின் மின்வழங்கலை சீர்செய்தார். இங்கிருந்த காலத்தில் தனிநாயக அடிகளார் சிக்கனக் கடன் கூட்டுறவுச் சங்கத்தின் பொருளாளராகவுமிருந்து சமுகத் தொண்டாற்றினார். இங்கிருந்து மாற்றலாகி தனது வாழ்விடமான கிளிநொச்சிக்குச் சென்று அங்கு பல புதிய மின்னிணைப்பு, ஆக்கவேலைகளும் (குறிப்பாக திருவையாறு 2ம் பகுதி,உருத்திரபுரம், கோணாவில்) நடைபெறவும், சீரானமின் வழங்கலையும் நேர்மை, கடமையுணர்வோடு செயற்படுத்தினார். 7ஆண்டுச் சேவையின் பின் மாற்றலாகி யாழ்ப்பாணம் குடும்பத்துடன் சென்றார். கிளி.மத்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரியில் படித்த பிள்ளைகள் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிலும், சுண்டிக்குளி மகளீர் கல்லூரியிலும் தம் கல்வியைத் தொடர்ந்தனர். இக்காலகட்டத்தில்

*தந்தை மகற் ஆற்றும் நன்றி அவையத்து*
*முந்தியிருப்பச் செயல் ( கு.67)*

இல்லறவாழ்வில் இணைந்து இன்புற்று மக்கள் அறுவரைப் பெற்று (அமரர்கள் தவிர்த்து) வளர்த்து கல்வியூட்டி, அவையத்தில் முந்தியிருக்க இணைந்து செயல்செய்த **அன்னையின் துணைவர் வைத்திலிங்கமவர்கள் 1994கார்த்திகைத் திங்கள் 3ம் நாள் காலமானார்.** இவ்விழப்பு இவர்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது.

யாழில் இடம்பெற்றபோரின் காரணமாய் தேடியசெல்வங்கள் யாவற்றையும் இழந்து 1995 இல் இடம்பெயர்ந்து கிளிநொச்சி வந்தனர் மகேந்திரராசாவின் குடும்பத்தினர். மீண்டும் கிளிநொச்சியில் ஏற்பட்ட போர்ச்சூழலால் அன்னையும் பிள்ளைகளான குகராசா, கோணேசுவரி, சாந்தீசுவரி ஆகியோரின் குடும்பங்கள் ச்கந்தபுரம் இடம்பெயர, மகேந்திரராசாவின் குடும்பம் வவுனியாவிற்கு இடம்பெயர்ந்தது. தொழில் இடமாற்றமும் வவுனியாவிற்குக் கிடைத்ததால் பிள்ளைகளின் கல்வி வவு.மத்திய கல்லூரியிலும், இறம்பைக்குளம் பெண்கள் கல்லூரியிலும் தொடர்ந்தது. நாட்டில் தொடர்ந்த தமிழறக்கெதிரான கெடுபிடிகளால் யாழ்.பல்கலைக் கழகத்தில் பட்டப்படிப்பிற்கான இடங்கள் கிடைத்தும் அதைத்தொடரமுடியாமல் போனதால் இவரின் பிள்ளைகள் உலகப்பல்கலைக் கழகங்களான ரூசிய, இலண்டன், அவுசுத்திரேலிய, இந்திய (தமிழ்நாடு, கர்நாடகம்) போன்ற இடங்களில் கற்று உயர்பட்டங்களைப் பெற்றுக்கொண்டனர்.இவர் பணத்திற்காக, பதவிக்காக, சலுகைகளுக்காக தன்மானத்தை இளக்காதவராவே காணப்பட்டார். தனது 55வது அகவையில் தான்பார்த்த தகுதிவாய்ந்த அரச பதவியையே விடுத்து ஓய்வுபெற்றார். தமிழ்படித்தார். தனது, மனைவி பிள்ளைகளின் பெயர்களை **குமரிவேந்தன், நல்லினி, நல்லரசன், எழிலரசன், தமிழரசன், வேந்தினி, வெற்றிச்செல்வி** என **தூயதமிழ்ப்** பெயர்களாக மாற்றிக்கொண்டனர். தமிழர் தம் மொழி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பண்பாடு, ஒழுக்கம் என்பனவற்றில் தடம்புரளக்கூடாது** என்பதே அவரின் தணியாத தாகமாகும். இதன்வெளிப்பாடே இப் **பெய்யெனப் பெய்யும் மழை. இந்நூல் காலத்தின் தேவையறிந்து தமிழினத்திற்குக் கொடுக்கப்பட்ட ஒரு ஔடதம்(மருந்து) என்பார் முனைவர். திரு.செ.திருநாவுக்கரசு அவர்கள்.** அத்தோடு கிளி.மாவ.தமிழ்ச் சங்கச் செயலாளராக 3ஆண்டுகளிருந்து தற்போதைய அதன் செயற்பாட்டில் மனங்கொள்ளாததால் அதிலிருந்தும் தன்னை விடுவித்துக்கொண்டார்.

அன்னையவர்களின் மூத்தபேரரான நல்லரசன் (டானியல்) மருத்துவராக வவுனியா அரச மருத்துவமனையில் தொழில் பார்த்தபோது அவர்களுடனேயே வாழ்ந்திருந்தார். பேரப்பிள்ளைகள்மேல் தணியாத பற்றையும் பாசத்தையும் சொரிந்தார். மூத்தமகனின் பிள்ளைகள் திருமணப்பருவமெய்தவே அவர்களுக்கு தான் பிறந்த மண்ணில் தன்னுறவில் திருமணம் செய்ய நாட்டம்கொண்டு வெளிப்படுத்தினார். அதன்படியே நால்வருக்கும் உறவிலேயேமணம் செய்து வைத்தனர் பெற்றோர். மருத்துவர் **நல்லரசன்** (டானியல்) திரு.திருவாட்டி யெயராசா நீர்மலாதேவி இணையரின் மூத்தமகள் **நிரஞ்சினியையும், எழிலரசன்(டேவிட்)** திரு.திருவாட்டி பாலசந்திரன் இசைஞானவதியின் மூத்தமகள் **யனனியையும், தமிழரசன்** (யோண்) திரு.திருவாட்டி கணேசமூர்த்தி சிவபாக்கியம் இணையரின் கடைசிமகள் **கவிதாவையும், வேந்தினி** (சுவேந்தினி) திரு.திருவாட்டி தர்மலிங்கம் இராசேசுவரி இணையரின் மகன் **நிரஞ்சலனையும், வெற்றிச்செல்வி**(யெயந்தி) திரு.திருவாட்டி கதிரவேலு குணலட்சுமி இணையரின் கடைசி மகன் **விக்னேசுவரன்** ஆகியோரின் திருமண இணைவுகளில் அன்னாரும் கலந்து வாழ்த்தினார். இவரது பேரப்பிள்ளைகளுக்கு திருமண இணைப்பின் மூலமாக இணைந்த பேரர்களும் அவுசுதிரேலிய, கனடிய, இலங்கை, சுவிற்சலாந்து பல்கலைக்கழகங்களில் உயர்க்லவி கற்று உயர்பட்டம் பெற்றவர்களே. இவர்களூடாக தளிரினி, இலக்கியன், விசாகன், கவின் ஆகிய பூட்டப்பிள்ளைகளையும் கண்டு இன்புற்று மகிழ்ந்திருந்தார்.

இரண்டாவது மகனான **குகராசா (மணி அண்ணர்)** அன்னையாருடனேயே என்றும் வாழ்ந்திருந்தார் என்றுமே அவரைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணாவிட்டால் பொறுத்திருக்கமாட்டார். தானெங்கு தூரப்பயணம் போனாலும் தன்னுடனேயே கூட்டிச் செல்வார். அவரும் அன்னையைவிட்டு அடிபிரியார். இவர் தனது கல்வியை நெடுந்தீவு உயர்நிலைப் பள்ளியிலும், கிளிநொச்சி இந்துக் கல்லூரியிலும் கற்றவர். இவர் தனது 16 ஆவது அகவையிலிருந்தே முற்போக்கு சிந்தனையுடன் தன்னையொரு பொதுவுடமை நிகரமைக்கொள்கையாளராக வளர்த்துக் கொண்டார். அன்று இவருடன் சண்முகநாதன், லோகநாதன், தர்மலிங்கம் போன்றவர்கள் இணைந்து செயல்பட்டு நெடுந்தீவு மக்கள் நடுவில் நன்மதிப்பைப் பெற்றார். எந்த அரசியலாளர் பக்கமும் சாராது நடுநிலையோடு நீதி, நியாயம், சமத்துவத்திற்காக குரல் கொடுத்தார். அத்தோடு இவர் க.பொ.த. வில் உயர்பெறுபேற்றை பெற்றிருந்தும் தனக்கென்று ஒரு அரசதொழிலைப் பெற யாரின்பின் போகவும் இசையவில்லை. 1970 களில் நெடுந்தீவில் மக்கள் விழாவாக, உழவர் விழாவாக, தைப் பொங்கலை கொண்டாடினார். இடையிடையே கிளிநொச்சி, பரந்தன், விசுவமடு போன்ற இடங்களிலும் சில முற்போக்கு சிந்தனையாளர்களோடு இணைந்து செயற்பட்டார். இன்றுவரை தன்னை மக்கள் சேவைக்கென்றே ஆக்கிக்கொண்டு வாழ்கின்றார். இவர் திருமணத்தை பல ஆண்டுகள் தள்ளிப்போட்டே வந்தார். ஆனாலும் அன்னை தந்தையின் மகிழ்வுக்காகவும், உடன்பிறந்தாரின் வற்புறுத்தலாலும் திரு.திருவாட்டி **இராமநாதர் சின்னம்மா இணையரின்** கடைசிமகள் **லலிதாதேவி (கால்நடை அபிவிருத்திப் போதனாசிரியர்)** யை மணம்முடித்து இல்லற வாழ்வில் இணைந்து கொண்டார். இதன் பயனாக **ஓவியா, நித்திலன்** ஆகிய பேரக்குழந்தைகளைக் கண்டு அகமகிழ்தார் அன்னை நாகமுத்து அவர்கள்.

இவர் பல அரசசார்பற்ற நிறுவனங்களில் திட்ட பொறுப்பாளராக, ஆளுநர் சபை உறுப்பினராக இருந்து செயற்பட்டவர். தொடர்ந்து 8 ஆண்டுகள் கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கத்தின் தலைவராகவும், கூட்டுறவுச் சமாசங்களின் தலைவராகவும் இருந்து சிறந்த ஒரு கூட்டுறவாளராகவும், நிர்வாகியாகவும் தன்னை உயர்த்திக் கொண்டவர்.

கட்சி அரசியலில் என்றுமே நாட்டம் கொண்டவர் அல்ல. ஆனால் தற்போதைய சூழ்நிலையில் கரைச்சி பிரதேச மக்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னால் (ஊழலற்ற) ஏதாவது செய்ய முடியுமா? செய்ய வேண்டுமென்ற நோக்கோடு இன்று கரைச்சி பிரதேச மக்களால் தேர்தல்மூலம் தெரிவாகி பிரதேச சபையின் தலைவராக செயற்படுகின்றார்.இவரின் மகள் ஓவியா தற்போது வவு.இறம்பைக்.மகளீர் கல்லூரியில் க.பொ.த.உயர்தர வகுப்பில் படித்துக்கொண்டிருக்கிறார், மகன் நித்திலன் வவு.மத்திய கல்லூரியில் கல்வி கற்று தற்போது கிளி.இந்துக் கல்லூரியல் க.பொ.த.உயர்தர வகுப்பிலுள்ளார்.

மூன்றாவது மகன் **அமரர் அரியராசா** அவர்கள் கல்விக் கேள்விகளில் மிகச் சிறப்புற்று ஒரு கல்வியாளராய் குறுகிய காலத்திலேயே தான் பார்த்த அரச தொழிலில் படிப்படியாக உயர்ந்து **தொலைத்தொடர்பு பரிசோதகராக** உயர்வு பெற்றார். தொடக்கக் கல்வியை நெடுந்தீவிலும், கிளிநொச்சி இந்துக் கல்லூரிலும் (கதிரவேல் அப்பு குருகுலத்தில் தங்கி) பின் யாழ் தொழில் நுட்பக் கல்லூரியிலும் படித்து தன்தகுதியை உயர்த்தியவர். இவர் ஒரு சிறந்த நகைச்சுவையாளராகவும் , நடிகராகவும், ,வில்லுப்பாட்டுக்காரராகவும் தன்னை வளர்த்துக் கொண்டார். இவர் யாழ்ப்பாணம், கொழும்பு போன்ற இடங்களில் தொழில்பார்த்து **1983ல் கிளிநொச்சிக்கு மாற்றலாகி வந்தார். அந்த ஆண்டு ஆடி 25ம் நாள் நடந்த இனப்படுகொலையில் இவரும் இராணுவத்தின் துமிக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் பரந்தன் சந்தியிலேயே உயிரிழந்தார்.** இவ்விழப்பு அன்று கிளிநொச்சியில் ஒரு பேரிழப்பாக கொள்ளப்பட்டது. இவரின் இறப்பானது குடும்பத்தை மிகவாகபாதிப்படைய வைத்தது. அன்னையவர்கள் இறக்கும் வரை இவர் நினைவாகவே கண்ணீரில் தன்னை உருக்கிக் கொண்டார். இன்னும் அவரின் உடன் பிறப்புக்களின் நெஞ்சிலிருந்தும் அத்துயர் நீங்கவில்லை.

வைத்திலிங்கம் நாகமுத்து இணையரின் **இளைய மகன் பரமராசா.** இவரும் நெடுந்தீவில் தன் தொடக்கக் கல்வியையும், பின் கிளிநொச்சியிலும் தொடர்ந்தார். தன் கல்வி முடித்து கிளிநொச்சி மாவட்ட பால் சபையில் அதன் முகாமையாளராகப் பணிபுரிந்தார். பின் இவர் மாங்குளம், வவுனியாவிலும் தொழில் செய்தார். இவரும் திருமணப் பருவமெய்தவே திரு.திருவாட்டி **பரமானந்தம் பராசக்தி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இணையரின் மகள் பவானியை(முன்பள்ளி ஆசிரியை)** மணம் முடித்து வைத்தனர் பெற்றோர். நாட்டில் தொடர்ந்த தமிழர் எதிர் இனவன்செயல்களுக்கு முகங்கொடுக்க இயலாது இங்கிருந்து புலம்பெயர்ந்து குடும்பத்துடன் யேர்மனி சென்றனர். இவர்களுக்கு இங்கே **யனார்த்தனன், சயா ஆகிய இரு குழந்தைகளும்** யேர்மனி சென்ற பின் **யொனதனுமாக மூன்று பிள்ளைகள்** கிடைத்தனர். இவர்கள் இங்கு வரமுடியாமல் இருந்தமையால் அடிக்கடி அன்னையவர்கள் அவர்களுடன் தொலைபேசி ஊடாக பேசி தன் அன்பை மகன் மருமகள் பேரப்பிள்ளைகளுடன் பகிர்ந்து கொண்டார். தற்பொழுது இவர்கள் கனடா சென்று பேரப்பிள்ளைகளும் கனேடியப் பல்கலைக்கழகங்களில் உயர்கல்வி கற்பதறிந்து மகிழ்வுற்றிருந்தார். அண்மையில் மகன் வந்து அன்னையவர்களை பார்த்துச் சென்றதானது இருவருக்கும் பெரும் மனநிறைவை தந்தது. இவரும் கனடாவில் தமிழர் நல ஒன்றியங்களில் இணைந்து பொதுத் தொண்டாற்றுகிறார். **அன்னையவர்கள் ஒன்றே குலம் ஒருவனே தேவன்** எனும் கொள்கையுடையவராய் வாழ்ந்து காட்டினார். திருக்கேதீசுவரம், திருக்கோணேசுவரம், கதிர்காமம், செல்வச்சந்நிதி, நல்லூர், மாவிட்டபுரம் போன்ற உள்ளூர்க் கோவில்களையும் தமிழ்நாட்டில் தஞ்சைபெருவுடையார் கோவில், தில்லைப் பொன்னம்பலம் (சிதம்பரம்), மதுரைமீனாட்சி, திருவானைகால், திருவரங்கம், திருபரக்குன்றம், அன்னை வேளாங்கன்னிபோன்ற பல கோவில்களையும் தரிசித்து மனநிறைவு பெற்றார்.

அன்னையின் பல ஆண்டு வேண்டுதலின் பின் **முதல் பெண்குழந்தையான கோணேசுவரி** 1961இல் பிறந்தார். இது அன்னை தந்தை அவர்களுக்கு பெருமகிழ்வைத் தந்தது. இவரும் தனது கல்விமுடித்து முன்பள்ளி ஆசிரியையாக சிறிது காலம் தொண்டாற்றினார். இவரும் திருமணப் பருவமடையவே திரு.திருவாட்டி **கந்தையா பொன்னம்மா இணையரின் இரண்டாவது மகன் புவனேந்திரராசா(சிவா) (விளையாட்டு அலுவலர்)வுக்கு திருமணம்** செய்து வைத்து பெற்றோர் இன்புற்றனர். திருவாட்டி **பொன்னம்மா** அவர்கள் **சோமநாதர், இராமநாதர் அவர்களின் உடன்பிறப்பான இளையதம்பியின் பேத்தியாவார்.** இவர்களின் இல்லறத்தின் பயனாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இரதீசியா, இரதிபன், இரதிபா, சங்கீர்த்தனா** ஆகிய பேரக் குழந்தைகளைக்கண்டு பூரிப்படைந்திருந்தார். நாம் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைப்பதுபோல் 2009இல் புலிகள் அரச இராணுவப் போரின்போது எதை எதிரபார்க்கவில்லையோ அது நடந்துவிட்டது. அதாவது புவனேந்திரராசா அவர்கள் இராணுவத்தின் செல்வீச்சுக்கு இலக்காகி இறந்துவிட்டதுதான். இது இக்குடும்பத்திற்கு பாரிய பின்னடைவையும் ஈடுஇணையற்ற பேரிழப்பையும் ஏற்படுத்தி என்றும் மீளாத்துயரையும் ஏற்படுத்திவிட்டது. தனக்காக வாழாமல் உறவுக்காக, நண்பர்களுக்காக, அறிந்தவர் அறியாதவர் என்றில்லாமல் பலருக்காகவும் வாழ்ந்தவர். இவரது இடைவெளி என்றுமே நிரப்பமுடியாதது. எதற்கும் பின் நிற்கார். அன்பிற்காக, பாசத்திற்காக வாழ்ந்தவர். இவரது இழப்பை அன்னையவர்கள் உணர்ந்து கொள்ள முடியாத நிலையிலிருந்ததால் சிறிது காலம் வாழ்ந்திருந்தார் எனக் கூறவேண்டும். இல்லையேல் செய்தி அறிந்து அன்றே........... அன்னையின் இறப்பின்போது அவரில்லாத இடைவெளி பெரிதும் உணரப்பட்டது. இவரின் இழப்பு அவரின் குடும்பத்திற்கு ஏற்பட்ட பேரிழப்பே. யாரால் ஈடுசெய்ய முடியும். இதுதான் விதியாம். முற்பிறப்புப் பழியாம் சிலர் கூறுகின்றார்கள்(மூளைச் சலனத்தின் வெளிப்பாடுதான்) பிள்ளைகள் தமது கல்வியை உருத்திரபுரம் உயர்நிலைப்பள்ளியிலும் பின் கிளி.மத்திய கல்லூரியிலும் தொடர்ந்தனர்.தற்பொழுது இந்தியாவில் தமது கல்வியைத் தொடர்கின்றனர்.

**கடைசி மகள் சாந்தீசுவரி** தனது கல்வியை முடித்து திருமணப் பருவமடைந்து திரு.திருவாட்டி **பசுத்தியாம்பிள்ளை மேரிப்பிள்ளையின் நடுவிலி மகனான சிறில்(பூக்கண்டு)** அவர்களுக்கு மணமுடித்து வைத்தனர் பெற்றோர். இவரும் வெளிநாடு சென்று வந்து தன்னிடத்திலேயே சொந்தமாயும் தனித்தும் செயல்பட ஒரு வாணிப அங்காடி அமைத்து திறம்படச் செயற்பட்டு வருகிறார். கடந்த ஒன்றரை ஆண்டுகளாக சிறில் சாந்தீசுவரி இணையரே அன்னையவர்களை தெய்வமாய்ப் போற்றி அரவணைத்துப் பிள்ளைபோல பார்த்தெடுத்தனர். இவர்களின் பிள்ளைகளாகிய **கெல்சிகா, கமில்ட்டன்** ஆகிய பேரக்குழந்தைகளுடனும் தன் அன்பைச் சொரிந்து வாழ்ந்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னையவர்கள். கெல்சிகா கிளி.புனித திரேசா பெண்கள் கல்லூரியிலும், கமில்டன் கிளி. இந்துக்கல்லூரியிலும் க.பொ.த. உயர்தர வகுப்பில் படித்துக்கொண்டிருக்கின்றனர்.

அமரர்கள் நாகமுத்து வைத்திலிங்கம் இணையர் வள்ளுவன் வாக்கின் நின்றும் சிறிதும் வழுவாது ஐம்புலத்தார் ஓம்பி, அன்பும், அறனும் பெருக்கி, அவற்றைப் பண்பாகவும் பயனாகவும் செய்து, ஒழுக்கமுடன் குடிமைபேணி, தற்காத்து தகைசார்ந்த சொற்காத்து, மனைமாட்சி அழியாமல், இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பற்பொருட்டு என்னும் உண்மை உணர்ந்து பெற்றோர் மகற்காற்று நன்றி அவையத்துள் முன்தியிருப்பச் செயல் செய்து, இக்குடும்பத்தின் பெருந்தக்கயாவுள என்று சமூகம் போற்றும்படி வாழ்வாங்கு வாழ்ந்து இயற்கையெய்தினர். கடைசிநாட்களில் அன்னை நோயுற்றிருந்தபோது உறவுகள், நண்பர்கள், அயலவர் போன்ற பலரும் உள்ளூர், வெளியூர், வெளிநாடுகளிலிருந்து வந்து நலம் பார்த்து சென்றதானது அவர் வாழ்ந்த வாழ்வின் நகல் தெறிப்பாயிருந்தது (பிரதிபலிப்பாய்). அவரின் பிள்ளைகளுக்கும் இது முழு மனநிறைவைக் கொடுத்தது. கிட்டத்தட்ட 87 ஆண்டுகள் எம்மோடு கூடிக்குலாவிய எம் குலவிளக்கு 02.11.2011 அன்று உடலால் அணைந்துவிட்டாலும் அவரது உயிர் பிள்ளைகளாய், பேரப்பிள்ளைகளாய், பீட்டப் பிள்ளைகளாய் வாழ்கிறது. வாழும்

***தக்கார் தகவிலார் என்பது அவரது***
***எச்சத்தால் காணப்படும் - கு 114***

**அமைதி! அமைதி! அமைதி.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெய்யெனப் பெய்யும்
# மழை

ஆக்கம்:

**மின்பொறி.நா.வை.குமரிவேந்தன்**

(மகேந்திரராசா)

(கிளி.மாவட்ட தமிழ்ச் சங்க முன்னாள் செயலாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெய்யெனப் பெய்யும் மழை

ஒருவனுக்கு ஒருத்தி /ஒருத்திக்கு ஒருவன் என்பதே வள்ளுவன் காட்டும் இல்லறமென்னும் நல்லறநெறியாகும். ஒருத்திக்கு ஒருவன்தானென்று இல்லறத்தாள் கொண்டொழுகுவது போல் இவ்வாழ்வானும் நெறிப்பட்டு வாழ்ந்தால் அவன் பெருமையடைவான் என்று செப்புகின்றார் செந்நாப்போதர். பிறன்மனை நோக்காதவனை பேராண்மை மிக்கவனென்றும் கூறுவார். பெண்களின் பரத்தைத் தன்மைக்குக் காரணமான **ஆணின் மேலாண்மையை ஒழிக்க "வரைவில் மகளிர்"** என்னும் அதிகாரத்தையும் பெண்ணின் நிறையைப் பாழடிக்கும் பிறன் மனைவியுடன் கூட விளையும் ஆணைத்தடுத்து நிறுத்த **"பிறனில் விளையாமை"** என்னும் அதிகாரத்தையும் யாத்தார். இவை ஆணுக்குக் கற்பு அல்லது நிறை வேண்டும் என்னும் கோட்பாட்டை உறுதிசெய்வதாகும் இல்லறத்தின் சிறப்பு நோக்கியே இல்வாழ்க்கைக்குரிய கடமை, பண்புகளை இருபது அதிகாரங்களிலும் (5 முதல் 24 வரை) களவு வழி வந்த கற்பு வாழ்வை 25 அதிகாரங்களிலும் (109 முதல் 132 வரை) புரிய வைத்தார். ஆனால் துறவறத்திற்கு 13 அதிகாரங்களிலேயே அதன் பண்பு நலங்களைத் துலங்க வைத்துள்ளார். **துறவு தம்மை மேம்படுத்துவதற்கானதாகவும** ஆனால் **இல்லறமோ மற்றவர்களையும் (தென்புலத்தார், தெய்வம் விருந்து துறவு) தன்னையும் ஓம்புதலையே தலையாய கடமையாய்க் கொண்டு இயம்புவதால் துறவைவிட இல்லறமே மேம்பட்டதென்பர். மநுதர்மம், சுருமிதி, பகவத்கீதை பெண்ணை இழிந்தவளாக தீமையின் கொள்கலனாகவே கூறும் (மநு9.சு. 17)** ஆனால் வள்ளுவரோ இல்லறத்தார் (தலைவன் தலைவி) ஒத்த உணர்வினராய் அன்பினால் ஒருவருக்கொருவர் உறுதுணையாய் இருக்கவேண்டும் என்பதற்காகவே "வாழ்க்கைத்துணை நலம்" என்னும் தலைப்பில் ஒரு அதிகாரம் வைத்தார். இல்லாள் என்றோ மனையாள் என்றோ தலைப்பிடவில்லை. கணவன் மனைவிக்கு இடையிலான அன்பிலான வாழ்வு கொடுவெயில் காணப்படும். பாலைவனத்தில் நட்ட மரம் துளிர்ப்பதற்கு ஒப்பானது என்பர் (குறள் 78). இன்பத்துப் பாலிலும் ஒருதலைக் காதலாகிய கைக்கிளையையோ, தம்மை விரும்பாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவரோடு வலிந்து உறவு கொள்ளும் பொருந்தாததாகிய பெருந்திணை பற்றியோ கூறவில்லை. அன்பும் அறனும் உடைய ஐந்திணை இல்லறத்தையே போற்றினர். மநு 5 சு. 148 கூறப்படுவதாகிய பெண் இளமைப் பருவத்தில் தந்தை பாதுகாப்பிலும் திருமணத்தின் பின் கணவன் பாதுகாப்பிலும், கணவன் இல்லாதவிடத்து பிள்ளைகளின் பாதுகாப்பில் இருக்க வேண்டியவளாகக் குறிப்பிடுகிறதாம். இது பெண்ணை வலிமையற்ற ஒரு பலவீனமானவளாக, தன்னைத்தான் பாதுகாக்க முடியாதவள் என்பதாகவே படம்பிடித்துக் காட்டுகின்றது. ஆனால் வள்ளுவரோ

"பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மை உண்டாகப் பெறின் (குறள் 54 )

என்றும்

"சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறை காக்கும் காப்பே தலை (குறள் 57)

என்றும் கூறுவது அவள் கற்பென்னும் திண்மையுடையவள் என்பதாலும் **உடலையார் பாதுகாத்தாலும் அவளின் உள்ளத்தை அவளே தன்னைத்தான் பாதுகாக்கிறாள்** என்பதை நன்கு உணர்த்துகிறார். எனவேதான் அவள் எல்லா வகையிலும் ஆணுக்குச் சமமானவள் என்றார். இவற்றை எல்லாம் கருத்திற் கொண்டே

**தெய்வம் தொழாள் கொழுநன் தொழுதெழுவாள்**
**பெய்யெனப் பெய்யும் மழை** (குறள் 58)

என்று கூறி அவளை இமயத்தின் உச்சிக்கே ஏற்றுகின்றார். ஒரு கதாசிரியன் அல்லது நாடகாசிரியன் அல்லது ஒரு கவிஞன் தனது ஆக்கங்களை உருவாக்குகின்ற பொழுது கற்பனையுடன் கூடிய உயர்வு நவிற்சியை வெளிப்படுத்தும் வகையிலேயே படைத்தளிக்கின்றான். **உள்ளதைச் சிறப்பித்து உயர்வு நவிற்சியினை அளவாகக் காட்டுவது உண்மைக் கற்பனையென்றும் இல்லாததைப் புனைந்து அளவுக்கு அதிகமாக உயர்வு நவிற்சியினை வெளிப்படுத்துவது வெறுங் கற்பனை என்று கூறப்படுகின்றது.** திருக்குறளில் படைப்புக் கற்பனை, கருத்து விளக்கக் கற்பனை, இயைபுக் கற்பனை, ஏன் வெறுங் கற்பனை போன்றவற்றைப் பரக்கக் காணலாம் பகுத்தறிதலுக்கான ஊட்டவலுவைத் தருவதே உலகப் பொதுமறை திருக்குறளின் உட்ப் பொருளாகும். படைப்பாளன் தன் அனுபவத்தில் கண்ட பண்புகளை ஒருசேர இணைத்து ஓர் புதிய நிறைவான வடிவத்தைப் படைத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டுகின்றான்.

"நல்லார் ஒருவருளரேல் அவர் பொருட்டு
எல்லோர்க்கும் பெய்யும் மழை"

என்றும் **மூதுரையில் ஔவையாரும்**

"அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும்படை (கு: 555)

என்று செந்நாப்போதர் வள்ளுவரும் கூறுவார். நல்லவர் ஒருவரால் மழைபெய்யும் என்பதும், அரச கொடுங்கோண்மையால் மக்கள் அழுங் கண்ணீர் அந்நாட்டுச் செல்வத்தை அழிக்கும் என்பதும் மேற்குறித்த ஔவை, திருவள்ளுவர் கூற்றுக்களின் பொருளாம். முன்னது **பண்பட்ட ஒழுக்க சீலர்களை உருவாக்கவும் பின்னது அரசு செங்கோன்மையுடன் மக்களை ஆழவேண்டும்** என்பவற்றையும் வலியுறுத்துவதாய் உள்ளது. இது வெறும் கற்பனையின் சிறப்பு உயர்வு நவிற்சியின் வெளிப்பாடாகும். இதுபோன்றே

தெய்வம் தொழாள்......... பெய்யெனப் பெய்யும் மழை

என்னும் குறளும் ஒருத்திக்கு ஒருவன்தான் என்றும் தன் கணவனைத் தெய்வமாய்த் தொழுபவள் (இதையே கற்பென்று சிலர் விளங்கிக் கொண்டு) வானைப் பார்த்து மழையைப் பெய்யென்று சொன்னால் மழை பெய்யும் என்று பொருள் கண்டனர் பல உரையாசிரியர்கள். இது வெறும் படைப்புக் கற்பனையின் வெளிப்பாடே என்பதைச் சிந்தித்துப் பார்க்க முடியவில்லை அவர்களால்

இயற்கைக்கு மாறான, இயல்புக்கு எதிரான, நடைமுறைக்கு ஏற்பற்ற (சாத்தியமற்ற) ஒன்றை உண்மையின் உறைவிடம். மெய்யியலின் தந்தை, அறிவின் பகுத்தறிவின் பகலவன், அறிவியலின் (விஞ்ஞானம்) ஆசான், மனவளமும், மூளை வளமும் ஒருசேர அமையப்பெற்ற பல்கலை விற்பன்னர் "உலகம் உய்ய அறநெறி காட்டிய இமையம் 2000 ஆண்டுகளுக்கு முன்னரே பெண்ணிழிவை ஏற்காத பெண்ணியவாதி, தெய்வப்பிறவி, எப்படித் தன் கணவனைத் தொழுதெழுபவள் மழையைப் பெய்யென்றால் பெய்யும் என்று சொல்லியிருக்க முடியும். தொழுதெழுபவள் என்னும் கூற்றை பெண்ணினம் ஆணுக்கு என்றென்றும் அடிமை என்பதை உறுதிப்படுத்தக் கூறியிருக்க முடியுமா? அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழுது எழுதல்தான் அவள் ஒழுக்கம் அல்லது பண்பாடு என்று நினைத்துக் குறளை யார்த்தாரா? அல்லது இயற்கை (ஊழ்) என்றொன்றில்லை. அது அவள் சொல்லுக்குக் கட்டுப்படுமென்று இயற்கையோடு முரண்படுகிறாரா? இது மந்திரத்தால் மாங்காய் விழுவது போலல்லவா உள்ளது. சிலவேளை "காகம் இருக்கப் பனம்பழம் விழுந்த" கூற்றுக்கு ஒப்பாய் இருக்கலாம். ஆனால் எப்பொழுதும், என்னேரத்திலும் நிகழும் ஒரு நிகழ்வல்லவே. எப்பொருள் யார்யார்க் கேட்பினும் (எத்தன்மைத் தாயினும்) அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு. (239, 355) என்றும்

எண்பொருள வாகச் செலச் சொல்லி தான்வாய்
நுண்பொருள் காண்பதறிவு (குறள் 424) என்றும்

சொல்பவற்றையும் கேட்பவற்றையும் அளவையியல் (எண்/தர்க்கம்) அடிப்படையில் ஐயந்திரிபுக்கு இடமின்றி மெய்ப்பொருளையும் நுண்பொருளையும் காணுங்கள் என்று செப்புகின்றார். அதைவிடுத்துக் கற்புடைப் பெண் அதாவது கணவனைத் தொழுதெழும் பெண் கூறினால் மழை பெய்யும் என்று வள்ளுவர் கூறுகிறார் என்று உரையாசிரியர் கூறுவாரேயானால் அது வள்ளுவன் தவறல்ல.. உரைகண்டோர் தவறேயாம். சங்க காலப் பாடலான "கலித்தொகை" வான்தரு கற்பினள்) என்றும் "அருமழை தரவேண்டின் தருகிக்கும் பெருமையள்" என்றும் கூறுகிறது. இது வெறும் படைப்புக் கற்பனையின் சிறப்பு உயர்வுநவிற்சியினை வெளிப்படுத்தும் கூற்றே. இது அவளின் ஒழுக்கப் பண்பை மேம்படுத்தவும் அவளைப் பெருமைப்படுத்தவும் கூறப்பட்ட கூற்றுக்களாகும்.

உலகம் உய்ய புல், பூண்டு, செடி, கொடி, மரம், புள், ஊர்வன, விலங்கு, மாந்தன் வரை உயிர்வாழ உயிரிகளுக்கெல்லாம் உணவாய், ஊட்டமாய், இருப்பது மழையே. அதாவது நீரே. உலகின் வாழ்வும் வளமும் நீர்தான். அதே போலத்தான் ஓர் இல்லக் கிளத்தியும் செயற்படுகின்றாள். நீரின் சிறப்பைப் பலவாறாகத் திருக்குறளின் வான்சிறப்பு என்னும் அதிகாரத்தில் சிறப்புறக் கூறுகின்றார் வள்ளுவர் . எமது உடலின் பெரும் பகுதி அதாவது 60 விழுக்காடு நீரினாலானது, மிகுதியும் நீருடன் கலந்து வரும் கனிமங்கள் தான்.

வானின்றுலகம் வழங்கி வருதலால் தான் அமிழ்தம்
என்றுணரற்பாற்று (கு:11) என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே போலத்தான் இல்லாளும் விரும்பிய விரும்பியபடி வாழ்வு நலங்களைத் தருவதால் இவள் அமுதத்தால் ஆக்கப் பெற்றவள். இவள் தன் கணவனுக்கு என்றென்றும் அமிழ்தமாக வாழ்கின்றாள். அது மட்டுமா? அவள்தரும் குழந்தைகள் அமிழ்தம் அவர்களுக்கு. ஊட்டும் பால் அமிழ்தம், அப்பிள்ளைகளின் பேச்சு அமிழ்தம், அவர் பிசைந்த உணவு அமிழ்தம், **அவள் ஓர் அமிழ்தச் சுரப்பாக தன் வாழ்நாள் முழுவதும் மிளிர்கிறாள் என்றால் அது மிகையில்லை. இங்கு அவள் தன் கணவனுக்கும் பிள்ளைகளுக்கும் அவளைச் சுற்றியிருக்கும் குமுகாயத்திற்குப் பெய்யெனப் பெய்யும் மழையாக அதாவது அவர்கள் விரும்பியபோது விரும்பியதைக் கொடுப்பவளாக;** பருவமழையை எதிர்பார்த்து உழவன் நிலத்தைப் பண்படுத்தி வித்திடுகின்றான். அவன் எதிர் பார்த்தபடி மழையும் பெய்கின்றது. அதேபோலத்தான் ஒரு மனையாளும் பெய்யெனப் பெய்யும் மழையாகிறாள். அவள்தான் அந்த மழை. ஆலம் வித்து மிகவும் சின்னஞ்சிறியது ஆனால் அது முளைத்து வளரவிட்டால் அது அந்த ஊரையே அடக்கும் அளவிற்குப் பரந்து படர்கிறது. பெண் என்பவள் திருமணமென்னும் இணைப்பின் மூலம் பரந்து படர்ந்து அந்த ஊரையே தன்னுள் அடக்குகின்றாள். அடக்கத்தின் ஆற்லாக விரிகின்றாள்.

கடலன்ன காமம் உழந்தும் **மடலேறாப்**
பெண்ணிற் பெருந்தக்கதில் (குறள் 1137)

என்பார் **"நாணுத்துறவில்"**. சொல்ல முடியாத அளவிற்கு கடல் போல் காதல் துயர் வந்தாலும் நாணமின்றி (வெட்கம்) மடலேறும் ஆண்களைப் போல் தம் காதலை வெளிப்படுத்தாத அடக்கத்தின், பொறுமையின் வாழ்விடமான பெண் போன்ற பிறப்பு வேறில்லை என்பதே இதன் கருத்தாகும். [தொல்காலத்தில் ஆண்கள் தம் காதலை வெளிப்படுத்தக் கருக்குமட்டைகளால் (பனைவடலிமட்டை) செய்யப்பட்ட கன்றின் (**மடல் ஏறு**) மேல் ஏறி கருக்குவெட்டி அவர்களின் உடலில் இருந்து அரத்தம் வடிய நாணமின்றி ஊர்வலம் வருவார்களாம்.] **பொறுமை அடக்கத்துடன் மாத்திரமல்லாது அவள் வாழும் குமுகாயத்தின் சுமைதாங்கியாகத் தனது நலன்களை உதறி வாழ்கிறாள்.** இதை வள்ளுவர் பெருமான் மிகக் கச்சிதமாகவும் அழகாகவும் இல்வாழ்க்கையில் தொடங்கி புகழ் வரையுள்ள அதிகாரங்களில் படம்பிடித்துக் காட்டுகின்றார். இல் என்பதும் மனையாளை, இல்லாளை, இல்லக் கிளத்தியைக் குறிக்கும். எனவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்வாழ்க்கை என்பது இல்லவள் வாழ்வு, இல்லவளுடன் வாழ்வு என்று பொருள்படும். இதிலும் கூட வள்ளுவன் பெண்ணுக்கே முதலிடம் வழங்குகின்றார். இல்வாழ்வான் அதாவது இல்லவளுடன், மனையாளுடன் வாழும் ஒருவனால்தான் இல்லற வாழ்வை நல்லறமாக நடாத்தமுடியும் என்பதைச் சுட்டுகின்றார். வெளிச்சென்று பொருள் தேடலும், வேளாண்மை செய்தலுமே இல்லத் தலைவனின் செயற்பாடாகவுள்ளது. வீட்டின் பிற கடமைகளை அவனால் செய்யமுடிவதில்லை என்பதும், அதற்கான நேரமும் போதுமானதாக இருப்பதில்லை. எனவே இல்வாழ்க்கை கூறும் இயல்புடைய மூவராகிய தலைவன் தலைவியின் பெற்றோர், தம் பிள்ளைகள் தூய துறவியர் (துறந்தார்) இல்வாழும் உணவின்றி அல்லற்படுவோர் (துவ்வாதார்), தங்க இடம் உணவு என்பன அற்றோருக்கும் (இறந்தார்), தெளிந்த அறிவினர் (அறிவுடை சான்றோர் - தென்புலத்தார்), வாழ்வாங்கு வாழ்பவன் (தெய்வம்), நினையாவேளை வந்த விருந்தினர், உறவினர் (ஒக்கல்), தாம் ஆகியோரையும் வரவேற்றுப் பணி புரிதல் போன்றனவும் தன்னந்தனியாக சுமை எனக் கருதாது அன்பே உருவாய் அனைவரின் கடமைகளையும் **“முகந்திரிந்து நோக்காது”** செய்ய விளைபவள்தான் இந்தத் தற்காத்து தற்கொண்டான் பேணும் இல்லறத்தாள்.

இல்வாழ்வு என்பது ஒருவனுக்கு அல்லது ஒருத்திக்கு ஒருமுறைதான் வரும். அதுவும் இருவரின் இணைவு மூலமாகத்தான் வரும். கற்பு மணமானாலும் சரி, காதல் மணமானாலும் சரி, அல்லது களவு மணமாயினும் சரி; பெற்றோர்கள், காதலர் ஏன் இல்லற வாழ்வுக்கான பொருத்தப்பாடுகளைக் கவனத்தில் எடுப்பதில்லை. காய்கறியை வாங்கும்போதும், உடுபுடவையை வாங்கும் போதும், அரிசியைக் கிளைந்து உலையில் போடும் போதும், வாழ்வியல் பயிருடன் கூடி வளரும் களைகளை அப்புறப்படுத்தும்போதும் எவ்வளவு நுணுக்கமாகச் செயற்படுவார்கள், மணமக்கள் இணைப்பில் மட்டும் மந்தமாகவே உள்ளனர். ஆண் பெண் பற்றிய சரியான தகவல்களை அறிந்து கொள்ளாமல், தேவையற்ற மூடநம்பிக்கை வழி பற்றிய பொருத்தப் பாடுகளையும் அல்லது “கண்டதும் காதல்” என்னும் கோலத்தில் தேர்வுகளை நடத்துவதால் பலருக்கு இல்லற வாழ்வு நல்லற வாழ்வாக மிளிர்வதில்லை. ஒருவனுக்கு/ஒருத்திக்கு ஒரு துணை கிடைப்பதென்பது அவர்கள் இரட்டைக்கிளவி போல (சடசட, கல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல, சல சல, மட மட) பிரியா வாழ்வினராக நிழலிலும் நீங்காதவர்களாக ஓடு வண்டியில் பூட்டிய இரண்டு எருதுகள் போல மனையறம் தளம்பாமல் வாழ ஏதுவாகும். கணவன் மனைவியிடம் காணப்பெறும் ஒரு முகப்பட்ட உறுதி அவர்கள் வாழ்வை வளமாக்கும், பெருமையடையச் செய்யும். மனைவிக்குக் கற்பு என்பதைப் போலக் கணவனுக்கு நிறை என்பார் வள்ளுவர். கற்பு வேறு நிறை வேறு என்பதில்லை. இரண்டும் ஒன்றே இதுவே தமிழப் பண்பாடு.

ஒருமை மகளிரே போல பெருமையும்
தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு (குறள் 974)

**ஒருத்திக்கு ஒருவன் என்பதும் ஒருவனுக்கு ஒருத்தி என்பதும் தான் உயர்வு ஒழுக்கம்.** இக்குறளை வலுப்படுத்த புலவி நுணுக்கத்தில்

பெண்ணியலார் எல்லாரும் கண்ணின் பொதுவுண்பர்
நண்ணேன் பரத்த நின்மார்பு (குறள் 1311)

அதாவது பெண்ணியல் பற்றவர்கள் உன்னைத் தம் கண்ணால் பார்த்துத் தம்முட் கொள்வதால் உன் நிறைத் தன்மை (ஒருத்திக்கு ஒருவன்) மாசுபடுவதால் உன்னைச் சேரமாட்டேன் என்று ஊடல் கொண்டு காதலி கூறுவதாக இக்கூற்று அமைந்துள்ளதைக் காணலாம். கற்பு என்னும் சொல் பலவாறு ஆழப்பட்டது என்பதைத் தொல்காப்பியம் **முதற்கொண்டு இன்று வரை காணலாம். தொல்காப்பியம் "கற்பெனப்படுவது கரணமொடு புணர ....... என்றவாறாகவும் கற்பெனப்படுவது சொற்திறம்பாமை என்று ஒளவையாரும் கற்பென்னும் திண்மை என்று திருவள்ளுவரும் வரைவிலக்கணம் கூறுவர்.** ஆண், பெண் இணைப்பு (திருமணம்) ஒரு கரண (சடங்கு) முறையில் செய்யப்பட்டு நீவீர் இவ்வாறு ஒழுகி வாழவேண்டும் என்று அறிவுரை வாழ்த்துதலோடு முடிதலையே தொல்காப்பியம் கற்பென்று கூறும். ஒளவையோ கற்பை எந்த இடத்திலும் எந்த நிலையிலும் மாறுபடாமல் சொன்ன சொல்லில் உறுதியாய் நிற்றலையே குறிக்கின்றார். இதையே வள்ளுவரும் திண்மை என்றும் அதாவது உறுதியாய்ப் பலமாய் எதற்கும் முகங் கொடுக்கும் ஆயத்தமான தன்மையைக் குறித்தார். கல்வி, அறிவு என்பதும் கற்பு (கற்றல்)த் தான்.

பாண்டியன் நெடுஞ்செழியன் அவையிலே கோபக் கனல் கிளம்பப் புகுகின்றாள் கண்ணகி தனது மாணிக்கப் பரல் பதித்த ஒற்றைச் சிலம்புடன். கொலையுண்ட கணவன் கோவலன் கள்வன் அல்லன் என்று அவை நடுங்க அரற்றுகின்றாள். அத்தோடு நின்று விடவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவையிலே தன் கால்ச்சிலம்மை அடித்து உடைக்கின்றாள், மாணிக்கக் கற்கள் சிதறுகின்றன. மன்னன் திகைத்தான். தானே கள்வன் என்று ஏங்கி இருக்கையில் இருந்து வீழ்ந்து உயிர் விடுகிறான். இது யாரும் கண்ணகிக்குச் சொல்லிக் கொடுத்த கற்பா? இல்லை. இதுதான் வள்ளுவன் சொன்ன கற்பு. தானே தனக்குக் கற்பித்துக் கொண்ட கற்பு.

பெல்சியம் நாட்டுத் தலைநகர் புருக்சேல் எதிரி படைகள் சூழ்ந்து முற்றுமுழுதான முற்றுகைக்குள் கொண்டு வந்து விட்டன. எதிரிகள் படைத் தலைவன் சிந்தித்தான், முதியோர், பெண்கள், சிறுவர் ஏன் இம் முற்றுகையால் இறக்கத் துன்பமுற வேண்டும், எனவே முதியோரைப் பெண்களை தாம் சுமக்க முடிந்த சுமையோடு வெளியேறி எங்கு போகவேண்டுமென்றாலும் போகப் பணித்தான். பெண்டிர் மனதால் பேசினார். அடுத்தநாள் விடியற்காலை சுமக்கமுடியாத சுமைகளுடன் வெளியேறினார். இதைக் கண்டு திடுக்கிட்டான் படைத்தலைவன். செய்வதறியாது திகைத்தனர் போர் வீரர். இருந்தும் பெண்களின் துணிவு கண்டு பெருமைப்பட்டான். பகையிலும் பண்பு காத்தான், சொற்காத்தான், போகவிட்டுவிட்டான். பெண்கள் சுமந்தது என்ன தெரியுமா? தம் தம் கணவன்மாரை. எதிரி புகழும் அளவுக்குத் துணிந்த மங்கையரைப் புறக்கணிக்குமா தாய் நாடு இல்லை? ஆண்டுதோறும் தை மாதம் 19 ஆம் நாளை பெண்கள் தினமாகக் கொண்டாடுகிறதாம் இந்நிகழ்வை நினைவு கூர்ந்து. இது யார் சொல்லிக் கொடுத்த கற்பு? தாங்களாகவே கற்பித்துக் கொண்ட கற்பு. வள்ளுவன் போற்றிய, காட்டிய, சொன்ன கற்பாகும்.

தமிழர் பண்பாட்டிற் தொன்று தொட்டு ஒருத்திக்கு ஒருவன் (கற்பு)தான் என்பதாக வலியுறுத்தவும், அவள் ஒழுக்க நெறியில் நின்று தவறக் கூடாது என்பதற்காகவும், அவள் வாழ்வு இயற்கையையே மாற்றக் கூடிய பேற்றை பெற்றதென்று மேன்மைப்படுத்துவதன் மூலம் அவள் வழிதவறிடாமல் இல்லறத்தை நல்லறமாகச் செயற்படுத்த வகுக்கப்பட்டிருக்கின்றது. என்றே கொள்ள வேண்டியிருக்கின்றது. அந்நாட்களில் பரத்தையர், வரைவில் மகளிர், விலை மாதர், தேவடியாள், கணிகையர், போன்ற பல பிரிவுகள் குமுகாயத்தில் காணபட்டதால் **தமிழர் ஒழுக்கவியல் ஒருத்திக்கு ஒருவன்தான் என்பதற்கு கற்பு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது கற்பித்தபடி ஒழுகுதல் என்பதாக வழங்கப்பட்டிருந்த தெனவும் கொள்ளவும் இடமுண்டு. ஆனால் இல்லத் தலைவன் குடும்பத்தை விட்டுப் பொருள் தேடுதலால் விலகியிருக்க நேரிடுவதால் அவனுக்கு இந்நெறி அல்லது ஒழுக்காறு கட்டாயப்படுத்தப்படவில்லை போலும். இல்லாளே எல்லாக் காலங்களிலும் எல்லாமாக இருப்பதால், அவளை நம்பியே அவளைச் சுற்றிய குமுகாயம் (சமுதாயம்) இருப்பதால், அவளைப் பெருமைப்படுத்த வேண்டிய தேவையால் அவள் மழையைப் பெய்யென்றால் பெய்யும் என்று நம் முன்னோர் கொண்டிருக்கலாம். இன்று வரை தமிழர் வாழ்வில் இல்லறம் என்னும் மனையறம் மனையாளிலேயே தங்கியுள்ளது என்பது வெள்ளிடைமலை. பெற்றோர், பிள்ளைகள், அறவோர், துறவோர், விருந்தினர், சுற்றம்(ஒக்கல்), யாவருமே அவளைச் சுற்றியே வாழ்கின்றனர். இவர்களுக்கெல்லாம் ஏதோஒரு வழியில் வாழ்வளிக்கின்றாள் என்பதே உண்மை. இளங்கோவடிகளின் சிலப்பதிகாரத்தில் கூடக் கண்ணகி, மாதவியை விட்டு கோவலன் விலகி வ்நத போது அவனிடம் மனையறம் பற்றியே கூறுகிறாள். ''அறவோர்களித்தலும், அந்தணர் ஓம்பலும், துறவோர்க் கெதிர்த்தலும், விருந்தினர் எதிர்க் கொள்ளலும்'' என்றவாறாக கொலைக் கதையில் நயம்படக் கூறுவார். அத்தோடு ''இருமுது குரவர் ஏவலும் பிழைத்தேன்'' (இருவரின் பெற்றோருக்குச் செய்ய வேண்டிய கடைமையில் நின்று தவறினேன்) என்பதாகவும் ஒரு இல்லக் கிளத்தியின் உள்ளப் பண்புகளை வெளிக்கொணர்கின்றார். இளங்கோவடிகள் குடும்பத் தலைவன் (தொடர்ந்து) இல்லாதவிடத்தும் மனையறம் பேணமுடியாதென்பதையும் இக்கூற்றுக்களால் தெளிவுபடுத்துகின்றார்.

கி.மு 1800 களில் நாவலந்தேயமாம் இந்தியாவினுள் புகுந்த நாடோடிகளான வைதீக வேதவாரியர் தமிழரின் பண்பாட்டு, வழிபாட்டு, நடைமுறைகளைச் சீரழித்து, இழிவுப் பண்பாட்டையும், சிறுதெய்வ விலங்கு வழிபாடுகளையும், பல தொன்மங்களையும் (புராணம்) உட்புகுத்தினர். இது படையெடுப்பு மூலமாகவோ போர் மூலமாகவோ செயற்படுத்தப்படவில்லை. ''அடுத்துக் கெடுக்கும்'' கோட்பாட்டின் மூலமாகவும், உண்டவீட்டிற்கு இரண்டகம் செய்தலையே பிறவிக் குணமாக (ஆரியன் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிருப்பான்) கொண்டு தமிழனின் தொல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்களான அறிவியல் அணுவியல் வானியல் கட்டடக்கலை மெய்யியல் அதாவது சாங்கியம், யோகம், உலகாய்தம், ஆசீவகம் போன்றவற்றையும் இயலிசை நாடகங்களையும் மொழி பெயர்ப்புச் செய்த பின் மூல நூல்களை அழித்து விட்டனராம் (சென்னை பல்கலைக் கழக முன்னைநாள் பேராசிரியர் சூரிய நாராயண சாத்திரியின் கூற்று). இதில் ஐந்திரம், அளவையியல் (தர்க்வியல் - எண்ணியல்) இந்நூல்களும் அடங்கும். (இவை விரிக்க நீளும்) இங்கு மேற்குறித்த சில இழிவுப் பண்பாட்டுச் சீர்கேடுகளைக் குறிப்பிடவேண்டும். இல்லையேல் தமிழனின் பண்பாடு என்ன என்பதை தெரிந்து புரிந்து கொள்ள முடியாது. அந்தளவுக்குத் தமிழனின் மூளை மூளைச்சலவை செய்யப்பட்டும், தொடர்ந்து மெய்யியல் (கடவுள் நம்பிக்கை) என்னும் போர்வையில் இழிவுகள் விளம்பரப்படுத்திக் கொண்டும் இருப்பதால் சரிபிழை புரியாத அல்லது புரிந்து கொள்ள விருப்பமின்றி தன்னை இழிவு (சகதி) சேற்றில் புதைத்து வைத்துள்ளான். தொடக்கத்தில் மாந்தன் தன்னை உணர வெளிப்ப்ட்ட வேளை இயற்கை வழிபாடே அவனை ஆட்கொண்டது, இதை இளங்கோவடிகளின் சிலப்பதிகார பாயிரத்தில் காணலாம். (அதற்கு முன் கடவுள் என்னும் அடையாளப்படுத்தல் ஒன்றைத் தமிழன் கொண்டிருக்வில்லை என்றே கூறவேண்டும் கடவுள் என்னும் சொல் பயன்பாட்டில் கூட இருக்வில்லை என்பர் தமிழறிஞர்.)

தமிழ் முழுமுதற் கடவுளராக பின்னாளில் சிவன், முருகன், ஐயனார், கொற்றவை (காளி, மாரியம்மன்) போன்றோர் போற்றப்பட்டனர். இதில் முருகக் கடவுளுக்கு இருந்த மனைவி வள்ளியுடன், தெய்வயானையை (2ஆம் மனைவி) சேர்த்தது வைதீக ஆரியம். லீலைக் கண்ணனுக்கு (கீதாச்சாரக் கடவுள்) 16008 பேராம் மனைவியர். நாரதர் பெண்தேடி வீடு வீடாகச் சென்றாராம். எல்லாவீட்டிலுள்ள பெண்களுடனும் (பெண்ணிழிவு) லீலைக் கண்ணனைக் கண்டாராம் இதனால் மனமுடைந்த நாரதர் கண்ணனை நேரடியாகவே கேட்டாராம். "நான் பெண் தேடிச் சென்ற வீடுகளில் எல்லாம் நீயே இருக்கின்றாய்" .......... இதற்குக் கண்ணன் "நீயும் பெண்ணாக மாறிவிடு என்னை அடை" என்று கூறவும் நாரதர் பெண்ணாக மாறி லீலைக் கண்ணனுடன் கூடியே சமற்கிருதப் பெயர்தாங்கிய பிள்ளைகளைப் பெற்றனர். இந்தப் பிள்ளைகள் 60 பேரின் பெயரில்தான் 60 ஆண்டுச் சுழற்சிக்குப் பெயரிட்டுள்ளனர் வைதீகப் பிராமணர். மாபாரதம் கூறும் குந்திதேவி (பாண்டுவின் மனைவி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது பிள்ளைகள் (கர்ணன், தருமன், வீமன், அருச்சுணன், சத்துருக்கன், சகாதேவன்) அறுவரையும் வேறு யார் யாருக்கோ பெற்றதாகச் சொல்லப்படுகின்றது. அத்தோடு திரௌபவதி மேற்குறித்த ஐவருக்கும் மனைவி. இராமாயண தசரதர் பலரை மணந்திருந்ததாகவும், இராமன் போர் அறம் மீறிப் பலரைக் கொன்றதாகவும் (விரிக்க நீளும்) இவற்றை நுணுகி ஆராய்தல் புரியும். கடவுளுக்கே இரண்டு மூன்றிலிருந்து பதினாறாயிரம் வரையிலான மனைவியரும், கடவுளர் ஆண் பெண்ணாக மாறி கடவுளருடன் கலவி செய்து பல குழந்தைகளைப் பெறுவதும், ஒருத்திக்குப் பல கணவன்மாரைச் சேர்த்துப் பார்ப்பது போன்றனவும், வைதீகக் கடவுள் இந்திரன் மாறுவேடத்தில் கௌதம முனிவரின் மனைவி அகலிகையுடன் கூடியதால் இதையறிந்து கௌதமர் அகலிகையை கல்லாகச் சாபமிட்டதாகவும், இதை நினைவுகூறி; மணப்பெண்ணை இழிவுபடுத்திப் பயப்படுத்தவும் புரோகிதத் திருமணங்களில் "அம்மி மிதித்தல் நிகழ்வு நடத்தப் பெறுதலும், கடவுளின் பரீட்சிப்பினால் கணவனில்லாமல் பிள்ளை பெற்றதினைப் பெருமைப்படுத்த அருந்ததியை வானில் மின்னும் வெள்ளி (நட்சத்திரம்)மாக ஆக்கியதாக ஒரு தொன்மமும், வசிட்ட முனிவரின் நடத்தையில் அருந்ததி ஐயுற்றதால் வசிட்டர் அவளைச் சபித்து வானத்து வெள்ளியாக்கியதாக இன்னொரு தொன்மமும், வானத்தில் சென்ற கந்தர்வனின் அழகில் அருந்ததி மயங்கியதால் அவள் கணவன் துர்வாச முனிவர் அவளைத் தனது இளைய மகன் பரசுராமனைக் கொண்டு கொன்றதாகவும், பின் மகனின் வேண்டுதலுக்கமைய அவளை வானத்து வெள்ளி (நட்சத்திரம்) ஆக்கியதாகவும் பலவாறு தொன்மங்கள் (புராணங்கள்) கூறும். இந்த இழிவுகளுக்குள்ளான "அருந்ததி" தமிழனின் திருமணத்தில் மணமகளுக்கு நினைவுபடுத்தப்படுகின்றாள். அத்தோடு குருவாகிய வியாழனின் மனைவி தாரையைக் கட்டாயப்படுத்தி அவளுடன் கூடி சந்திரனுக்குப் பிறந்த பிள்ளைதான் புதன். இவனது பெயரையும் கிழமை நாள் ஒன்றுக்கு இட்டும், "இயற்பகை நாயனார் தனது மனைவியை சிவனடியார் வேடத்தில் வந்த ஒருவனுக்குப் புணரக் கொடுத்தும், அவனைத் தொந்தரவு செய்ய வந்த சுற்றத்தாரை வெட்டிக் கொன்று அவனைப் பாதுகாத்தும் விடுத்தாராம், அதேபோல நீலகண்ட நாயனார் இரண்டாவது மனைவியுடன் சேர்ந்திருப்பதைக் கண்ட முதல் மனைவியார் கோபமுற்று விலகியிருந்த வேளை பரம்பொருள் அவளது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபத்தைத் தணித்து நீலகண்டனோடு சேர்த்து வைத்ததும், போன்ற இன்னோரன்ன தொன்ம (புராண இழிவுகளை தமிழன் பண்பாடான ஒருத்திக்கு ஒருவன், / ஒருவனுக்கு ஒருத்தி என்னும் மேன்மை மிக்க ஒழுக்கத்தை பாழ்படுத்தும் நோக்கோடு வைதீக வேத அடிவருடிகள் செயற்படுத்தி வருகின்றனர். இவ்விழிவுகளையும் இவைபோன்ற இன்னோரன்ன குப்பை கூழங்களைத் தலைமேலும், தோள் மேலும் வைத்துக் காவடியாடுகின்றான் தமிழன். பழைய கற்காலமாகிய கி.மு 35000 தொடக்கம் கீ.மு 10000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழர்கள் மத்தியில் பெண் தெய்வப் போற்றுதல் இருந்திருக்க வேண்டும் என்கிறார். பி.ரி சீனிவாச ஐயங்கார் தனது "இந்தியாவிற் கற்காலம்" என்னும் நூலில். பெண் சிறப்புற்றிருக்கும் மக்களிடம்தான் பெண்தேவதை போற்றல் மிகுந்திருக்கும் என்பர். பழைய காலத்தில் "பழையோள்" வழிபாடு நடைபெற்றிருக்கின்றது "காளி பழையோள்" கொற்றவை (கொற்றி-கொத்தி)யின் பணிப்பெண்களாக அல்லது பகுதியாக ஆக்கப்பெற்றோரே என்று இராசமாணிக்கனார் தமது "தமிழக வரலாறு' என்னும் நூலில் கூறுவார். இந்தியாவினுள் வேத ஆரிய பிராமணர் வரவால் பெண் இழிவு படுத்தப்பட்டுத், தமிழப் பண்பாடு சிதைக்கப்பட்டுத், தமிழ்த் தெய்வங்கள் (சிவன் முருகன் கொற்றவை ஐயனார்) ஆரியச் சிறு தெய்வங்கள் உருத்திரன், பிரம்மா, விநாயகர்) போன்றோருடன் இணைத்து கடவுளரையும் கீழ்நிலைப் பண்பாட்டினராக்கி, மொழியையும் தீட்டு நீசமாக்கி, தமிழரையும் அரக்கர் தாசரென்றும் வர்ண ஆரியப் பகுப்பிலே கீழ்சாதி சூத்திரராக்கிய கால கட்டத்திலே வள்ளுவர் இளங்கோவடிகள் தோன்றினர். வள்ளுவரோ "யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்ற அடிப்படையில் தனது திருக்குறளை யாத்தார். ஆனால் இளங்கோவடிகளோ பிராமணியத்தால் இழிவுபடுத்தப் பெற்ற பெண்ணியத்தை உயர்த்த பெண்தெய்வ வழிபாட்டை மீண்டும் புதுப்பித்து உலகம் முழுவதும் ஏற்புடைய காப்பியமாகவும் பெண்தெய்வ வழிபாடு உலகம் முழுவதும் பரந்து படும்பொழுது பெண்ணிழிவு மறைந்து போகும் என்னும் வழுவிலா நோக்கோடும், தமிழின் மாண்புடைய பண்பாடு உலக உயர்வு உச்சி என்பதைத் தொட்டுக் காட்டவுமே சிலப்பதிகாரம் எழுதினார். மேற் குலகப்பாணியில் பெண் சமத்துவம் பற்றியும் பெண்ணடிமைத்தனம் பற்றியும் பல மேற்குலக அரச சார்பற்ற நிறுவனங்களில் பிதற்றல்களை கைக்கூலி வேண்டிக்கொண்டு எம்மவர்களும் பிதற்றுகிறார்கள். இந்த பிதற்றல்களால் ஏடுபட்ட சில பெண்களும் ஆண்களும் அடங்காப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடாரித்(காளி) தனமாக தாம் நினைப்பதை எல்லாம் சரி என்றும் பேசுவதும் சொல்வதும், சரியென்றும் கோலம்கொண்டு நிற்கின்றார்கள் இவர்கள் தம் பண்பாட்டை (ஒழுக்கநெறி) மறந்தவர்களாகப் பழிவாங்கும் உணர்வுகளோடு மனித நேயத்தைத் தூக்கிக் குப்பைக் கூடையில் போடுபவர்களாகவுமே மாறிவிடுகிறார்கள். தமிழ்ப் பண்பாடு பெண்ணை ஆணுக்குச் சமனாக வல்ல அதிலும் உயர் நிலையிலேயே வைத்துப் பார்க்கிறது. இது வைதீக விலங்கு வணக்கம் (பசு, குரங்கு, யானை), விலங்கு வாழ்வுக் கோட்பாடு போன்ற இழிவுச் சாக்கடையில் விழுந்தவர்களுக்குத்தான் தேவை. இது தமிழ்ப்பண்பாடு பேணும் ஆணுக்கோ பெண்ணுக்கோ வேண்டுவதில்லை. எனவே சமத்துவம் பற்றி பேசும் நிறுவனங்கள், அதாவது இவற்றைச் சாக்காக வைத்து பணம் புரட்டும் நிறுவனங்கள் 2000 ஆண்டுகளுக்கு முன்னரே பெண் இழிவுகளுக்கெதிராகவும் பெண் சமத்துவம் பற்றிப் பேசிய திருக்குறளை, சிலப்பதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு விளம்பரப்படுத்தினால் அதற்கொரு உயிரூட்டம் கிடைக்கும்.

தெய்வம் தொழாள் தொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை (கு: 58)

பண்டைய நாட்களில் ஒரு பெண் யாரையாவது விரும்பியவளாய் அல்லது திருமணமடைந்திருந்தால் பிறை (இயற்கையை வணங்குதல்) தொழுதலைத் தவிர்த்து விடுவார்களாம். ஒரு இளம் பெண்ணின் மனநிலையை அறிய பிறை தொழக் கேட்பது வழக்கமாம். அப்படி அவர்கள் வரமறுத்தால் அவள் யாரையோ விரும்புகிறாள் என்பதே பொருள் என்பர். தேவந்தி; கண்ணகி கோவலனைப் பிரிந்திருந்த வேளை அவளை சோமகுண்டம், பரிதிகுண்டம் மூழ்கி காமவேள் கோட்டம் போய் வணங்கி வந்தால் பிரிந்த கணவன் கூடிய விரைவில் வருவான் என்று கூறியபொழுது கண்ணகி "பீடன்று" (பெருமையில்லாதது) என்று ஒரு சொல்லிலேயே மறுத்து விடுகிறாள். எனவே **அன்றைய நாட்களில் திருமணமான பெண்கள் தெய்வம் தொழுவதில்லை ஏன்? ஆம் அவள் திருமணமானவுடன் தெய்வ நிலையை அடைகிறாள் என்பதாக அல்லது அவளைத் திருமணம் புரிந்ததன் மூலம் அவளது கணவன் தெய்வ நிலையை அடைகிறான் என்பது தானே பொருள்.** அடுத்து **தெய்வம், தொழுல** என்னும் சொற்கள் திருக்குறளில் என்ன பொருளில் பயன்படுத்தப்படுகின்றன என்பதையும் ஆய்ந்து அறியவேண்டிய தேவையும் இங்கு தொக்கி நிற்கின்றது.

தெய்வம் - மறுமையாகிய விண்ணக வீட்டில் ஏகபோக உல்லாச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசதிகளோடு இன்பங்களில் திளைத்திருக்கும் பரம்பொருள்களை (முப்பத்து முக்கோடி தேவர்கள்) குறிக்கின்றதா.??

தொழல் - மண்டியிட்டுத், தோப்புக்கரணம் போட்டு, தலையில் குட்டுக்கள் போட்டுக், காதைப் பிடித்திழுத்து, முகங்குப்புற விழுந்து படுத்து வணங்குதலைக் குறிக்கின்றதா??

**தெய்வம் பற்றிய குறள்கள்**

வையத்துள் வாள்வாங்கு வாழ்பவன் வானுறையும்
**தெய்வத்துள்** வைக்கப்படும் (கு: 50)

**தெய்வத்தால்** ஆகாதெனினும் முயற்சிதான்
மெய் வருந்தக் கூலிதரும் (கு: 619)

யான்னெனதென்னும் செருக்கறுப்பான் **வானோர்க்கு**
உயர்ந்த உலகம் புகும் (கு: 346)

ஐயப்படாத அகத்துணர்வானை **தெய்வத்தோடு**
ஒப்பக்கொளல் (கு: 702)

**தேவரனையர்** கயவர் அவரும் தாம்
மேவன செய்தொழுகலான் (கு: 1073)

குடிசெய்வல் என்னும் ஒருவனுக்குத் **தெய்வம்**
மடிதற்றுத்தான் முந்துறும் (கு: 1023)

மேற்குறித்த அத்தனை குறள்களுமே இம் மண்ணுலகில் வாழும் சக மாந்தரையே குறிப்பதாகும். திருக்குறள் கூறும் தெய்வங்கள் முப்பத்து முக்கோடி தேவர்களில் அடங்காதவர்கள். உயிருடன் வாழ்பவர்கள்.

**தொழுதல் பற்றிய குறல்கள்**

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
**தொழுதுண்டு** பின்செல்பவர் (கு: 1033)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னுயிர் தானறப்பெற்றானை ஏனைய
மண்ணுயிர் எல்லாம் **தொழும்** (கு: 268)

கொல்லான் புலானை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் **தொழும** (கு:260)

இழிவரின் வாழாத மானம் உடையார்
ஒளிதொழு தேத்தும் உலகு (கு: 970)

**இங்கு வள்ளுவர் தொழுதலை வாழ்த்துதல் போற்றுதல் புகழுதல் என்னும் கருத்திலேயே எடுத்தாண்டுள்ளார்** என்பதை ஐயந்திரிபுக்கு இடமின்றி விளங்கிக் கொள்ளலாம். கணவனின் அன்றைய செயலுக்காக மனைவியும் மனைவியின் அன்றைய செயலுக்காக கணவனும் ஒருவரை ஒருவர் புகழ்வதும் இயல்பே இதுவும் அவர்கள் உறக்கத்திற்குப் போகும் முன்போ அல்லது உறங்கித் துயிலெழும் போதுதான் தம்முள் பகிர்ந்து கொள்ள முடியும். இங்கு விழுந்து கைகூப்பி வணங்குதல் என்பது பொருந்தாது. மேற்குறித்த குறள் எல்லாமே போற்றப்பட வேண்டியவர்களைக் (வாழ்வாங்கு வாழ்பவர்கள்) குறிப்பதேயாம். “நிறையளிதல்” என்னும் அதிகாரத்தில்

பன்மாயக் கள்வன் **பணிமொழி**யான்றோ நம்
பெண்மை உடைக்கும் படை (கு: 1258)

இங்கு கூறப்பட்டது ஓர் அடிமைக் கூற்றன்று. அவளைப் பாராட்டுகின்ற(பணிமொழி) புகழ்கின்ற கூற்று. இக் கூற்று அவளைச் சலனப்படுத்தி அடிமைப்படுத்தி இயைபடைய வைத்துவிட்டது. ஆகவே “கொழுநன் ஆகிய தன் தலைவனை தொழுது (போற்றிப் புகழ்ந்து) உறங்கிப் பின் எழுவதாகவும் அல்லது கொழுநன் ஆகிய தலைவன் தொழுது (போற்றிப் புகழ்ந்த) பின் உறங்கி எழுவாள் என்பதாகவும் பொருள் கொள்ளப்படும் இதற்குத் தகுதியுடையவள் பெய்யெனப் பெய்யும் மழைக்கு ஒப்பானவள் என்றுதானே கொள்ள வேண்டும். இதுதான் தமிழ்ப் பண்பாட்டியல். இதில் எங்கிருக்கிறது பெண்ணடிமைத்தனம்.??



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் பண்பாட்டுத் திருமணம்

ஒருகுடும்பம் அல்லது ஒரு நாடு முன்னேற வேண்டுமென்றால் கல்வி, செல்வம் ஆகிய இரண்டும் தேவை. இவை இரண்டும் இல்லாமல் இருப்பது வேறு. ஆனால் இவை தமிழரிடம் இருந்தும் அதைப் பயன்படுத்தாமல் அல்லது தவறான வழியில் வீண்விரயமாக்குவதுதான் இன்றைய நிலையாக உள்ளது. கல்வியைப் பயன்படுத்தவும் பகுத்தறிவு தேவை பகுத்தறிவு இல்லாக் கல்வி. சுக்கான் இல்லாக் கப்பலை போன்றதும், கடிவாளமில்லாக் குதிரை போன்றதுமாகும் 2000 ஆண்டுகளுக்கு முன் தமிழன் பல் துறைகளிலும் சிறந்தே இருந்தான். பிற்காலத்தில் பகுத்தறிவைப் பயன்படுத்தாததினால் தாழ்ந்து கெட்டுப் போனான் இன்று மதப் பித்தத்தால், கொடை மடத்தால், தன்னினப்பகையால், குறி, பிறப்பியம் (சாதகம்) போன்றவை பார்ப்பதாலும் வேற்று (அயன்) மொழியாளர் வரவாலும் தன் மொழியை நாகரீகத்தை பண்பாட்டை மண்ணை இழந்து அடிமை நிலைக்கு ஆக்கப் பெற்றுள்ளான் .இதிலிருந்து மீட்படைய மொழி மீட்பு பண்பாட்டு மீட்பு என்பன முதன்மைத் தேவையாய் உள்ளன. இந்த அடிப்படையில் பண்பாட்டை மீள்விக்கும் முதற்படியாகத் தமிழரின் புதிய ஆண்டுத் தொடக்கத்தை தமிழரின் வாழ்வியலோடு பின்னிப் பிணைந்துள்ள வேளாண்மையை அடிப்படையாகக் கொண்டும் மாந்தன் வாழ்வாங்கு வாழ உலகப் பொதுமறை தந்த அருளாளர். திருவள்ளுவரை நினைவு கூர்ந்தும் அவரது பெயரிலேயே தமிழனுக்கான தொடர் ஆண்டைத் தைத் திங்களிலே தொடங்கி உலகு வாழ் தமிழரெல்லாம் விழா எடுக்க ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும். ஆனால் இதை முளையிலேயே கிள்ளி அழிக்கப்பட வேண்டுமென்று சிலர் கங்கணம் கட்டி நிற்கின்றனர். தமிழரின் ஆண்டுத் தொடக்கத்தை வைதீக வேத (இந்துத்துவ) வாரியரோ இசுலாமிய அரேபியரோ கிறீத்தவ ஐரோப்பியரோ அல்லது அவ்வவ் மதம் சார்ந்த தமிழரோ முடிவெடுக்கத் தகுதியற்றவர்கள். சமயம் சாராதோரும் சமயப் பன்மையியம் பேணுவோரும' நடுநிலை பேணும் தமிழருமே இதை முடிவு செய்யலாம். அத்தோடு தமிழன் வீட்டுக் கரண (சடங்கு) நிகழ்வுகளாகிய இறப்பு நினைவு கூறல் போன்றவற்றிலும் தமிழனின் தாய் மொழியாம் தமிழ்மொழி முதன்நிலைப்படுத்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறவேண்டும். மொழி இன்றேல் இனமில்லை. இனமின்றேல் நாடில்லை. இதற்காகவே வள்ளுவர்

யாகாவாராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்கப்பட்டு (குறள் 127)

என்றார். அடக்கமுடைமை என்ற அதிகாரத்தில் இக்குறள் கூறப்படுகின்றது. "நா" மொழிக்குரியது. மொழி குறித்த ஓர் இனத்தையும் அவ்வினத்தின் பண்பு, ஒழுக்கம், நாகரீகம் போன்றவற்றையும் உலகிற்குப் பறைசாற்றுவது. மொழி காக்கப் படாவிட்டால் பிற்காலத்தில் உலகத்தாரின் பார்வையில் இழுக்கு(பழி)க்கு உள்ளாகும் அல்லது அழிந்து போகும் என்பதே இதன் பொருள். எனவேதான் "நா" (மொழி) காக்க என்றார். இன்று இந்தப் பரந்த உலகில் 7500 ற்கு மேற்பட்ட மொழிகள் வழக்கில் உள்ளன. உலகில் வளம் பெற்ற பல மொழிகளை ஆய்ந்த அறிஞர்கள் உலக மொழிகளுக்கெல்லாம் ஊற்றாய் ஒரே மொழிதான் இருக்க முடியுமென்றும் அது தமிழனின் தாய் மொழிக்கே அண்மையாய் உள்ளதெனவும் கண்டுள்ளனர். இதை உலக மொழியியலாய்வில் வல்லவரான "சாம்சுகி" என்பார் தெரிவிக்கின்றார். அத்தோடு மரபணு ஆய்வின்படி உலக முதல் மாந்தன் தமிழன் தான் என்பதை யெர்மன் அறிவியலாளர் அண்மையில் கண்டறிந்துள்ளார்கள். தமிழ் மிகத் திருந்திய மொழி எனவும் உலகப் பண்டைய நாகரீகங்களுக்கெல்லாம் தலையாயதும் வழிகாட்டியுமென மேலை நாட்டவர் ஆய்ந்து கூறுகின்றனர். மக்கள் தோன்றிய காலத்தே தோன்றி இன்றுவரை உலக வழக்கொழியாது வாழ்ந்து கொண்டிருக்கும் மொழி தமிழே. உலகச் செம்மொழிகள் என்று கூறப்பெறும் கீபுரு, சீனம், இலத்தீன், கிரேக்கம், சமற்கிருதம், தமிழ் போன்றவற்றில் இலத்தீன், கிரேக்கம், சமற்கிருதம் போன்ற மொழிகள் என்றோ வழக்கொழிந்து போனவை. கீபுரு இச்ரேல் நாட்டின் உருவாக்கத்தால் இன்று உயிர் பெற்று வளர்கின்றது. சீனம் ஒரு பெரிய அரசாய் இருப்பதால் அதன் மொழி வாழ்கின்றது. **வேதவாரியரின் இந்துத்துவ வல்லாண்மை (சமயப் போர்வையில் இன்றுவரை), ஐரோப்பியரின் மேலாண்மை சிதைத்து, அழித்து, அறிவுக் களவாடியபோதும் நிமிர்ந்து நிலைத்து வாழும் ஒரே செம்மொழி தமிழ் மொழியே ஆகும். உலக மொழிகளுள் உயரிய பண்புகளாகிய "தொன்மை, இயன்மை, தூய்மை, தாய்மை, முன்மை, வியன்மை, வளமை,**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைமை, எண்மை, இளமை, இனிமை, தனிமை, ஒண்மை, இறைமை, அம்மை, செம்மை" போன்ற 16 பண்புகளும அமைந்த மொழி உலகில் தமிழ் மொழி மட்டுமே ஆகும். இதனைத்தான் திருமணத்தின்போது பதினாறும் பெற்றுப் பெரு வாழ்வு வாழ்கவென வாழ்த்துகிறார்களோ தெரியவில்லை. தொன்மைத் தமிழ், தெளி தமிழ், நற்தமிழ், நாவருவுத்தமிழ், தென்புலத்தார் தமிழ், இன்தமிழ், இருந்ததமிழ், வியந்தமிழ், ஒண்தமிழ், தண்தமிழ், வண்தமிழ், பாவருட்தமிழ், கோதைவாய்த்தமிழ், கழகத்தமிழ், கழகமுகத்தமிழ், கழகமலிதமிழ், சீர்மலிசெந்தமிழ், சொல்லிற்பொலிந்ததமிழ், நல்லியல்இன்தமிழ், திருவரங்கத் தமிழ என்று தமிழுக்குத்தான் எத்தனை அடைமொழிகள். ஆனால் தமிழரோ தமது பெருமையை தமிழின் பழைமையை சிறப்பை உணராது புரியாது வாழாவிருக்கின்றனர். இது ஏன்?, தாழ்வுணர்ச்சியா? அடிமைத்தனமா? இன்று எல்லா மதங்களுமே அதைப் பின்பற்றும் மக்கள் பேசுகின்ற அவர் தாய்மொழியில் அவர்களின் பண்பாட்டு நிகழ்வுகளை நிகழ்த்தும் போது தமிழர்கள் மட்டும் அயற்றின மொழியை (செத்த மொழியை சமற்கிருதம்) நாடி நிற்பதேன். தமிழனின் தமிழிச்சியின் இல்லத்திலே நடைபெறுகின்ற மிகவுமுயரிய விழா திருமணமொன்றேயாகும். அது மணமக்களை, அவர்தம் பெற்றோரை, உறவுகளை, நண்பர்களை, அயலவர்களை, ஏன் அந்தச் சிற்றூரையே இன்பக்களிப்பில் ஆழ்த்தும் இன்ப விழா. இவ்விழாவில் தமிழனை அடையாளப்படுத்துகின்ற தமிழனின் பண்பாட்டை உறுதி செய்கின்ற மொழிக்கு முன்னுரிமை இல்லையென்றால் தமிழர் தம்மைத் தமிழர் என்று கூறிக் கொள்ளத் தகுதியுடையவர்களா? வெட்கத்தின்மேல் வெட்கம். தொல் பழங்காலத்தில் சாதி சமயப் பிரிவுகளோ, ஏற்றத் தாழ்வோ, ஏமாற்றமோ இல்லாததால் காதல் கொண்ட ஆண், பெண் திருமணம் கொள்ளத் தவறியதில்லை. அன்று உள்ள கலப்பே வாழ்வாக மலர்ந்த நேய வாழ்வு. காலச் சுழற்சியிலே சூழல் எப்படி மாசுபட்டதோ, அதேபோல் மாந்தக் குமுகாயமும் (சமுதாயம்) மாசுபட்டது. அதாவது பல் கணவர், பல் மனைவியர் முறை தொடங்கி விலங்கு வாழ்வானது. இதனால் மக்கள் நலன் கொண்ட தமிழச் சான்றோர் திருமணக் காரணத்தை ஏற்படுத்தி நிலையான வாழ்க்கைத் துணையைப் பலறறிய ஆணை இடுவித்தனர். இதைத் தொல்காப்பியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யார்த்தனர் காரணமென்ப (தொல்.கற் 4)

கி.மு 800 இல் எழுதப்பெற்றதாக (கி.மு 1500 ஆண்டுகள் என்பர் அறிஞர் குணா தமது "வள்ளுவப் பார்பாரியம்" என்னும் நூலில்) கருதப்பெறும் தொல் காப்பியம் இக்காலத்திற்குப் பலநூற்றாண்டுகள் முன்னதாகவே இக்கரண முறை முகிழ்ந்திருக்க வேண்டும். ஓர் ஆணும் பெண்ணும் இல்லறம் நடத்த ஒன்று சேர்வதே மணம், கலத்தல், கூடுதல் எனப்டும். இது இறை தன்மை பெற்றதால் திருமணமெனப்பட்டது. பண்டை மணங்கள், கொடை மணம், காதல் மணம், கவர்வு மணம் என முத்திறப்பட்டது. கொடை மணமும் தானக்கொடை, விலைக்கொடை, நிலைப்பாட்டுக்கொடை (அக்குத்து அல்லது நிபந்தனை)க் கொடை என மூவகைப்படும். தானக் கொடை என்பது மணமகளின் தந்தை ஏழை மகனுக்கு எல்லாம் கொடுத்துச் செய்து வைப்பது. ஒரு செல்வரிடம் குறித்த தொகையைப் பெற்றுக் கொண்டு பெண்ணைக் கொடுப்பது விலைக் கொடை எனப்படும். நிலைப்பாட்டு அல்லது அக்குத்துக் கொடை என்பது ஒருவர் தன் மகளுக்கு இவ்வளவு சீர் செய்யவேண்டும் என்றும், தம்மைக் குறிப்பிட்ட காலம் வரை நலம்பார்க்க வேண்டும் என்றும், வீரச் செயல்கள் (காளையடக்கல், புலிப்பால் கறத்தல், கொடிய விலங்கு கொல்லல், வில் நாண் ஏற்றல் போன்றன. இவை சங்ககால முல்லைக்கலியில், கலித்தொகை நூல்களில் காணலாம்) ஏதாவதொன்றைச் செய்யவும், தம் மகளை இன்ன கலையில் வெல்லவேண்டும் என்றும், இதையே வள்ளுவரும்

பெற்றான் பெறின் பெறுவர் பெண்டிர் பெரும் சிறப்பு
புத்தேளிர் வாழும் உலகு. (குறள் 58)

அதாவது தன்னுடன் ஒத்த தகுதியுடைய கணவன் ஒருத்திக்குக் கிடைத்துவிட்டால் மேலுலகு என்று சொல்லப்படும் கற்பனையுலகில் கிடைக்கும் இன்பத்தைவிட இவ்வுலகிலேயே அவ்வின்பத்தைத் துய்ப்பார் என்பதாகும் போன்ற சில வேண்டுகோளை வைத்து வெற்றிபெறும் போது திருமணம் செய்து வைப்பார். மறச் செயலை மணமகனின் தகுதியாகக் கொள்ளும்போது அவர்களுக்குக் கிடைக்கும் குழந்தை மறவுணர்வைப் பெறுகின்றது. இதை ஐயன்சுடீன் பாலியல் தெரிப்பு (SEXUAL SELECTION) என்கின்றார். தம் குலத்திலேயே திரும்பத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்ப மணம் கொள்வதால் ஏற்படும் எச்சவியல் குறைபாட்டை இந்த மறவியற் தகுதி ஈடுசெய்கின்றது. இன்றைய நிலையில் மணமக்களுக்கிடையில் சில பொருத்தப்பாடுகளைப் பெற்றோர் கடைப்படிக்க வேண்டும். குறிப்பாக மணமக்களின் மன இசைவு, ஒழுக்கப் பொருத்தம், உருவப் பொருத்தம், தொழிற் பொருத்தம், உடல்நலப் பொருத்தம், கருத்துப் பொருத்தம், (உயர்ந்த பண்பாட்டினராயின் வெவ்வேறு மதத்தினராயும் இருக்கலாம்) அகவைப் பொருத்தம் கல்விப் பொருத்தம், குடும்பநிலை, (செல்வநிலை), பொருத்தம் போன்றவை கட்டாயமாகக் கடைப்பிடிக்க வேண்டியவையாகும். அதே போன்று சில வேண்டப்படாத பொருத்தப் பார்ப்புக்கள் தவிர்க்கப்பட வேண்டும். குலவெறி கொள்ளாமை, பரிசம்,(சீதனம்) வாங்காமை (வசதி குறைந்தோர் மணச் செலவுகள் நோக்கிக் கேட்பது தவறாகாது.) நாளும் கோளும் பாராமை (திருஞானசம்மந்தர் சமணருடன் வாதிடப் புறப்பட்ட போது அப்பரடிகள் அன்று நாள் சரியில்லையென்று தடுக்க

வேயறு தோழிபங்கன்..........................

..............

ஒன்பதோடொன்றோடேழு பதினெட்டோடாறு முடனாய நாட்கள் அவைதான் அன்பொடு நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியாரவர்க்கு மிகவே.'' என்று எல்லா நாட்களும் நல்ல நாட்களே என்று பாடிச் சென்று வென்று வருகின்றார். இது அருளாளற்கு மட்டுமல்லாது யாவற்கும் பொருந்தும். நற்காரியங்களுக்கு நாளும் கிழமையும், ஓரையும், வேளையும் பார்த்துத் தம்மைத் தாமே அச்சுறுத்தி வாழ்வதால் தம் வாழ்நாளைக் குறைத்துக் கொள்கின்றனர். (புள்ளியியல் ஆய்வின் மூலம் உறுதிப்படும்). "பிறப்பியம்'' (சாதகம்) பாராமை (குறித்த நாளில் குறித்த வேளையில் பிறந்தவரெல்லாம் ஒரே நிலை அடைவதில்லை. தன் முயற்சியும், சூழலும், பிறர் துணையையும் நம்பியே வாழவேண்டும். அதாவது ஷஷஒரு படி உணவில் உலகு ஒற்றுமை கண்டிடு, உழைப்பால அதை உலகிற்கு ஈந்திடு''. இந்தக் குளறுபடி ஐந்திரங்கள் (பஞ்சாங்கம்) பார்த்து, பொருத்தம் பார்ப்போரை வானிலை கண்காணிப்பு மையங்களில் அலுவலர்களாக அமர்த்திவிட்டால் அவர்கள் வருவாயும் குறையாது, அவர்களால் உலக மக்களும் ஆழிப்பேரலை, நிலநடுக்கம், வெள்ளம், சூறாவளி, போன்ற பேரழிவுகளில் இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்பாற்றப் பெறுவார்கள்.

காதல் மணம், களவில், கற்பில் முடிவுறும். களவு மணம் என்பது பெற்றோர், பிறருக்குத் தெரியாமல் ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் காதலித்து சேர்ந்து கொள்வதேயாம். கற்புமணமென்பது வெளிப்படையானது. அதாவது நீவிர் இன்னவாறாக ஒழுக வேண்டுமென திருமணம் நடத்தி வைக்கும் பெரியவர்களால் கற்பிக்கப்படும் நிலையாகும். காதலர் களவொழுக்கம் இன்றி கற்பாகவே தம் கூட்டு வாழ்க்கையைத் தொடங்கவேண்டும். அதுவே சிறப்பு

கற்பெனப்படுவது கரணமொடு புணர
கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியை
கொடைக்குரி மரபினர் கொடுப்பக் கொள்வதுவே தொல்.கற்1)

அன்பு, காதல், காமம் என்பன நுண்நோக்கில் வேறுபட்டனவாகும். அன்பு; புத்தரும், இயேசுவும், விவேகானந்தரும் எல்லோரிடத்தும் காட்டிய அன்பு. இது அறமாகவும், அறவினைக்கெல்லாம் மூலமாகவும் கருதப்பெறுவது. காதலென்பது பெற்றோரும் பிள்ளைகள் போன்றும் கோப்பெருஞ் சோழனும், பிசிராந்தையார் போன்று நண்பரிடத்தும், பூதப் பாண்டியனும், அவன் தேவி கோப்பெரும் பெண்டு போன்று கணவன் மனைவியிடத்தும் அமையும் அரிய பிறவிக்குமாகும். காமமென்பது கணவன் மனைவியிடத்தும், ஆண், பெண்ணிடையே நிகழக் கூடிய இல்லற இன்பத்திற்கான நேயமாகும். இதைக் கருத்திற் கொண்டே மாமறை தந்த வள்ளுவர் இன்பத்துப்பாலை காமத்துப் பால் என்றார். இதைக் கலவி வேட்கைக்கு உரியதெனக் கொள்ளுதல் தவறாகும்.

கரணம் அல்லது சடங்கு எவற்குச் செய்யப்படுகின்றதோ அவருக்குத்தான் அதன் உள்ளீடு புரிய வேண்டும். சடங்கு புரியும் மொழியில, புரியும் வகையில், பொருந்தும் முறையில், செய்ய வேண்டுவதே அடிப்படை. சொல்பவனுக்கும் கேட்பவனுக்கும் ஊடகமாக உணர்வாக இருப்பது மொழி. இங்கு வியப்பு என்னவென்றால் சொல்பவருக்குப் புரிகிறதோ இல்லையோ, கேட்பவனாகிய எந்தவொரு தமிழனுக்கும் பொருள் புரியாது. கரணத்தைச் செய்பவர்கள் தங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்வாகத் தக்கவைத்துக் கொள்ளவும், காலமெல்லாம் தன்னலத்திற்காக வாழத் திட்டமிட்டு மழை பொழியாது, நாடு விளையாது, நோய் நொடி பரவும், வாழ்வு நீடிக்காதென்றும் (பிராமணர்களின்) அச்சுறுத்தல்களுக்குப் பயந்து கற்றாரும், மற்றாரும், விடாப்பிடியாய் நின்று ஒழுகவும், மானமும் மதிப்பும் பகுத்தறிவும் விளக்கமும் இல்லாப் பிறவியராகவே மற்றவர்கள் (தமிழர்கள்) என்றும் இருக்க வேண்டும் என்பதற்காக அன்று ஆக்கப்பெற்றதே இந்த நடைமுறைகள்.

2003 அல் நான் எனது குடும்பம் தாயாருடன் தஞ்சைப் பெருவுடையார் கோவில் சென்று கருவறை போய் வழிபட்டு நின்ற போது நான் சற்று விலகிநின்று தாயார், குடும்பத்தவரை சிவலிங்கம் அருகில் வைத்து படக்கருவி (கமரா) யால் படம் பிடித்போது அங்கு நின்ற பிராமணர் அதைக் கண்டுவிட்டதால் கோபப்பட்டு கோவிலுள் படம் பிடிப்பது தடை என்றும் கூறி படக்கருவியைப் பறிமுதல் செய்வதாகவும் கூறினார். நான் இது தெரியாமல் நடந்த தவறு என்றும் பொறுத்தருளவும் கேட்டேன். அவர் சற்று இறங்கி படச்சுருளைத் தரும்படி கேட்டார். நான் ஒரு படத்திற்காக முழுச்சுருளையும் வீணாக்க முடியாது என்று கூறி முரண்பட்டதால் அவர் கோபப்பட்டு **"நீயும் உன் மனைவியும் ஒரு ஆண்டுக்குள் பிரிந்து விடுவீர்கள் இது ஒரு பிராமணனின் சாபம்"** என்றார். பின் நாம் வீடு வந்துவிட்டோம். எனது தாயார் சில காலம் கவலையுற்றிருந்தார். (இவர்கள் மூளைச் சலவை செய்யப்பட்டவர்கள்) என்னைப் பொறுத்தவரையில் சிறுவம் தொட்டே எந்த மூடநம்பிக்கைக்கும் என்னை ஆட்படுத்தியது கிடையாது. பிராமணர் திட்டுதலும் எனக்கு **"நீர் கிழிய எய்த வடுப்போல்தான்"** எங்களுக்கிடையில் எந்த விரிசலும் இல்லை இதுபோன்று தில்லையம்பலத்தில் (சிதம்பரம்) திருவரங்கத்தில் (சிறிரங்கம்) சில நிகழ்வுகள் வாய்ப்பு வரும்போது எழுதுவேன். ஐரோப்பிய அராபிய மதங்கள் போல் அயன்மொழி (சமற்கிருத) வைதீகவாரிய மதவரவால் ஏற்பட்டதே இந்நடைமுறை. உலக நாடுகளில் தாய்மொழிக் கல்விக்கும், தாய்மொழியில் வழிபாட்டிற்கும் முன்னுரிமை வழங்கும் போது தமிழர்கள் மட்டும் ஏன் இதைக் கைக் கொள்ளப் பின் நிற்கின்றனர். இங்கு வ்ணிக நோக்கத்திற்காக வந்த அராபியர்கள், ஐரோப்பியர், ஏன் மகத நாட்டிலிருந்து வந்த விசயனும் அவன் நண்பர்களும், வைதீகவேத வாரியரும் (இந்துத்துவ) தம் பெண்டிர் பிள்ளைகளுடன் வந்தவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லர். ஆண்கள் மட்டுமே வந்து இங்குள்ள பெண்களைத் தமிழிச்சிகளை மணந்தனர். ஒரு அராபியர் தமிழ்ப் பெண்ணை மணந்து விட்டால் அப்பெண்ணின் குடும்பத்தவர் யாவருமே தம்மை அராபியர் என்று கூறிக் கொண்டு அவர்களின் மதத்தையும் (இசுலாம்) பின்பற்றி அவர் நடையுடை பாவனையுடன் தாங்கள் அரேபியர் என்று வாழவும் பழகிக் கொண்டு இன்று தங்களை வேற்றினமாகக் காட்டிக் கொண்டு நிற்கின்றனர். இவர்களின் வீட்டு மொழி தமிழ் இவர்களிற் பலருக்குத் தமிழைவிட வேறு மொழி தெரியாது. ஐரோப்பியரை மணந்தவர்களும் தம்மை ஐரோப்பியராக (பறங்கியராக) நினைத்து வாழ்ந்தனர். 40 ஆண்டுகளுக்கு முன் இவர்களின் அதிகமானவர்களின் வீட்டு மொழி தமிழ்தான்). இதே போன்று பல்லவர், பிற்காலச் சோழர் காலமாகிய கி.பி 6ஆம் நூற்றாண்டுக்குப் பின் தென்நாடு வந்த வைதீகவேதவாரியாரும் அரசரை அணுகி சாதிய மேலாண்மையை நடைமுறைப்படுத்தி அரசவைக் கணியர்களாகவும் கோவில் பார்ப்பாராகவும் தம்மை உயர்த்தி அப்பதவிகளைத் தமிழ்ப்பார்ப்பார் கணியரிடமிருந்து தட்டிப் பறித்துக் கொண்டனர். ஆனால் அத்தமிழக் கணியர்களின், தமிழ் பார்ப்பாரின் பெண்களை மணந்து கொண்டனர். இதனால் தமிழக் கணியர், பார்ப்பார் குடும்பங்களும் உறவினரும் தங்களை வைதீகவாரியார் என்றும் தாம் மேலானவர்க (சாதிய) ளென்றும் கூறிக் கொண்டனர். அத்தோடு அரசர்களைப் பெரிய வேள்விகளைச் செய்யவும், பல்லாயிரம் பார்ப்பாரு (பிராமணர்) க்குத் கொடை (தானம்) வழங்கும் படியும் தூண்டினர். இதனால் வட இந்திய வைதீக வாரியாரும் தமிழ் நாட்டு பார்ப்பாருமாகப் பல்லாயிரக் கணக்கானோர் பிராமணராக்கப் பெற்றனர். இவர்கள் எல்லோருமே தமிழ்ப பெண்களுடன் கூடி தம்மை மேலானவர் என்று கூறிக் கொண்டு வாழத் தொடங்கினர். இவர்கள் தமிழால், தமிழரால் வாழ்பவர்கள். சிங்களவர்களின் மூதாதையர் என்று சொல்லப்பெறும் விசயனும் அவன் தோழர்களும் மணம் செய்தது பாண்டி நாட்டுத் தமிழ்ப் பெண்களை. இது வரலாறு அன்று சிங்களம் என்று ஒரு மொழியே இல்லை. கி.பி 5ஆம் நூற்றாண்டளவில் உருவாகி கி.பி 12ம், 13ம் நூற்றாண்டளவில் இலக்கிய இலக்கணம் கண்ட மொழி. பௌத்தமத வளர்ச்சிக்கும், சிங்கள மொழியின் இலக்கணத்திற்கும் பெருமளவு உதவியது தமிழும் தமிழரும்தான். அன்று தமிழனின் நாடாக இருந்த சேர நாடு (இந்தியத் தென்நாட்டின் மேற்குப்பகுதி) இன்று. மலையாளம். சேரநாடு வடவாரிய நம்பூதிரிகள் வரவால் தொல்தமிழர் மலையிளிகளானார்கள். அவர் மொழி மலையாளமாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவும் கி.பி 10ம் நூற்றாண்டு வரையில் உருப்பெற்றதே. இன்று மேற்குறித்தவர் எல்லோரும் தமிழனை எதிரியாகப் பார்க்கின்றனர். அவனில் குதிரை ஓட (சவாரி செய்ய) விரும்புகின்றனர். அன்று பாகத (பிராகிருதம்) மொழியின் ஒரு கூறான பாலி மொழியே புத்தரின் அறிவுரை வழங்கிய புத்தமொழி. இன்று இலங்கையின் புத்தமொழி. சிங்களம், சீனாவின், புத்த மதமொழி, சீனம் யப்பானின் புத்தமத மொழி யப்பானியம். இலத்தின், கீபுரு, கிறீத்தவர்களின் அன்றைய வழிபாட்டு மொழி. இன்று மக்கள் எந்த மொழி பேசுகின்றார்களோ அந்த மொழிதான் அவர்களின் வழிபாட்டு மொழி. எனவே தமிழைப் பேசுகின்ற தமிழச் சைவர்களுக்கு தமிழ்தானே வழிபாட்டு மொழியாக இருக்க வேண்டும். உலகக் கடவுளர்களுக்கெல்லாம் எல்லாமொழிகளும் புரியும்போது, ஏன் தமிழ்க் கடவுளர்க்கு (சிவன், முருகன், கொற்றவை, ஐயனார் போன்ற) மட்டும் சமற்கிருதம் புரியும் மொழியாயுள்ளது. மக்கள்தான் வெளியின மதத்திற்கு மாறுகின்றனர் என்றால் கடவுளரும் வெளியின (மொழி) மதத்திற்கு மாறுகின்றனரா.? அருளாளர்களே! கல்வியாளர்களே! அறிஞர்களே! இப்புதிரை விடுவியுங்கள். தமிழ்த் தாயின் விலங்கைக் கழற்றி விடுங்கள். எவ்வளவு காலந்தான் அவள் விலங்குடன் வாழ்வது. மணமென்றால் கட்டுதல், (பூட்டுதல்) என்று பொருள்படும். நீ யாரைக் கட்டப்போகிறாய் என்று கேட்பது உலக வழக்காகும். இது ஆண், பெண் இருபாலாருக்கும் பொருந்தும். கட்டுதல் என்பது திருநாண் கட்டுதலை (பூட்டுதல்) குறிபடபதாகும்.

ஈகையரிய இளையணி மகளிர் ............................ (புற.நா.127)

(இளை - நூலினால் ஆக்கப்பெற்றது பெறுமதியற்றது இதை யாருக்கும் கொடையாக வழங்க முடியாது நூலினால் அல்லது பொன்னால் (தங்கம்) ஆக்கப் பெற்றுக் கணவனால் கட்டப்பெற்றது. கொடையாக வழங்குவது அரிது என்பதாகப் பொருள் கொள்ளவும் முடியும்).

தாலிக் கொழுந்தைத் தடங்கழுத்தில் பூண்டு............... பெரியாழ், பனுவல். மேற்குறித்த சங்கப் பாடலும் பெரியாழ்வார் பனுவலும் (பிற்பட்டது) தமிழரிடையே திருநாண் அணியும் வழக்கம் இருந்ததென்பதைத் தெரிவிக்கும். பண்டைக் காலத்தில் காதணி, கழுத்தணி, பனம், தென்னம்குருத்தில் செய்து அணிந்தார் என்பதற்கு ஓலையைக் குறிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோடு இன்றும் காதணிக்கு வழங்குவதைக் காணலாம். தாலம் என்பது பனையைக் குறிக்கும். **தால்: நாவு - நாலி - தொங்குவது, நாலி ..... தாலியாகவும** திரிந்திருக்கலாம். எனவே சங்ககாலத்தில் மகளிர், சிறுவர் கழுத்தில் அணிந்த எல்லா அணிகளுமே தாலி எனக் கொள்ளுதல் தவறாகாது. அச்சுத் தாலி (காசு மாலை), ஐம்படைத்தாலி (சங்கு சக்கரம் வேல், வாள், தண்டம்), முளைத்தாலி (பல்மணி கோர்த்த மாலை), புலிப்பல் தாலி என கழுத்தணிகள் அழைக்கப்பெற்றன. இது பிற்காலத்திலேயே மங்களவணியாக மாற்றம் பெற்றது. பேரறிஞர் பி.ரி **சிநிவாசஐயங்கார் "தமிழர் வரலாறு"** என்னும் தமது ஆங்கில நூலில் தாலியுடன் நாண் கட்டும் வழக்கம் கிருகிதிய சூத்திரங்களிலே சொல்லப் பெறாத தூய தமிழ் மரபென்றும், பாணிக்கிரகணமும் சப்த பதீதையுமே ஆரிய திருமணத்தின் உயிர் நாடி என்றும் சுட்டுகின்றனர் இதே போன்று **"தென்நாட்டுக் குலமரபு"** என்னும் நூலில் மணமகன் திருநாணை எடுத்து மணமகள் கழுத்தில் கட்டும்போது **"பெண்ணே அறப்பயன் பெறுவதற்காகக் கட்டுகிறேன்"** என்று கூறுவதாகச் சொல்லப்படுகின்றதாம். கடந்த ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக வேதவாரியரின் வைதீகம் (இந்துத்துவ) சார்ந்த மேலாண்மைக்கு அடங்கிக் கிடந்த தமிழப் பண்பாட்டின் ஓர் உயரிய நிகழ்வாக **திருமணத்தின் மறுதமலர்ச்சி 20ம் நூற்றாண்டில் முகிழ்த்தது. இதன் முன்னோடியானவர்கள் மார்க்கசகாய ஆச்சாரியார், மறைமலையடிகளார், ஈ.வோ.ராமசாமிப் பெரியார், வி.கலியாணசுந்தரனார் போன்றோரே இதில் முன்னவர் பிராமணியத்தையும், ஈ. வே. ரா. பிராமணியம் வடமொழி வீண் சடங்கையும் மறைமலையடிகள் வி. க. பிராமணியம் வடமொழியையும் நீக்கித் திருமணக்கரணத்தைச் சீர்செய்தனர்.** இவர்களைத் தொடர்ந்து **கி. ஆ. பெ. விசுவநாதம், அறிஞர் அண்ணா, சோமசுந்தரபாரதியார்** தலைமையில் பல்லாயிரம் பண்பாட்டுச் **சீர்திருத்தத் திருமணங்கள** நடந்தேறின. இன்றும் தமிழ்நாட்டில் **செந்தமிழ் அந்தணர், இரா. இளகுமரன** தென் மொழி ஆசிரியர் இறைக்குருவனார் போன்றோரின் தலைமையில் இவ்வகைத் திருமணங்கள் நடைபெறுகின்றன. இங்கும் (இலங்கை) இவ்வகைத் திருமணங்களைக் **காவலூர் முனைவர் கா. பொ. இரத்தினம்** (முன்னைநாள் பா. உ) அவர்கள் திருக்குறள் ஓதி நடத்தி வைத்தார்கள். இன்றும் பல பெரியார் தலைமையில் திருக்குறள் ஓதித் திருமணம் செய்தல் வடமாகானத்தின் பல மாவட்டங்களில் நடைபெறுகின்றன. குறிப்பாகக் **கிளிநொச்சி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்ட தமிழச் சங்கத் தலைவர் திரு. வே. இறைபிள்ளை (பரமநாதப்பிள்ளை) சங்கச் செயலாளர் நா.வை. குமரிவேந்தன், (மகேந்திரராசா) திருக்குறளோதித் திருமணங்களை நடாத்தி வைக்கின்றனர். குறிப்பாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களில் நடத்தப்பெறுகின்றன. ஆனால் இத்திருமணங்களைக் குறித்த சிலர்தான் நடத்த வேண்டும் என்பதல்ல. குறித்த ஊரிலே அல்லது அக்குமுகாயத்திலே உள்ள அகவை முகிர்ந்த ஒழுக்க சீலரைக் கொண்டு நடத்தாலாம். தமிழன்னையை முன்னிறுத்தி கரணங்களைத் தமிழிலே நடத்தி "தமிழர் பண்பாட்டு விழுமியங்களைப் பேணும் வகையில்" பெரியபுராணம், திருவிளையாடற்புராணம் 60 ஆணட'டுத் தொடரின் உருவாக்கம், அம்மி மிதித்தல், அருந்ததி பார்த்தல் போன்ற தமிழப் பண்பாட்டிற்கு ஒவ்வாத இழிவுகளை நீக்கி "ஒருமை மகளிரே போலத் தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு" என்றும் அடிப்படைக்கு ஏற்புடையதாய் "ஒருவனுக்கு ஒருத்தி, "ஒருத்திக்கு ஒருவன்" என்னும் தமிழர் மானிடவியலுக்கேற்ப செய்யப்படுவதேயாகும். அத்தோடு திருமணங்களில் இணையர்க்கு அறிவூட்டும் சில வாழ்த்துக்களை வழங்குவது சிறப்புடையதாகும். பெண்களை இழிவுபடுத்தும் அம்மி மிதித்தல், அருந்ததி காட்டல், காசிக்குப் புறப்படல், (இவை விரிக்க நீளும்) போன்றன முழுமையாக நீக்கப்பெற வேண்டும். பெண்கள் விழிப்புணர்வு பெற்றுவிட்டனர் என்றும் பெண்ணடிமைத்தனம் ஒழிக்கப்பட்டு சமத்துவம் நிலைநாட்டப் பெறவேண்டும். என்றும் பல ஆண்களும் பெண்களும் மேடைகளில் கூப்பாடு போடுகின்றனர். கவிதைகளில், நாவல்களில் வாரிக்கட்டுகின்றனர். இவர்கள் கடுந்துவந்த தமிழை முன்னிலைப்படுத்தாத தொன்ம (புராண) பெண் இழிவுகளை முன்னிலைப்படுத்தும் சடங்கு முறைக்கு முரண்பட்டார்களா? அதுபற்றி விளக்கினார்களா? அல்லது களைய முற்பட்டார்களா? ஏன்? தெருவில் திரியும் நாய்கள் முற்பிறவியில் பெண்ணாகப் பிறந்து தம் கணவன்மாரை ஒழுங்காகப் பேணாதவர்களாம் என்றும் கூறுகிறதாம். "வேதமிருதி" பெண்ணடிமைத்தனத்தின் வித்து, முளை எங்கிருக்கிறது என்று புரிகிறதா? தமிழ்க்குமுகாயத்திலே தமிழப்பண்புக்கு இலக்கணமாய் கண்ணகியார், திலகவதியார், பூதப்பாண்டியரின் தேவி கோப்பெரும் பெண்டு, மாதவியார் போன்ற பலரிருக்காகவும் தண்டிக்கப் பெற்றவர்கள் ஏன்!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழனை அடையாளப்படுத்துகின்ற மொழியில், அவன் பண்பாட்டில் தெய்வப் புலவராம் திருவள்ளுவரின் மாமறைவழி நின்று தமிழன் பண்பாட்டு நிகழ்வுகளை நெறியப்படுத்தவேண்டும். இங்கும் **"பெண்வழிச் சேரல், "வரைவில் மகளிர்"** போன்ற அதிகாரங்களிலும் தனித்த சில குறள்களிலும் **மடம், நாணம், அச்சம், பயிர்ப்பு** போன்றவற்றிலும் பெண்ணடிமைத்தனம் வெளிப்படுவதாக சில கட்டுரையாளர்கள் சுட்டுகின்றனர். இது அவர் தவறன்று. தருமர், மணக்குடவர், பரிமேலழகர், போன்ற ஐம்பதத்திற்கும் மேற்பட்ட உரையாசிரியர்கள் உரைகண்ட விதமே காரணம். ஒவ்வொருவரும் தம் மதம் சார்ந்து, கொள்கை சார்ந்து, நடுநிலை பேணப்படாமல், மனம் போன போக்கிலும் உரையாசிரியர் வாழ்ந்த காலச் சூழலுக்கு ஏற்றவாறும் உரை கண்டனர் எனலாம். திருக்குறளுக்குச் சிறந்த உரை திருக்குறள் எனலாம். உரை என்பது அந்த நூல் எழுதப்பெற்ற காலம் அப்போதய சூழல், அன்று பின்பற்றப்பட்ட மரபு உத்திகள் போன்ற காரணிகளை வைத்தே உரை கண்டிருக்க வேண்டும். வட வேதவாரியரின் மேலாண்மை மரபணுவாயிலாகக் குடிகொண்ட மூடநம்பிக்கை நடுநிலை காக்கத் தவறிவிட்டது. **தொல்காப்பியம், சிலப்பதிகாரம், மணிமேகலை**, போன்ற இலக்கண, இலக்கிய நூல்களும் ஆரிய மொழி அவர் மரபு, அவர் மதம் பற்றி அதிக விளம்பல் செய்பவையேயாக உள்ளன. அவை அப்படி இருந்தால்த்தான் தப்பிப் பிழைத்தனவோ தெரியவில்லை. இல்லையேல் **தில்லையம்பலத்தில் நால்வர் பாடிய பல்லாயிரக் கணக்கான தேவாரங்கள், சமணரின் 8000 பனுவல்கள் (இன்றைய நாவலடியாரின் மிகுதி) அழிக்கப்பட்டது போல் அழிக்கப்பட்டிருக்கும்.** அவை தப்பிப் பிழைத்ததால் தமிழன் சற்றுத் தலை நிமிர்ந்துள்ளான் என்றே கூறவேண்டும். அத்தோடு பிள்ளைகளுக்குப் பெயரிடும்போது வடவெழுத்துக்களை நுழைக்காமலும், எழுதும்போது வட சொற்களைப் பயன்படுத்தாமல் இருக்கப் பழகிக்கொள்ள வேண்டும். வேறெந்த மொழிக்காரனாவது தனது பெயரில் தமிழெழுத்துக்களைச் சேர்த்துக் கொள்வானா? தமிழன் தன்மொழி பற்றிச் சிந்திப்பது தவறாகுமா? தமிழன் போற்றுகின்ற திருமறையாம். திருக்குறளையும் பல்கோணப் பார்வையிலே நோக்க வேண்டிய தேவையும் தொக்கி நிற்கின்றது.

இமையாரின் வாழினும் பாடிலரே இல்லாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமையார் தோள் அஞ்சுபவர் (குறள 906)
இக்குறள் என்ன கூறுகின்றது.

பெரும்புகழார்போல் புகழ்வாழ்வு வாழ்ந்தாலும் மனையாளைத் தழுவும் இன்பத்திற்காக அஞ்சித் தாழ்பவர் எப்புகழும் இல்லாதவரே. என்பது பொருளாகும். **ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன் பாண்டிய** மன்னன், மாவீரன் அவன் நாட்டில் பாம்புகள் தீண்டா கொடிய காட்டு விலங்குகளும் மக்களுடன் நட்புடன் வாழும், அந்த அளவிற்கு அவன் செங்கோண்மை மிக்க நாடு. அவனவையில் ஆடல் பாடல் நிகழ்வொன்று நடைபெறுகிறது. மன்னன் தன்னை மறந்த நிலையில் ஒன்றித்திருக்கிறான். இது அரசிக்கு எரிச்சலை ஊட்டுகிறது. அவள் இருக்கையை விட்டெழுந்து அவ்விடம் நீங்க முனைகிறாள். மன்னன் அவள் நிலை அறிந்து அவளது ஊடலைத் தணிக்க அவள் பின் செல்கிறான். அங்கே பொற்கொல்லன் "சிலம்பு திருடிய கள்வன் இங்குதான் உள்ளான்" என்கிறான். மன்னன் சிந்திக்கவில்லை. "கொன்று கொணர்க சிலம்பு" என்கிறான். பாண்டியன் புகழ் என்னவாயிற்று. மன்னனோடு மண்ணாச்சே இக்குறள் தவறா? பெண் இழிவுபடுத்தலா?

பேணாது பெண்விழைவான் ஆக்கம் பெரியதோர்
நாணாக நாணுத்தரும் (குறள் 902)

செய்யும் செயலில் அக்கறையில்லாது பெண்வழி நிற்பவன் உயர்வு. மிகப்பெரிய வெட்கத்திற்கு இடமான தலை குனிவைத் தரும் என்பது பொருள். இங்கு **கோவலன் மாதவி சேர்கையால்** ஏற்பட்ட விளைவுகள் முதல் எடுகோலாகும். இதுவே சிலப்பதிகாரம் தோன்ற வித்திட்டது. **யூலியச் சீசர்** மாபெரும் வீரன். உரோமப் பேரரசனையே தன் காலடிக்குக் கொண்டு வந்தவன். காதலி **கிளியோப்பட்ரா** உலகப் பேரழகி. அவன் அவளிடம் மண்டியிட்டுக் கிடந்தான். தன்னை மறந்தான். நண்பர்கள் தீட்டினர் திட்டம் கொலை செய்தனர் சீசரை. இக்குறள் தவறா? பெண் இழிவுபடுத்தலா? "**வரைவில் மகளிர்**" என்னும் அதிகாரத்தில்

ஆயும் அறிவினரல்லார்க் கணக்கென்ப
மாய மகளிர் முயக்கு (குறள் 918)

வஞ்சனையில் வல்ல மகளிரின் தழுவுதல், ஆராயும் அறிவில்லாதவர்க்கு உயிர் கொல்லியாகும் என்று அறிவுடையோர் கூறுவார் என்பது இதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாகும். இலங்கையைத் துட்டகைமுனுவின் பின் வட்கெமுனு என்பான் ஆட்சி செய்தான். கி.மு 29 இல் ஏழு வீரர்களைத் தலைமையாகக் கொண்ட சோழர் படை இலங்கையாட்சியைக் கைப்பற்றியது. இவர்களின் ஆட்சி பதின்மூன்று ஆண்டுகள் தொடர்ந்தன. சதாசீசன் என்பவன் இவர்களுடன் இணைந்திருந்தான். அவன் மனைவி அனுலா அழகி. இவ்வெழுவருடனும் நட்பானாள். இவர்கள் ஒருவர்பின் ஒருவராய் கொல்லப்பட்டனர். அதன்பின் சதாசீசனை அரசுக்கட்டிலில் ஏற்றினாள். சிறிது காலத்தின் பின் அவனையும் கொன்று தான் அரசுக்கட்டில் ஏறினாள் அனுலா. அவளே இலங்கையின் முதற் பெண்ணரசி. இது வரலாறு. வள்ளுவன் வகுப்பில் தவறுண்டா?
"புலவி நுணுக்கம" என்னும் அதிகாரத்தில்

பெண்ணியலார் எல்லாரும் கண்ணின் பொதுண்பார்
நண்ணேன் பரத்த நின் மார்பு (குறள் 1311)

பரத்தனே பெண்ணியல்பற்றோர் தம்தம் கண்களால் பொதுப் பொருளாகக் கொண்டு உன்னை நுகர்கின்றனர். எனவே உன் மார்பை நான் நெருங்கேன். என்பது இதன் பொருளாகும். இக்கருத்துப் புரட்சி பற்றி முனைவர். மு. வரதராசன அவர்கள் பின்வருமாறு விளம்புகின்றார். குறளில் வரும் ஊடலில் பரத்தை என்றொருத்தி இல்லை. தலைவன் பரத்தையிடம் சொல்வதுமில்லை. பொருட்பாலில் பொருள் காரணமாகப் பெண்கள் பரத்தைத் தன்மையாவதும் அப்பெண்டிரை ஆடவர் நாடுவதும் தவறென்று வள்ளுவர் வன்மையாகக் கண்டிக்கிறார். "வரைவில் மகளிர்" அதிகாரம் அவரின் சீர் திருத்தத்தை எடுத்தியம்புவதாகும். வள்ளுவர் ஊடல் பற்றிக் கூறவந்த போது காமத்துப் பாலில் பரத்தமைக்கு இடமில்லை. அதற்கு முன்னோர் வகுத்த இலக்கணத்தையும் புறக்கணித்து புலநெறி வழக்கம் என்ற நூலோர் மரபையும் கடந்து புதுவழி சமைத்துள்ளார் எனலாம்.

பெண்களுக்கு மறுமை அல்லது வீடுபேறு இல்லையென்னும் வைதீக (இந்துத்துவ) வேதவாரிய மரபையும் புறம்தள்ளி

பெற்றான் பெறின் பெறுவார் பெண்டிர் பெருஞ்சிறப்பு
புத்தேளிர் வாழும் உலகு (குறள் 58)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா வகையிலும் தன்னோடேத்த நற்குண நற்செயற் கணவனைப் பெற்றுவிட்டாள் என்றும் புதுமண இணையர் போல்; இன்பவுலகாகிய மேலுலகில் பெருஞ்சிறப்படைவர் என்று கூறுவது போல, இவ்வுலகிலேயே அவ்வின்பத்தைப் பெறுவர் என்கிறார் வள்ளுவர். இதுதான் வள்ளுவத்தின் பெருஞ்சிறப்பு. எல்லோரும் சிறப்புக்கு விண்ணைக் காட்டினர். ஆனால் வள்ளுவரோ விண்ணை மண்ணில் காட்டினர். பனித்துளி போன்ற குறளில் பனிமாலையை (இமையமலையை)ப் போன்ற கருத்தடக்கத்தைக் காட்டினார்.

ஒண்ணுதற்கே உடைத்ததே ஞாட்பினுள்
நாண்ணாரும் உட்கும் என்பீடு (குறள் 1088)

பகைவரும் கண்டஞ்சுமென் பெருமிதம் அவருடைய ஒளி பொருந்திய நெற்றிக்கு ஆற்றாமல் தோற்றுவிட்டதே. (இங்கே அவனுடைய வீரம் தோற்று விட்டது)

பண்டறியேன் கூற்றென்பதை இனியறிந்தேன்
பெண்டகையால் பேரமரக்கட்டு (குறள் 1083)

கூற்றுவன் என்றும் கூறுவதை நான் முன்னறியேன் ஆனால் இன்றோ அது போர் செய்யும் பெரிய கண்களுடைய பெண் என்று (இங்கு அச்சமுடையவன் ஆகின்றான்)

நாணோடு நல்லாண்மை பண்டுடையேன் இன்றுடையேன்
காமுற்றார் ஏறும் மடல் (குறள் 1111)

அன்று நாணமும் பகைவர் பாராட்டும் நல்லாண்மை உடையவனாகவும் இருந்தேன். ஆனால் இன்றோ நாணம் இன்றி என் காதலை வெளிப்படுத்த மடல் உடையவனானேன். இங்கு நாணத்தை இழந்து நிற்கின்றான். வீரமுடையவனாக, நாணமுடையவனாக, அச்சமில்லாதவனாக, இருந்த அவன் இன்று அவள் முன் வீரமில்லாத நாணமில்லாத அச்சமுடையவனாக காட்சியளிக்கின்றான். இதன் வாயிலாக எதைச் சுட்டுகிறார். அதாவது இருபாலாருக்கும் மேற்குறித்த ஒழுக்கங்கள் உண்டென்பதே ஆகும். வள்ளுவன் கூறுவதெல்லாம் காதல் மணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றியதே இதன் மூலம் குல (சாதிய) ஏற்றத் தாழ்வுகளுக்குச் சாவு மணி அடித்து சமத்துவப் புரட்சி செய்வதேயாகும். ஒருவனுக்கு ஒருத்தி என்றும் ஒருத்திக்கு ஒருவன் என்பதையும் வலியுறுத்தப் "பெருமை" என்னும் அதிகாரத்தில்

ஒருமை மகளிரே போல பெருமையும்
தன்னைத்தானே கொண்டொழுகின் உண்டு.

ஒருத்திக்கு ஒருவனே என்று ஒரு பெண் கொண்டொழுகும் போது அடையும் பெருமை ஒரு ஆணும் கொண்டொழுகும்போது உண்டென்பதே பொருளாகும்.

பண்பாட்டுத் திருமணங்கள் இன்று நடைபெறுகின்றன. இத்திருமண முறை ஒன்றும் புதிதல்ல. சங்ககாலத் தமிழர் கைக்கொண்ட முறை. இம்முறையைச் சங்ககால நூலாகிய அகநானூறு 86ஆம், 136ஆம் பாடல்களில் காணலாம். வளர்பிறை காலத்தில் முழுத்தக்கால் (முகூர்த்தம்) நடப்பெற்று மணப்பந்தல் போடப்பெற்றது. வாழை கமுகு போன்றன கட்டப்பெற்றன. மணமேடையில் அரசனைக் குறிக்க அரசங்கொம்பொன்று கட்டப்பெற்றது. பந்தலில் வெண்மணல் பரப்பினர். அகவை முதிர்ந்த வாழ்வரசிகள் மணமக்களை மஞ்சள் நீராட்டி புத்தாடை அணிவித்து மணமேடையில் அமர்த்தி திருநாண் பூட்டு (கட்டு) நிகழ்த்தினர். சான்றோரும் மற்றோரும் மணமக்களை வாழ்த்தினர். விழாவில் கலந்து கொண்டவர்க்கு இறைச்சியுடன் நெய் கலந்த வெண் சோறு வழங்கப்பட்டது. (கண்ணப்ப நாயனார் இறைச்சிதான் இறைவனுக்குப் படைத்தார். ஏன் அண்மைக் காலம்வரை விலங்கு பறவை பலியிடல் சில கோவில்களில் நடந்தேறின. சிறுதொண்டர் தன் மகனையே கறியாக்கி ஆண்டவருக்குப் படைத்தார்) இதனை அடிப்படையாகக் கொண்டே இன்றைய தமிழப்பண்பாட்டுத் திருமணங்களும் நடத்தப்பெறுகின்றன. இன்று மணமக்கள் தம்தம் இல்லங்களிலேயே மஞ்சள் நீராட்டுவித்து மணமேடைக்குத் தோழன், தோழியருடன் முன்பின்னாக அழைத்து வரப்பட்டு மணமேடையில் அமர்த்தப்படுவர். அவர்கள் இருக்கைக்கு முன்பாக மங்களப் பொருட்களான நிறைகுடம் பழம் பாக்கு வெற்றிலை குத்துவிளக்கு (ஒளியூட்டப்பெற்றவை) மாற்று மாலைகள் உதிரிப் பூக்கள் தேங்காய் முளைப்பாலிகை (சட்டியில் முளைக்கவைக்கப்பெற்ற ஒன்பது தசவங்கள் - நவதானியங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றவை வைக்கப் பெறுகின்றன. (நம் நாட்டில் முழுத்தக்கால் நட்டு அதைச்சுற்றி ஒன்பது தவசங்களிட்டு நீரூற்றி திருமண நாள்வரை வளர்ப்பர்) திருமணத்திற்கு உரித்தான ஒருவர் விழாத் தலைவரை அழைப்பார். அவையோர், மணமக்கள் யாவரும் எழுந்து நிற்க தமிழத்தாய் வாழ்த்தும திருக்குறளின் இறைவணக்க (கடவுள் வாழ்த்து)ப் பத்துக் குறள்களும இசையமைத்துப் பாடப் பெறுகின்றன. தலைவரின் தலைமையுரையைத் தொடர்ந்து மணமக்கள் தம்தம் பெற்றோரின் காலடியில் சந்தணமிட்டு மலர்தூவி வணங்கி எழுவர். பின் பெற்றோர் தம் பிள்ளைகளின் கைகளைச் சேர்த்து விடுவர். அடுத்து மணமகன் மணமகள் உறுதி மொழி (திருக்குறளை உள்ளீடாகக் கொண்டது) பகருவர். தொடர்ந்து உறவாடிகள் (சம்மந்திகள் ஒருவருக்கொருவர் மதிப்புச் செய்வர். பின் அவை வாழ்த்துதலுக்காக கழுத்து நாணுடன் கூடிய தாலி புத்தாடை மலர் மாலை தேங்காய் போன்றன தட்டுடன் அனுப்பப்பட்டு வந்தவுடன் மணமகன் மணமகள் புத்தாடைகளை மாறி வழங்குவர் மணமகள் ஆடை மாற்றி வந்தவுடன் மங்கள நாண் பூட்டும் நிகழ்வு அவையோர் வாழ்த்துடனும் மங்கள இசையுடனும் அரங்கேறும். பின் மணமக்கள் மாலை மாற்றிக் கொள்வர். இதன் பின் மணமக்களை வாழ்த்தி ஓரிரு வாழ்த்துப் பாக்களும் இவ்வாழ்வுக்கான பத்துக் குறள் கொண்டாக்கிய பனுவலும் இசையமைத்துப் பாடப்படும். பின் அகவை முதிர்ந்த இரு வாழ்வரசிகள் தீபங்காட்டி (ஆராத்தி) எடுத்துப் பொட்டிடுவார். தொடர்ந்து மணமக்களுக்கான அறஅறிவுரை ஓரிருவரால் வழங்கப்படும். முதல் அகவை முதிர்ந்த வாழ்வரசிகள் பொட்டிட்டுப் பூவிட்டு மஞ்சள் அரிசியிட்டு வாழ்த்துவர். மணமகன் மணமகள் கைசேர்க்கும் போது திருநாண் பூட்டும்போதும் தேங்காய் உடைக்கப்படும். மணமக்கள் இல்புகும்போது வாசலினுள் குத்துவிளக்கில் ஒளியேற்றுவர். தொடர்ந்து அவையோர்க்கு சைவ அல்லது இறைச்சி கலந்த நெய்ச் சோறு வழங்கப்பெறும். இத்துடன் மணவிழா இனிது நிறைவுறும்.

குறிப்பு: மணவிழா ஒழுங்குகள் பின்னிணைப்பாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

வாழ்க தமிழ்! வளர்க பகுத்தறிவு!! மறுமலர்ச்சி
பெறுக தமிழர் பண்பாடு!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளங்கோ அடிகளின் பெண்ணியப் புரட்சி

தமிழ் இலக்கிய மேட்டு நிலத்தில் சங்க இலக்கியம் ஒரு நீள மலைத்தொடர். அதன் கொடு முடிகள் திருக்குறள், தொல்காப்பியம், சிலப்பதிகாரமாகும். சிலம்பின் கொடுமுடி சற்று உயரம் குறைவாயினும் மற்றைய இரண்டிலும் தவழாத முத்தமிழ் இதில் பரக்கத் தவழக் காணலாம். அத்தோடு தமிழர் தம் பண்பிலும் மிக்குயர்ந்து நிற்கிறது. தமிழனை அவன் இலக்கியத்தை இமயத்தின் உச்சிக்கே கொண்டு சென்ற முத்தமிழ்க் காப்பியமே சேரன் செங்குட்டுவன் தம்பி இளங்கோவடிகள் யார்த்த சிலப்பதிகாரம். இதைப் போன்றதொரு காப்பியம் சிலப்பதிகாரத்தின் முன்னுமில்லை. ஏன் பின் என்று சொல்கின்ற இன் நாள்வரையுமில்லை. இது இந்திய, உலக, இலக்கிய வனப்புக்களையெல்லாம் தன்னகத்தே உள்ளடக்கி யாக்கப் பெற்ற நூல் என்றால் அதற்கு மாற்றுக் கருத்து இருக்க முடியாது. இப்படியான உலக மொழிகளிலேகூடக் காணப்பெறாத பல்சுவையும் தன்னகத்தே கொண்ட இந்நூல் ஏன் இலங்கை, இந்திய மக்களிடையே புரிந்து கொள்ளப்படவில்லை. பெருமை அடையவில்லை என்னும் மனக்குமுறல் தமிழ் உணர்வாளரிடையே காணப்பெறும் மனத்தாங்கலாகும். இலக்கியம் பயன்பட வேண்டுமானால் முதலில் அதையுணர்ந்து பின் ஆய்ந்தறிய வேண்டும். இலக்கியக் கல்வியில் ஏன், எவ்வாறு என்னும் கேள்விகள் இல்லாமல் தன்னை மறந்து கற்பது ஒன்று. எமது அறிவையும் அகமனச் சான்றையும் கொண்டு நுணகி நுணகி ஆய்ந்து கற்பது இன்னொன்று. அக்கால வாழ்க்கையுடன் இக்காலவுண்மைகளைக் கொண்டு காரண காரியங்களை ஒப்பீடு செய்து அறிவு தலைமை தாங்கக் கற்கும் முறையே சிறந்தது ஆகும். சிலர் கலை கலைக்காகவே என்னும் கொள்கையர் இது அவர்க்கு மயக்கப் பொருளேயன்றி அவர்க்கு அவர்தம் குமுகாயத்திற்குப் பயப்படுமொன்றல்ல. அத்தோடு காய்தல் உவத்தலின்றி நடுநிலை நின்று காலப் போக்கில் நிகழ்ந்த குறைகளை நீக்கி குணமும் குற்றமும் நாடி மிகையாகவுள்ள குணத்தைப் போற்ற வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகை நாடி மிக்ககொளல் (குறள் 504)

"நம்மவரின் அறிவு வரலாற்றுத் துறையில் மிகப் பிற்போக்கடைந்து இருப்பதாலேயே மூடத்தனமான பழக்கவழக்கங்கள் நடைமுறையில் உள்ளன. வரலாற்றுக் கல்வியே மக்களின் பகுத்தறிவுக் கண்களைத் திறக்கக் காரணமாகும்" இற்றைக்கு 3800 ஆண்டுகளுக்கு முன் நாவலந்தேயமாம் இந்தியாவினுள் புகுந்த கீழையாரியர் பேசிய மொழியின் திருந்திய மொழியே சமற்கிருதமாகும். இம் மொழியை இலங்கை, இந்திய மக்களிடை நூறு பேர்தன்னும் தம்வீட்டு மொழியாகக் கொண்டவரில்லை. "உலகில் உள்ள பல் சமய மக்களும் அவரவர் பேசுகின்ற மொழியிலே வழிபாடுகளைச் செய்யும்போது சமற்கிருதத்திற்கு மட்டும் தெய்வீகத் தன்மை உண்டென்று கூறினால் அது ஏற்புடையதாகுமா"?. இதை ந.சி.கந்தையா அவர்கள் 1946 களில் கூறினார். 60 ஆண்டுகள் சென்ற பின்னரும் இன்றுள்ள நிலை!! வள்ளுவர் வாழ்ந்த காலம், இளங்கோவடிகள் வாழ்ந்த காலம், வடநாட்டிலும் தென்நாட்டிலும் சரி பல் சமயப் போட்டிகள் நிலவிய காலம். வட, தென்நாட்டு மன்னர்கள் ஆரிய வேத மரபு சார்ந்திருந்த நிலையில் புசியமித்திரன் என்னும் ஆரிய அரசனின் சாதிய (வர்ணாச்சிரம) மேலாண்மை கோட்பாட்டை மனு அறம் (தர்மம்) என்னும் சட்டக் கோவையாக செயற்படுத்திய காலம். ஆரிய வேத மரபை எதிர்த்தவர்கள் களையப்பட்டு அவர் வழிபாட்டுத் தலங்களும் அழிக்கப்பட்டு இருந்த காலம். இந்நிலை தென்நாடு வரை பரந்துபட்டு இருந்தது. இடைப்பட்ட காலங்களிலேயே கி.பி 3ம் 6ம் காலங்களுக்கிடையில் தமிழ் நாட்டில் பௌத்த, சமண, சமயங்களை ஆதாரித்த களப்பிரர் என்னும் அயற்றின (அன்னியர்) ஆட்சி இடம்பெற்றது. இக்காலகட்டத்திலேயே இளங்கோவடிகள் தமிழர்தம் பண்பாட்டு விழுமியங்களை (மதிப்புக்களை) அடிப்படையாகக் கொண்டு தமிழுணர்வின் மேலீட்டாலும் ஆரிய வேத மரபின் வழித் தோன்றலான மனு அறத்தை (தர்மம்) ஏற்றுக் கொள்ளாமையினாலும் சிலப்பதிகாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் நூல் யாத்தார் எனலாம். ஒரு குடிமகளின் சிலம்பு அரசவையில் அதிகாரம் செய்ததால் இந்நூல் சிலப்பதிகாரம் ஆயிற்று. சிலம்பு பல்கோணப் பார்வையிலே தொகுக்கப் பெற்ற ஒரு புரட்சி நூல் தமிழர் தம் பண்பாட்டின் தங்கச் சுரங்கம் உலக நாடக மரபின் முன்னோடி. இசை, இசைக் கருவிகளின் வைப்புப் பெட்டகம். ஆடல், கூத்து, அழகு படுத்தல் போன்றவற்றின் கலைக் களஞ்சியம். பல வரலாற்று உண்மைகளை உள்ளடக்கிய தமிழர் வரலாற்று நூல். எனப் பல தலைப்புக்களைத் தாங்கி நிற்பதுதான் சிலப்பதிகாரம். பலவகைக் கேள்விகளைக் கேட்பதன் மூலம் சிலம்பின் நோக்கை உய்த்து உணர முடியும். ஓர் வணிகப் பெண்ணை ஏன் சிலம்பின் தலைவி ஆக்கினார்? ஏன் காலணியாம் சிலம்பின் பெயரில் காப்பியம் செய்தார்? அன்றைய ஆரிய வைதீக வேத மரபு வழியாகப் பெற்ற மநு அறம் (மநுதர்மம்) சாதிய மேலாண்மை வழி பெண் எச்சாதியினளாயினும் அவள் ஓர் இழிவுப் பிறவி என்றது. தெருவில் திரியும் நாய்கள் கூட முற் பிறவியில் பெண்ணாகப் பிறந்து தம் துணைவர்க்குச் சரியான முறையில் தொண்டு செய்தவர்கள் என்பதாக "ச்மிருதி" கூறுகிறதாம். அத்தோடு அவளுக்கு துறவு வீடுபேறு கோவில் பூசகராகும் நிலை போன்ற எத்தகுதியுமே இல்லை. கணவன் இறந்தால் உடன் கட்டை ஏறவேண்டும் இல்லையேல் கைம்மை நோன்பு நோற்க வேண்டும். இந்நோன்பைவிட (அந்தளவு துயர் மிக்கது ..........விரிக்க நீளும்) தன் கணவனுடன் உடன் கட்டை ஏறுவதே இன்பமும் சுகமும் என்கிறார் பூதப் பாண்டியனின் தேவி பெருகோப்பெண்டு. (புறநானூறு 246) ஆரிய வேத மரபார் எல்லாச் சாதிப் பெண்களையும் ஏன் இழிவுப் பிறவி என்றனர். ஆம் நாடோடிகளாகச் சிந்துவெளியில் புகுந்த இந்தக் கீழ் ஆரியர் தம் பெண்களுடன் இணையர்களாக வரவில்லை. வந்த இடத்திலிருந்த தொல் சிந்து தமிழ்ப் பெண்களுடன் கூடினர். பிள்ளைகள் பெற்றனர். அன்றிலிருந்து ஆண் மேலாண்மையைத் தொடக்கினர். ஏன் இலங்கை வந்த விஜயனும் அவன் தோழர்கள் 700 பேரும் பாண்டிய நாட்டுத் தமிழ்ப் பெண்களையே மணந்தனர். வாணிகம் செய்ய வந்த அராபியரும் அவ்வாறே. இவர்கள் எல்லோரின் இச்சை களிப்புப் பொருளாக்கி இழிவுப் பிறவியாக்கி அடிமைப் படுத்தினர் தமிழிச்சிகளை. இதையே புசியமித்திரன் கி.மு 2 ஆம் நூற்றாண்டில் மநு அறம் (தர்மம்) என்னும் சட்டக் கோவையாக்கினான். இதை இளங்கோவடிகளால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாங்கிக் கொள்ள ஏற்றுக் கொள்ள முடியவில்லை. தொன்று தொட்டு பெண்ணைத் தெய்வமாய்ப் போற்றுவது தமிழர் பண்பு. எனவேதான் பெண்ணைக் கருவாக்கினார் தம் சிலப்பதிகாரத்தில். இக்காப்பியத்தில் வரும் அத்தனை பெண்களையும் பெருமைப்படுத்திப் போற்றுகின்றார். வாணிகப் பெண்ணாம் கண்ணகியை மற(வீர)க் கற்பினளாக்கி தெய்வமாக்குகின்றார். சத்திரியப் பெண்ணாம் கோப்பெருந்தேவியை அறக் கற்பினளாக்கி உலகம் போற்ற வைத்தார். கணிகையர் பெண் மாதவியையோ "குப்பையில் கிடந்தாலும் குன்றுமணி மங்காது" என்னும் முதுமொழிக்கு ஏற்ப அவர்க்கும் வாழ்வு உண்டென்று உறுதி செய்து துறவுக் கற்பினளாக்கி இன்று உலகம் போற்றும் அன்னை திரேசா போன்றோர் தோன்ற அன்று தன் மகள் மணிமேகலையை வித்தாக்கித் தரவைத்து பெண்ணும் துறவுக்கு உரித்துடையவள் என்பதை உறுதி செய்தார்.பிராமணப்பெண் தேவந்தியை சேரன் செங்குட்டுவன் கட்டுவித்த முதல் கண்ணகி கோவிலின் பூசகராக்கி வைதீக, ஆரிய ஆண் மேலாண்மைக்கு ஆப்பு வைத்தார். ஏன் கணிகையர் பெண் சித்திராபதியைக் கூட தேவஉலகப் பெண்ணின் தலைமுறையில் வந்தவள் என்றார். கவுந்தி அடிகள் மாதிரி ஐயை போன்றோரையும் சிறப்பித்தார். ஆனால் சிலப்பதிகாரம் வழி ஆண்கள் எவருக்கும் பெருமையோ முதன்மையோ வழங்கினார் இல்லை. என்னே அவரின் பெண்ணிய சிந்தனைப் புரட்சி. ஏன் இன்னும் பெண்ணியம் பற்றிப் பேசுகின்ற ஆண்களும் பெண்களும் இளங்கோவடிகளைப் புரிந்துகொள்ளவில்லை, போற்றவில்லை, பெருமைப்படுத்தவில்லை. புரிந்து கொள்வார்களா? தம் அடிமைத் தனத்தை.

ஓலையைக் குறிக்கும் தோடு என்னும் சொல் இன்றுவரை காதணிக்கு வழங்குவதைக் காணலாம். அன்று பெண்கள் காதணிகள் (குண்டலம், தோடு), கழுத்தணிகள், தோளணிகள், மார்பணிகள், தலையணிகள், கையணிகள் (வளையல், காப்பு), இடையணிகள் (மேகலை), காலணிகள் (சிலம்பு), என்னும் பல பெறுமதி மிக்க அணிகளை அணிந்தனர். இளங்கோவடிகளின் காலத்திற்கு முன் சிலம்பு சிறுமியர் அணியாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் திருமணத்திற்கு முன் இச்சிலம்பு "சிலம்புகழி நோன்பு" என்னும் விழா மூலம் அவர்களின் காலில் இருந்து கழற்றப்பெறும் என்றும் வ.சு.ப.மாணிக்கனார் தம் "தமிழ்க் காதல்" என்னும் நூலில் கூறுகிறார். இங்கும் பழமைக்கு மாறாக சிலம்பைத் தலைவியின் காலில் இட்டு புரட்சி செய்கிறார். ஏன். ஆம். மநு கூறுகிறதாம் கடைச் சாதிக்காரனாகிய சூத்திரன் படைக்கும் கடவுளின் (பிரம்மா) காலடியால் பிறந்தவன் என்றும் இழிவானவன் என்றும் எனவேதான் அந்த இழிவுடைய (இழிவுப் பிறவிப் பெண்ணின்) காலடிக்குச் சிலம்பிட்டுப் பெருமைப்படுத்த முனைந்தார் எனக் கொள்ளலாம். கி.பி 8 ஆம் நூற்றாண்டளவில் "இராமாநுசரின் வசிச்டாத்வைதத்தில்" முதன் முதலாக "கீதை பற்றி உள்ளதாகவும் தமிழர் இலக்கியத்தில் கீதையின் வெளிப்பாடு மதுரைக் காஞ்சியில் உள்ள ஒரு பாடலுக்கு எந்தப் பொருத்தப் பாடும் இல்லாமல் விளக்கம் தரும் போது நச்சினார்க்கினியரால் கி.பி 14 ஆம் நூற்றாண்டில் சுட்டப் பெற்றதாக ஆய்வறிஞர் "இராசாராம் மோகன்ராய்" கூறுகின்றார. இந்த பகவத் கீதை "சாதிய (வர்ணாச்சிரம) மேலாண்மை பற்றி என்ன கூறுகிறது.

சாதுவர்ணயம் மயாஸ்ருஷ்டம் குணகர்மவிபாக
தஸய கர்த்தாரமபியாம் வித்திய கர்த்தா மவ்யமாம் (கீதை 4.13)

**குணத்திற்கும் செய்கைக்கும் தக்கபடி நானே நான்கு சாதிகளை (வர்ணங்களையும்) சமைத்தேன். செய்கையற்றவனும் அழிவற்றவனுமான யானே அவற்றைச் செய்தேன் என்றுணர்.**

கீதை தரும் நான்கு சாதியர் கடமை (தமிழாக்கம்)

.......................................

பிராமணர்: அகப்புற கரணத்தை அடக்கல், தவம், தூய்மை பொறுமை, நேர்மை, ஞானம், கல்வி, ஆத்திகம், இயல்பில் தோன்றும் செயல்கள்.
கீதை 18.42



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்திரியர்: சூரத்தன்மை, ஒளி, உறுதி, திறமை, போரில் புறங்காட்டாமை, ஈகை, இறமை, இயல்பாய்த் தோன்றும் செயல்கள். (கீதை 18.43

வைசிகர்: உழவு (இழிதொழில் ............... வேதமரபு), ஆநிரை காத்தல், வாணிகம், இயல்பாய்த் தோன்றும் செயல்கள்.

சூத்திரர்: மேற்குறிப்பிட்டவர்களுக்கு தொண்டு இயல்பாய்த் தோன்றும் செயல். (கீதை 18.44

இதில் மேல் வகுப்பார் வழுவினாலும் சூத்திரன் வழுவக் கூடாது. வழுவினாலும் அழிவுண்டாகும். (மநு ச்மிருதி)
பற்று நீங்கித் தொழில் செய் (கீதை 3ம் அதி.)
மூன்று சாதியினருக்கும் தொண்டு செய் (கீதை 18ம் அதி)
குலக் கடமை மீறுவார்க்கு மறுமை இல்லை (கீதை 23ம் அதி.)

மாம் பார்த்தா இவ்யாபாஸ்ரித்ய -
யே பிஸ்யூ பாபயோயை ஸ்திரியோ
வைஸ்யா ய்ததா சூத்திர ............ ஸ்தேவி
யாந்தி பராம் சுதிம் (கீதை 9.32)

தமிழாக்கம்: பெண்களோ (எச்சாதியினராயினும்) வைசியரோ, சூத்திரரோ, நீச குலத்தில் பிறந்தோரோ, யாராயினும் என்னை வணங்கினால் மறுமை (மோட்சம்) அடைவர், எப்படி இருக்கிறது சாதியப் பிரிப்பு. கீதை 18 இல் பிராமணருக்குக் கல்வி என்கிறது. கீதை 9 இல் பிராமணர் சத்திரியர் கீதைக் கடவுளை வழிபடாவிட்டாலும் மேலுலகம் உண்டு . **ஆனால் பாபயோயை காரராகிய வைசிகன், சூத்திரன், பெண்கள்,** கட்டாயம் வணங்க வேண்டும். இல்லையேல் மேலுலகம் இவர்கட்கு இல்லையாம். **மநு இன்னுமொன்றைக் கூறுகிறதாம். இவை எதிலும் பகுத்தறிவைப் பயன்படுத்துவது கண்டணத்திற்குரியதும், நாத்திகத்தைப் போல்** பாவமானதாம். பெண்ணடிமைத் தனத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்து, முளை, வேர், மரம், எது வென்பதை பெண்ணிய வாதிகள் சிந்திப்பார்களா? இதிலிருந்து மீள வழி சமைப்பார்களா? திருமணத்தில் **பெண்ணை இழிவுபடுத்தும் அம்மி மிதித்தல்** போன்ற நிகழ்வுகளை நிறுத்துவார்களா? (இவை விரிக்கின் நீளும்) தமிழில் தூவித்தெழுதல் (பூசணை) கேட்க தமிழ் அன்னையின் விலங்குடைத்து விடுதலை செய்வார்களா? கம்பர் கவிநயம் பற்றி பலர் பெருமைப்பட்டுக் கொள்கிறார்கள். ஆனால் இக்கவிநயத்தின் ஊடாக வெளிப்பட்டு நிற்பது எது? **கம்பராமாயணம் தமிழனைத் தமிழிச்சியை இழிவுபடுத்தும் ஒரு நூல். சிவனியத்தைவிட வைதீகத்துடன் கூட்டுச் சேர்ந்த வைணவத்தை (வடகலை) மேம்படுத்திக் காட்ட எழுந்த நூல் தமிழர்தம் பண்பாட்டு இலக்கியங்களை மூடி மறைக்க இருட்டடிப்புச் செய்ய எழுதப்பெற்ற ஒரு நூல்.** பல கொடூரக் கொலைகளை அதாவது சாதிய மேலாண்மையை வாய்மை(அகிம்சை) வழி எதிர்பார்த்து மறியல் தவம் செய்த சம்புவனை, சுக்கிரிவனுக்காக வாலியை, சூர்ப்பனகையின் ஒருதலைக் காதலுக்காக போர் அறம் மீறிக் கொடூரம் செய்து கொன்றவனைத் தலைவராகக் கொண்ட காவியம். தமிழர் பண்பாட்டிற்கு ஒவ்வாத பல இழிவுகளை மக்கள் மத்தியில் பரக்கவிட யாக்கப்பெற்ற நூல். பொன்னால் (தங்கத்தால்) செய்த ஏனம் (பாத்திரம்), அதனுள் பால், பாலில் நஞ்சு இதைத் தெரிந்து கொண்டு ஏனம் பொன் உள்ளிருப்பது பால் என்று (ஏனம் - கம்பர், பால் - கவிநயம்) குடித்தால் விளைவு!!

யாதும் ஊரே யாவரும் கேளீர்............. (புறநானூறு 192)

என்னும் புறநானூற்றுப் பாடலூடாகத் தழினத்தின் பண்பை மாண்பை, வாழும் வழியை உணர்த்துகின்றார் கணியன் பூங்குன்றனார். உலகிற்கு நாகரீகத்தைப் பண்பாட்டை, உழவு, கடற் தொழில்களை, வீடமைப்பை, தெரு அமைப்பை, நாடமைப்பு, நகரமைப்புக் காட்டியவர் தமிழர். உலகில் முதலில் மொழி இலக்கணம் இயல் இசை நாடகம் காட்டியவர் தமிழர். ஆட்சிப் பிரிவுகள், சட்டங்கள், அணுவியல், வானவியல் கண்டவர். அவற்றின் முன்னோடிகள் (விரிக்க நீளும்) தமிழர், பௌத்த, சமண, சைவ, வைணவ (தென்கலை) கிறீஸ்தவ சமயத்தார் எல்லோருமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் பண்பாடு பேணித் தமிழுக்காய் ஆற்றிய பணிகள் ஏராளம். (விரிக்க நீளும்) ஆனால் வேத வாரியார் (இந்துத்துவம் தமிழுக்காய் ஆற்றிய அரும் பணிகள் என்ன? பல வழிப்பறிப்புக்கள், இருட்டடிப்புக்கள் (இவை விரிக்கின் பல நூல்களில் எழுதலாம்.) **சென்னை பல்கலைக் கழகத்தின் முன்னைநாள் தமிழ்ப் பேராசிரியராய் இருந்த சூரிய நாராணய சாத்திரி என்பார் தனது பெயரை பரிதி மாற்க் கலைஞர் என்று தூய தமிழில் மாற்றிய வடமொழியாளர் கூறுகிறார். "ஆரியர் தொன்தமிழ் மூல நூல்களை எல்லாம் வடமொழியில் மொழிபெயர்ப்புச் செய்த பின் அம் மூல நூல்களை அழித்துவிட்டனர்**"என்கிறார். இதில் மெய்யியல் அறிவியல் வானிலை சிற்பக் கட்டடக்கலை ஆடல் பாடல் இசை நூல்கள் (ஆபிரகாம் பண்டிதரின் கருணாமிர்த்த சாகரம் 1917 என்னும் நூலின் மூலம் அறியலாம்). அடங்கும்.

"ஆரியன் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிருப்பான்" என்பது முதுமொழி. சிலப்பதிகாரத்தில் மறக்கற்பினள் கண்ணகி மதுரையை எரித்ததாகக் கதை சொல்கிறது. ஆனால் தொடக்கத்தில் இருந்தே கண்ணகி மென் போக்குடயவளாக யாருக்கும் தீங்கு நினைக்காதவளாகவுமே காணப்படுகிறதாள். எந்த நிலையிலும் தன்னிடமிருந்து கோவலனைப் பிரித்த மாதவியின்மேல் எந்தக் குறையையோ குற்றத்தையோ சுமத்தவில்லை. அத்தோடு மதுரை செல்லும் வழியில் கவுந்தி அடிகளால் நரிகளாக ஆக்கப் பெற்ற கெட்ட குணமுடயவரைக் கூடப் பொறுத்தருள வேண்டும் என்கிறார் கண்ணகி இணையர். இப்படி நற்குணமுள்ள நற்பண்புள்ள கண்ணகி கட்டாயமாக மதுரையை எரிக்க மனம் கொண்டிருக்க முடியாது. அப்படியாயின் நடந்தது என்ன? **பாண்டியன் நெடுஞ்செழியன் ஆரியப் படையை வென்றவன். பார்ப்பனருக்குப் பல நன்மைகளைச் செய்த கோவலனைக் கொன்றவன் (விரிக்க நீளும்) திருட்டுப் பொருள் சேர்த்த வார்த்திகன் என்னும் பூசகரைச் சிறையில் இட்டவன்** எனவே சீற்றமுற்றிருந்த பார்ப்பனர்கள் கண்ணகியை சாக்காக வைத்து மதுரையை எரித்தனர் (தமிழர் வரலாறு........ தேவநேயப்பாவனர்). அன்றைய மன்னர்கள் சாதிய மேலாண்மையை ஏற்று அவரின் விருப்பிற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்ப செயற்பட்டனர. இருந்தும் அன்றிருந்த தமிழினப்பற்றாளர்கள் வெறுமனே இருந்து விடவில்லை. பெண்ணைக்கருவாக வைத்த ஐம்பெரும் காப்பியங்களை யார்த்தனர். காலணி சிலம்பை வைத்துச் சிலப்பதிகாரமும், இடைணி மேகலையை வைத்து மணிமேகலையும், கையணி வளையலை வைத்து வளையாபதியையும், காதணி, (குணடலம்) வைத்துக் குண்டலகேசியையும், தலையணியை வைத்து சீவக சிந்தாமணியையும் யார்த்தனர். இவை பெண்ணைப் போற்றும் விதத்தில் சமண பௌத்த, சமயத்தவர்களால் இயற்றப் பெற்றன. இத் தமிழ்க் காப்பியங்களின் உள்ளீடுகளை எத்தனை தமிழர் அறிந்துள்ளனர்? சிலவேளை 65 அகவைக்கு மேற்பட்டவர்கள் அறிந்திருக்கலாம். ஏன் தெரியவில்லை?

தமிழனின் மாண்ட மாபெரும் பண்புடைய இலக்கிய வளத்தையும், கலைப்பொழிவையும், வரலாற்றுப் பெருமையையும் சுட்டிக்காட்டவல்ல கலங்கரை விளக்கம் சிலப்பதிகாரம். இதைப் போன்ற அரிய கருவூலங்களே சிலம்பின் உரைகளாகிய அரும்பதவுரையும், அடியார்க்கு நல்லார் உரையும். இது தமிழின் பெருமையை, பழைமையை, வடமொழி தாண்டி உலக அரங்கிற்குக் கொண்டு செல்ல வல்லது. சிலர் சிலம்பின் கலைநயத்தையும் இன்னும் சிலர் தமிழ்ப் பண்பாட்டுப் பகுதிகளையும் ஆய்ந்து விளக்கியுள்ளனர். ஆனால் இவற்றிற்கெல்லாம் பல படி மேலே சென்று விபுலானந்த அடிகளார், இசைப் பண்பை, நாடகப் பண்பை ஆய்ந்து ''யாழ் நூலில்'' இசைப்பண்பையும் ''மதங்க சூளாமணி''யில் நாடகப்பண்பையும் ஆய்ந்து மறைந்த தமிழிசையையும் தமிழர் நாடக மரபையும் உயிர்ப்பித்து வெளியிட்டு அரும்பணி செய்தார். ''சிலம்பில் புது மறுமலர்ச்சிக்குரிய பல வித்துக்கள், தூண்டல்கள் காணப்பெறுவதையும், முன் காணாத அறியாத, தமிழ், அதன் இசை புதுவகைப் பண்ணுடன் காதில் கேட்பதாயும் பரதஆடல், (நாட்டியம்) தமிழர் கையிலிருந்தாலும் அதன் தலைமையுரிமையை இயக்குமாற்றல் தமிழர் கைக்கு வரவில்லையாயியும், பரத ஆடல் பயிற்றுணர்களும், பயில்பவர்களும் இந்த அடிகளை ஆடிக்காட்ட முன்வராததும் எம்மவரின் அடிமைத்தனச் சிந்தனையாமென்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய அடிகளை பரத ஆடலாக்கிக் காட்டினால் அவை அடிக்கு அடி சொல்லுக்குச் சொல்பரத ஆடல் முத்திரைகளுக்கு (அபிநயம்.... பாவம்) இசைய அமைந்து உள்ளதென்பதையும்'' ஆணித்தரமாக உறுதி செய்கின்றார். பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரை அவர்கள். இவ்வகை முத்திறப் பண்புகளும் வாய்ந்த நூல் தமிழைவிட வேறெந்த நூலிலோ உலகின் வேறெந்த மொழி நூலிலோ காண முடியாது. சிலம்பு செல்வாக்குப் பெறாமைக்கு கொலைவெறி, கொள்ளை வெறி, இச்சை (காம) வெறி போன்றவற்றையூட்டிப் பணம் பறிக்கும் பெரிய திரை, சின்னத்திரைப் படங்களைப்போல் அன்றிலிருந்து இன்று வரை சமயப் பூச்சுடன் நைடதம், கம்பராமாயணம், மாபாரதம், சில பக்திகப் பாக்கள், பெரிய புராணம் போன்றவை மக்கள் மத்தியில் புலவர் மத்தியில் பரக்கவிடப்பட்டு அவர்கள் அதற்குள் சிறைப்பட்டதே ஆகும். இன்றும் இதுதான் தமிழனின் நிலை. ஆனால் சங்க இலக்கியங்கள் சிலப்பதிகாரம் போன்றவற்றால் இந்நிலை மாறியிருக்கவேண்டும் ஏனெனில் சமற்கிருத இலக்கியங்களைவிட பண்பில் பழைமையில் மிக உயர்ந்தவை சங்க இலக்கியங்கள். அத்தோடு தமிழ் நாகரீகம் ஆரிய நாகரீகத்தை விட ஆயிரம் மடங்கு உயர்வுடையது. இச்சிறப்புக்கள் சமற்கிருதம், கிரேக்கம், இலத்தீன், தாண்டி முதன்நிலைச் சிறப்பை தமிழுக்குக் கொடுத்திருக்க வேண்டும். ஏன் கிடைக்கவில்லை. இது நிகழவேண்டுமானால் எம்மவர் மத்தியில் அதாவது அரசியல் தலைவர்கள், செல்வர்கள், ஊடகங்களாகிய செய்தித்தாள், வானொலி, தொலைக்காட்சி, ஊடகவியலாளரின் ஆதரவு, மனமானமாற்றம், நடுநிலை தவறாத போக்கு சாதியப் பெண்ணடிமைத்தன மேலாண்மைக்கு மறைமுகமாக முண்டு கொடுக்கும் போக்குகள் மாற வேண்டும். ஆனால் நடப்பதென்ன??

இராமாயணம் மாபாரதம் பெருமை தருவதாகக்கூறுபவர்களுடன் சேர்ந்து இவற்றிற்கு முற்பட்ட சங்க இலக்கியம், சிலப்பதிகாரம் போன்றவற்றின் அருமை, பெருமை, சிறப்புக்களை மக்கள் கவனத்திற்கும் உலக அரங்கின் பார்வைக்கும் பரவவிடாமல் தடுக்கும் உள்ளெண்ணம் கொண்டும் செயற்படுபவர்களுடன் ஒன்றுபட்டு நிற்கின்றனர். இன்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரியமாயையில் சிக்குண்டு மக்கள் தத்தளிக்கின்றனர். அறிஞர் உலகு இவை பற்றிப் பேசுவதோ எழுதுவதோ இல்லை. ஏனென்றால் இது ஒரு சாதியரைப் பாதிக்குமாம். கிட்லர் யேர்மனியர், இவரும் இவரது யேர்மனியப் படைகளும் கொன்று குவித்த யூதர்கள் எத்தனை இலக்கங்கள், அமெரிக்க அணுகுண்டால் யப்பானின் கிரோசிமா நாகசாக்கியில் இறந்தவர் எத்தனை இலக்கங்கள் இன்றுவரை அதனால் பாதிக்கப்பெற்றுத் துன்புறுவோர் எத்தனை இலக்கங்கள் (இவை போன்ற பல வரலாறுகள்). இவ்வரலாறுகள் தெரிந்து புரிந்ததால்தான் இன்று யூதர்கள், யப்பானியர் உலக அரங்கில் உயர்ந்து நிற்கிறார்கள். ஆரிய வரவால் அழிந்தவர்கள், பாதிப்புக்குள்ளானவர்கள் தொல் தமிழர்களே இந்த அழிப்பின் தொடக்க முதல்வன் **ஆரிய இந்திரனே.** இதை **"இருக்குவேதம்"** உறுதி செய்யும், இவர்களால் தொல் தமிழரின் நூல்கள் அவர்களின் நாகரீகம் அழிக்கப்பட்டது. நம் நாட்டில் தமிழர் என்ற இனம் இருக்கிறது. இவர்களில் யாரும் ஆரியர்கள் இல்லை. ஆனால் சிலரின் மனம்தான் ஆரியம் சார்ந்து அவர் புகழ்பாடி அவர் மேலாண்மை சார்ந்து நிற்கிறது. தமிழ் நாட்டில் எம்.யி.இராமச்சந்திரன் அவர்கள் முதலமைச்சராய் இருந்தபோது அமைத்த குழு கோவில் **"தூவித்தொழல்"** (அர்ச்சனை) தமிழிலும் செய்யலாமென பரிந்துரை செய்தது. இதை எதிர்த்து ஆரிய அடிமை ஒருவர் சென்னை உயர் நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்தார். அவர் சொல்கிறார் **"நானும் தமிழன்தான் ஆனால் கடவுளுடன் பேசும் மொழி வேதநாகரி (சமற்கிருதம்)"** என்று உலகக் கடவுளர் எல்லோர்க்கும் எல்லா மொழியும் புரியும், போது எப்படி தமிழ்க் கடவுளர்க்கு (சிவன், முருகன், கொற்றவை போன்றோர்க்கு) தமிழ் புரியாமல் சமற்கிருதம் புரியும் மொழியானது இது வேதவாரிய வல்மேலாண்மையா??

அன்று இரு உயர் சாதியர்க்கு (கீதை) என்றிருந்த கல்வி இன்று எல்லோர்க்கும் உரித்துடையதாய் உள்ளது. இன்று சத்திரியர் என்றோ வைசியர், சூத்திரர், பிராமணர் என்றோ பிரிப்பின்றி ஒரேவிதக் கணிப்பில் கல்வித் தகைமைக்கு ஏற்ப தொழில் கிடைக்கிறது. நடப்பதோ மக்களாட்சி. யாரும் பாராளுமன்றம் செல்லாம், மக்களை ஆளலாம். இப்படி இருக்க ஒரு குறித்த சாதியினருக்குப் பாதிப்பு என்பதன் பொருள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன? பகுத்தறிவுக்குப் பொருந்துமா? எல்லோர்க்கும் கல்வி போன்று எச்சாதியினராயினும் கோவில் வழிபாடு (அர்ச்சனை போன்றவை) வாழ்வியல் (இன்பியல், துன்பியல்)க் கரணங்களை தமிழிலே செய்யும் உரிமை பெறவேண்டும். இதனால் தமிழன்னை பூரிப்பு அடைவாள், வாழ்வாள்!!

சிலம்பின் மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர்கள் மறைமலை அடிகள், இரா. பி. சேதுப்பிள்ளை, நாவலர் சோமசுந்தர பாரதியார் போன்றோரே. கம்பராமாயணத்தில் சொற்சுவை பொருட்சுவை தனிப்பாடற் சுவையா உள்ளதே யொழிய ஒரு கோப்பாக இல்லையென்றும் இதைவிட சீவக சிந்தாமணியின் சொற்சுவை கேட்போரின் மனதை உருக்கி இயக்கும் ஆற்றல் உள்ளதென்றும் பொருட் சுவை ஆழமானதென்றும் கூறுவர். இலக்கியவாணர்கள் கி.பி 12 ஆம் நூற்றாண்டுகளில் இதன் எழுச்சியும் செல்வாக்கும் கண்டு புழுக்கமுற்றுத் தான் கம்பராமாயணம், பெரிய புராணம் தொகுக்கப் பெற்றது என்பார். இதன் தொடர்ச்சியாக கந்தபுராணம், திருவிளையாடற் புராணம் தொகுக்கப்பெற்று போட்டியிட்டு வெற்றியும் கண்டனர் ஆரியவேதமரபார் மதத்தை மையமாக்கி தமிழிலக்கியங்களை ஓரந்தள்ளிப் தமிழ்ப் பண்பற்கும் தமிழிற்கும் எதிரான போக்கை தமிழரைக் கொண்டே செயற்படுத்தினர். தொடர்ந்தும் செயற்படுத்த முனைகின்றனர். ஆரிய வேத மரபு நலன் பேணுவோர். இராமாயணம் பாரதக் கதைகளுக்கு முன்பே பெரும்கதை புகழும் செல்வாக்கும் பெற்றிருந்ததாம். இது தமிழர்களின் அரும்பணிகளின் வைப்பகமாய் உள்ளதென்பர். இதை யாத்தவர் வால்மீகிக்கு முற்பட்ட தொல்கவி குணாட்டியார் என்பார் அறிஞர். ஆரிய அறிஞர் சுற்றுப்படி பெருங்கதை பேய் மொழியில் (தமிழ்மொழி) எழுதப்பெற்றது என்பர்.

எனவே தமிழ்ப் பண்பாடு மட்டும் பேணும் இலக்கியங்களை உலக அரங்கு செல்ல வழி சமைப்போம்.

வாழ்க தமிழ்! வளர்க பகுத்தறிவு! மறுமலர்ச்சி பெறுக தமிழர் பண்பாடு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறளுக்கு மத, மறை, சமய முலாம் வேண்டாம்

உலகம் ஈன்றெடுத்த உயர்வான நூல்கள்மிகச் சில அவற்றுள் தலையாய இடத்தைப் பெற்றிருப்பது திருக்குறள் என்று கூறிடின் அது மிகையாகாது. விவிலியம், குர்ஆன், தேவாரம், திருவாசகம் போன்றவை உலகம் ஏற்றுக் கொண்டுவிட்ட உயர்வான நீதி நூல்கள். இவை அனைத்திற்கும் மதம் என்னும் பின்னணி உண்டு எனவே அவை இயன்றளவு உலகக் குமுகாயத்தில் சுடர்விட்டு ஒளிர்கின்றன. திருக்குறள் ஒன்றுதான் அத்தகைய பின்னணி எதுவுமின்றி காலத்தை வென்று, நின்று மிளிர்ந்திடும் பெருமை பெற்றுள்ளதோர் புதுமைமிக்க நூல் எனவேதான் உலகில் ஆக்கம் பெற்ற நூல்களில் சிறப்பான, ஈடு இணையற்ற ஓர் இடம் இதற்குக் கிடைத்துள்ளது. மதம் மொழி இனம் நாடுகள், நாடுகளின் எல்லைகள் அனைத்தையும் கடந்து ஐரோப்பிய வடமொழியாளர் வல்மேலாண்மை அழிப்புக்களைக் கடந்து உலகமயமாக்கம் பெற்றுத் தலை நிமிர்ந்து நிற்கின்றது. இருந்தும் அதனைப் பலர் அதன் வழி விட்டபாடில்லை. அண்மையில் கூட ஒரு செய்தித் தாளில் ஒரு கட்டுரையாளர் திருக்குறளில் கிறீத்தவக் கருத்துக்கள் உள்ளதாகவும், இந்நூல் கிறீத்துவுக்குப் பின் முதலாம் நூற்றாண்டில் யாக்கப் பெற்றிருக்கலாம் என்று கூறுகிறார். இது கி.மு இல் என்று பலரும், கி.பி 2ஆம் நூற்றாண்டில் என்று சிலரும் கி.பி 6ஆம் நூற்றாண்டில் என்று ஒரு சிலரும் இதை இன்னும் காலத்தால் பின் தள்ள முனைவாருமாக தம்முள் முரண்பட்டு நிற்கின்றனர்.

ஒரு பிள்ளை பிறந்து வளரும் போது அதன் அறிவு வளர்கிறது இவ்வறிவு கல்வியால் உலகியலில் ஈடுபட்டால் அகமன (கரு) மெய்யறிவால் வளர்கிறது. இதனையே வள்ளுவர்

"நுண்ணிய நூல் பல கற்பினும் மற்றும் தன்
உண்மையறிவே மிகும்" (குறள் 373)

என்றார். அறிவு பற்றிக் குறிப்பிடும் சாக்கிரட்டீசு **"எனக்குத் தெரிந்தது தெரியாதது என்பதுதான் என்றும் புத்தர் இந்த மரத்தில் ஒரு இலையளவு அறிவே என்னறிவு. உலகின் கோடானு கோடி மரங்களின் இலைகளின் அளவுதான் உலகறிவு"** என்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஔவைப்பாட்டியோ "கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு" என்பார். அப்துல் இரகுமான் "அறியவறியத்தான் அறியாமை புரியும்" என்றும் பலர் பலவாறு இயம்புகின்றனர். திருக்குறளுக்கு உரை கண்ட பரிமேலழகர்; பிரகாசுபதியின் (வியாழன்) பார்க்கப் பத்தியம், சுக்கிராச்சாரியாரின் (வெள்ளி) ஔசாசம், சாணக்கியர் எழுதிய கௌடிலியம் (அர்த்த சாத்திரம்), போன்ற நூல்களின் கருத்துக்களைத் திருக்குறள் உள்வாங்கியுள்ளதாகவும் உரைக்கின்றார். ஏன் பகவத் கீதையின், குர்ஆனின் கருத்துக்கள் உள்வாங்கப்பட்டுள்ளதாகவும் சிலர் கூறுவார். வள்ளுவர் யாத்த குறள்கள் 1330 ஒன்றுக்கொன்று தொடர்புடையவை எனவே குறளுக்கு விளக்கவுரை தெளிவுரை காணின் திருக் குறளையே ஆயவேண்டும். திருக்குறளுக்கு திருக்குறள்தான் தெளிவுரை அவர் வாழ்ந்த காலச் சூழலே அதற்கு அரண். திருக்குறளுக்கு உரை கண்ட பலரும் தம் அறிவுக்கு எட்டியபடி தம் மதக் கோட்பாடுகள் தம் காலஞ் சார்ந்து ஆராய்வதால் கருத்து முரண்பாடுகள் ஏற்படுகின்றன. பலர் தாம் சார்ந்துள்ள மதக் கோட்பாடுகள்தானுள்ளன என்று வலிந்தும் பெரு முயற்சி எடுத்தும் நிறுவ முனைகின்றனர். தாம் கற்ற தெரிந்தவற்றை வெளிப்படுத்துவதில் எந்தத் தவறும் இல்லை. ஆனால் முடிச்சுக்களும் முலாம்களும் திருக்குறளை எல்லைப்படுத்திவிடும்.

இந்திய மெய்யியல் (தத்துவம்) பற்றிப் பல ஆய்வுகளைச் செய்த மிக்குயர் பரிசு (நோபிள்) பெற்ற முனைவர். ஆல்பட் சுவைட்சர் திருக்குறள் பற்றிக் கூறும் பொழுது இது தமிழர் பண்பாட்டின் பிளிவாகவும் உலகமும் வாழ்க்கையும் இல்லையென்கிற மறுப்பு மெய்யியல் வானத்தின் வெகு தொலைவில் காணப்பெறும் முகில் போல் காட்சி தருதாயும் 250 நீதிக் கருத்துக்களில் அன்பு பெரிதும் போற்றப் பெறுவதையும் அத்தோடு இதன் ஒழுக்க நெறிக் கோட்பாட்டின் செயலுக்குரிய நேர் பயன் (கைமாறு) இடம்பெற்று இருப்பதாகவும் அறநெறியானது பரிந்துரைக்கப் பெறுவதாகவும் மறுமை (மோட்சம்) அல்லது வீடுபெறு மறுபிறவியற்ற இவ்வுலக வாழ்விலேயே மறுமனித (மனமாற்றம்) ஈடேற்றத்திற்கு இட்டுச் செல்வதாயும் ஒழுக்க நடத்தை உலகியல் நன்மையையும் ஒழுக்கக்கேடு இன்னலையும் விளக்கிவிக்கும் என்பதை ஒழுக்கநெறிக் கோட்பாடு தெளிவு செய்வதாயும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறைசாற்றுகிறார். இவற்றிற்கெல்லாம் நேர்பயன் உண்டென்று பிராமணியம் பௌத்தம் கீதை கிறீத்தவம் கூறுவது போல் திருக்குறள் உறுதிசெய்யவில்லை. அறநெறியும் ஒழுக்க நெறியும் சார்ந்த ஒரு செயற்பாடே. நல்லவற்றைச் செய்கின்ற நிலையில் மாந்தனை வைக்கின்றது. அத்தோடு உலகியலில் இருந்து அக விடுதலையையும், பகைமை இல்லாத மனத்தையும், கொல்லாமை, அழிவு உண்டாக்காமை போன்ற வற்றையும் விரும்புகின்றது. உலகமும் வாழ்க்கையும் உண்டு என்கின்ற சிந்தனையும் மதிப்பு மிக்க ஒழுக்க நெறி விளைவுகள் அத்தனையும் தனதாக்கிக் கொண்டுள்ளது. தனிமனிதன் தான் எப்படி நடந்துகொள்ள வேண்டும். உலகத்துடன் எப்படி நடந்துகொள் வேண்டும் என்பதற்கு நல்லறிவும் பெருந்தன்மையும் தேவை என்பதை திருக்குறள் துல்லியமாக எடுத்தாள்கின்றது. இப்படியான மதிப்பு மிக்க மெய்யான மெய்யியல்ச் சிந்தனையை, நீதிக் கருத்துக்களின் தொகுப்பு ஒன்று உலக இலக்கியத்தில் குறளில் உள்ளது போல் வேறெந்த நூலிலும் காணவியலாது. இந்த வகையான ஓர் இயற்கை நெறி சார்ந்த உலகமும் வாழ்க்கையும் உண்டென்ற உறுதிப்பாட்டு நிலையானது இந்திய இலங்கைத் தமிழ் மக்களிடையே பரந்து பட்டிருந்தது. ஆனால் இதை வேறு எந்த மதக் கோட்பாட்டிலும் காணமுடியாது. மதமென்றால் வெறியென்றும், மறை என்றால் அது பல ஒளிவு மறைவுகள் கொண்டதென்றும், சமயம் என்றால் சூழலுக்குக் காலத்துக்குத் த குந்தாற்போல் மாறுவதென்று சிலர் கூறுவது போல் திருக்குறள் இந்த மத, மறை, சமய எல்லைகளை வரையறை செய்யாது அன்பு, அறம், ஒழுக்கம் என்பவற்றை மட்டுமே தளமாகக் கொண்ட மானிடத்தை நேசிக்கும் ஒரு நூல். சமுதாய நேயமுள்ள எவரும் தம்முடைய மனசாட்சியை அதிற் கண்டு தம் உடைமையாக உரிமையாக ஏற்றுக்கொள்ள வாய்ப்புள்ளது.

திருவள்ளுவர் திருக்குறளை எழுதத் தூண்டிய காரணிகள் எவை? அன்றைய வாழ்வியற் சூழ்நிலை எப்படி இருந்தது? குறளின் இலக்கு என்ன? இது தமிழர் தம் மானிடவியலுக்கு ஏற்புடையதாய் உள்ளதா என்பன போன்ற பல கேள்விகளுடன் 1330 குறள்களுள்ளும் புகுந்து வெளிவந்தால் வள்ளுவரின் அகமன நிலையை ஓரளவு புரிந்து கொள் முடியும். சங்ககாலத் தமிழர் குமுகாயத்தில் சாதிய (வர்ணாச்சிரம) வேறுபாடுகிளில்லை. வழிபாடுகளும் நிலத்தின் அடிப்படையில் குறிஞ்சி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முல்லை, மருதம், பாலை, நெய்தல் என்றும், அவை சார்ந்த தெய்வங்களான முருகன், திருமால், இந்திரன், (வைதீகக் கடவுளல்ல) கொற்றவை, வருணன் (கடற் கடவுள்) போன்றோரை வழிபட்டனர். மக்கள் நிலப் பிரிவுகளாலேயே பிளவுபட்டிருந்தனர். இந்திய வடநாட்டில் இருந்த மக்கள் ஆரிய வேத மரபார் வரவால் சாதிப் பிரிவுகள் ஏற்பட்டு பெரும் அல்லலுற்றனர். இக்கால கட்டத்திலேயே பௌத்த சமண சமயத்தவர்கள், மக்களுடன் சேர்ந்து ஆரிய வேத மரபாரை எதிர்த்தனர். இதனை மநுச்சட்டக் கோவையை யார்த்த புசிய மித்திரன் என்பான் அடக்கினான். இக்கால கட்டத்தில் வடநாட்டில் வேரூன்றியிருந்த பௌத்த, சமண சமயங்களும் சரி, வேதவாரியாரின் வைதீக மதமும் சரிதமிழ் நாட்டில் பரவத் தொடங்கின. (கி.மு 200 - கி.பி 100) காலச் சூழலில் தமிழ் மூவேந்தரும் வலுக் குன்றியதால் தமிழ் நாட்டில் களப்பிரர் என்பார் ஆட்சிக்கு அடிகோலியது. இவர்கள் கி.பி 600 வரை 300 ஆண்டுகள் தமிழ் நாட்டை ஆளுகை செய்தனர். இக்கால்பகுதிக்கு முன்னதாக திருக்குறளும் இக்காலப்பகுதியில் இளங்கோவடிகளின் சிலப்பதிகாரம் சாத்தனாரின் மணிமேகலை போன்ற தமிழனை இமையத்தின் உச்சிக்கே கொண்டு சென்ற ஐம்பெரும் காப்பியங்களும் யாக்கப் பெற்றன. களப்பிரர் பௌத்த, சமண, சமயங்களை ஆதரித்ததால் இந்நூல்கள் சில பாதுகாக்கப்பெற்றன. தமிழனின் தலை நிமிர்வுக்கு தமிழ்மொழியின் வாழ்வு வளர்ச்சி உயர்வுக்கு வித்திட்டவர்கள் பௌத்த சமண ஆசிவக, கிறீத்தவ மதத்தவர்கள் என்ற கூற்றுக்கு 2ஆம் கருத்தொன்று இருக்க முடியாது. இந்தக் களப்பரர் ஆட்சிக் காலத்தை இந்து (தத்துவ) மெய்யியல் வரலாற்று ஆசிரியர்கள் இருண்ட காலமெனக் கூறினாலும் அது தமிழனின் பொற்காலம் என்று கூறவேண்டும். ஏனெனில் களப்பிரர் பின்வந்த பல்லவர்களும் சரி தமிழ் வேந்தரும் சரி சாதிய (வர்ணாச்சிரம) மேலாண்மைக்குப் பக்கபலமாய் நின்று வடமொழி (சமற்கிருதம்) வரவிற்கும் வடநாட்டுத் தெய்வங்களான விநாயகர், சரஸ்வதி, இலக்சுமி, சுப்பிரமணியன் துர்க்கை இராமன் கிருச்ணன் அனுமான் போன்றோரின் வரவிற்கும் வழிவகுத்தனர். அவர் சார்ந்த பௌத்த, சமண, மதத்தார் தமிழ்ப் பண்பாட்டைப் பேணி ஆக்கிய ஆக்கங்களை அழித்தொழித்தனர். பாண்டிய மன்னன் ஒருவன் சமணத் துறவியர் யாத்த 8000 ஏட்டுச் சுவடிகளை ஆற்றிலிட்டு அழித்தான். அதில் எஞ்சியதே இன்று நாம் காணும் நாலடியார் என்னும் நூல் அத்தோடு சமண, பௌத்த ஆசிவக மதங்களின் வரவால் தமிழ்ப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாட்டில் **நிலையாமை, கொல்லாமை, வாய்மை, அகிம்சை,** போன்ற கருத்துக்கள் வேரூன்றின. வைதீக வேத வரவு சிறுதெய்வ வழிபாடுகளையும் ஆய்வுக்குட்படாத மூட நம்பிக்கையின் ஈடுபாட்டை வளர்த்தது. அத்தோடு தமிழ்க் குழுக்களிடையே காணப்பெற்ற நம்பிக்கை, வழிபாடு, நிலையாமை, கொல்லாமை, வாய்மை போன்ற கொள்கைகளை வைதீக வேத மரபுடன் இணைத்தனர். **படைத்தல்,** காத்தல், **அழித்தலுக்கு** உரித்துடைய **தமிழனின்** முழுமுதல் தெய்வம் சிவனை **அழித்தல்** கடவுளாக்கி, படைத்தலுக்குப் பிரம்மா, காத்தலுக்கு விச்ணுவும் என்றாக்கி முருகனை சுப்பிரமணியனுடனும், கொற்றவையைத் துர்க்கையுடனும் சேர்த்துப் பெயர் மாற்றம் செய்து தம் தெய்வங்களோடு பொருத்தினர். இச் சூழலின் வேதமரபாரின் சாதியச் சிந்தனைகளை மநுச் சட்டங்கள் மூலமாக தமிழ் நாட்டில் புகுத்தினர். இதனால் தமிழ் மக்கள் ஒரு கருத்துக் குழப்ப நிலைக்கு ஆளாகினார்கள். இந்நிலையை **மணிமேகலை** என்னும் நூலின் **சமயக் கணக்கர்** தந்திரம கேட்ட **காதையில்** இந்தியத் துணைக் கண்டத்தில் உருவான பல்திறச் சிந்தனைகளும் தமிழ் மண்ணின் கருத்துப் போர் நிகழ்த்தியதையும் தமிழர் ஒரு சமயம் என்றில்லாமல் தமக்கு ஏற்புடைய கருத்தியல்களை ஏற்றுக் கொண்டு **பௌத்தராக, சமணராக, ஆசிவகராக,** உலகாயிதராக, **சைவராக, வைணவராக, வைதீகராக, இசுலாமியராக, கிறீஸ்தவராக** வாழ்ந்தார்கள். இன்றும் வாழ்கிறார்கள். தமிழ் மரபின் மனித நேயமதிப்புக்களிலே (விழுமியங்களில்) காலூன்றி உலக மரபுகளின் உயரிய பண்புகளை உள்ளடக்கிய உலகு வாழ் மாந்தனுக்குப் பொதுவானதாகத் தன்னை வெளிப்படுத்தும் நூல்தான் திருக்குறள். இது மக்கள் நலனைக் காப்பதில் அரசு உட்பட எல்லாக் கூறுகளுமே எப்படிச் செயற்பட வேண்டுமென்பதை தெளிவுபட எடுத்தியம்புகின்றது. வேதமரபு பௌத்தம், சமணம், ஆசீவகம், உலகாய்தம், வைதீகம், சைவம், வைணவம், கிறீத்தவம் போன்றவற்றின் கருத்துக்களை நியாயப்படுத்துவதோ அல்லது அதற்கு உரிமை கோருவதோ குறளின் எடுகோளல்ல. வள்ளுவர் கால மூவேந்தர், குறுநில மன்னர், வேளீர் போன்றோரிடை ஏற்பட்ட போர்ச் சூழல் தங்களைத் தாங்களே அழித்துக் கொண்ட தமிழினம் இதன் விளைவால் ஏற்பட்ட ஏழ்மை, பாரத்தமை போன்றவற்றையும், வடமொழியாளரின் சாதி வேற்றுமை பொய்யான கூற்றுக்கள் (நிலத்தேவர்) அவர் மொழி (தெய்வமொழி), இழிவுக்கதைகள் போன்றவை தமிழரிடை பரப்புவதைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடுக்கவுமே எழுந்த நூல் திருக்குறள். ஆரிய வேத மரபின்படி

(1) வேள்விகள் (யாகம்) செய்வது அரசரின் எல்லா வகையான வெற்றிக்கும் தேவையானதொன்றாகக் காட்டப்பெற்றது.

(2) உழவுத் தொழில் இழிவான தொழில் என்றும் இதை உயர் சாதியர் செய்யக் கூடாதென்றும் வைசியர் மட்டும் செய்யலாம் என்றும்

(3) கல்வி பிராமணர் சத்திரியர் (அரசர்)க்கு மட்டுமென்றும

(4) அரசர் போர் புரிவது, சூதாடுவது, கொடை வழங்குவதென்றும் கொள்ளப் படுகின்றது.

(5) மானத்தைவிட உயிர் மேலானதாகக் கொள்ளப்பட்டது.

(6) பெண்கள் இழிவுப் பிறவிகள் என்றும் அவர்களுக்கு வீடுபேறு துறவு இல்லை என்றும் வலிந்துரைத்தது.

இவற்றை அடிப்படையாகக் கொண்டதே மநு அறம்.(தர்மம்) அத்தோடு படைக்கும் தெய்வத் (பிரம்மா)தின் முகத்திலிருந்து (வாய்) பிறந்தவன் பிராமணன் என்றும், அவனுக்குத்தான் இவ்வுலகம் உரித்துடையது என்றும் அவன் பெறுவது எல்லாம் முன்னோர் காலத்தில் அவனால் கொடுக்கப் பெற்றது என்றும் அவனது இரக்கத்தாலேயே மற்றவர்கள் வாழ்கின்றார்கள் என்றும், மநு 1.101 கூறுகிறதாம். படைக்கும் கடவுளின் தோளால் பிறந்தவன் சத்திரியன் என்றும் (அரசன்) கடவுளின் வயிற்றிலிருந்து பிறந்தவன் மூன்றாம் சாதிக்காரன் (வைசிகன்) வணிகம், ஆநிரை காத்தல் இழிதொழிலாகிய உழவுத் தொழில்களைச் செய்ய வேண்டும். கீழ் சாதிக்காரனாகிய சூத்திரன (தமிழன்) கடவுளின் காலடியால் பிறந்தவன் என்றும் அவன் மேற்குறிப்பிட்ட மூன்று சாதிக்காரருக்கும் எந்த முணுமுணுப்புமின்றித் தொண்டு செய்ய வேண்டுமாம் (நிக்காமிய கர்மம்). இக் கோட்பாடுகள் திருவள்ளுவரை மிகவும் துன்புறுத்தியிருக்க வேண்டும் எனவே தான் இந்த வைதீக ஆரிய வேத மரபின் மேலாண்மையைச் சீண்டும் வகையிலும், சூத்திரருக்கு அறிவூட்டும் வகையிலும் திருக்குறளை இயற்றினார் எனலாம். முதலதிகாரமாம் "இறை வணக்கத்திலே" (கடவுள் வாழ்த்து) நற்றாள், மானடி, இலானடி, தாள், இறைவனடி என்று ஏழு குறள்களிலே சூத்திரன் பிறந்த அக்காலடியைப் போற்றி அதனைத் தெய்வ நிலைக்கு ஆக்குகின்றார். முகத்திலோ, தோளிலோ, வயிற்றிலோ அல்ல தாளிற்றான் உலகம் உய்ய வழி உண்டென்னும் மெய்யியலை முன் வைக்கின்றார். எனவே வள்ளுவரின் சிந்தனைப் புரட்சிக் கிளர்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆழ்வினை உடைமை" என்னும் அதிகாரத்தில்

மடியுளான் மாமுகடி என்ப மடியிலான்
தாளுளாள் தாமரையினாள் (குறள் 617)

சோம்பேறியான மூதேவியிடமல்ல. முயற்சியுடையவனின் காலடியில்தான். செல்வத்துக்குரியவள் (திருமகள்,இலக்சுமி) வாழ்கிறாள். என்று கூறி அவர்கள் விண்ணிலல்ல வாழும் மானிடன் காலடியில் இருக்கிறாள் என்கிறார். இறைநிலை (இயற்கை) கனிமங்களித் தூங்கி, மரம் செடி கொடியில் அசைந்து விலங்கு புள் (பறவை) போன்றவற்றில் நடந்து, மாந்தனில் சிந்திக்கின்றது. எனவே தான் சிந்தித்து வாழ்வாங்கு வாழ்பவனை முதலதிகாரத்தில் வைத்தார். பகவன் - பகிர்ந்தளிப்பவன், வாலறிவன் - கல்வி, கேள்விகளில் சிறந்தவன் (குரு), மலர்மிசை ஏகினான்- "அவனா அவளா அவர்கள் நடக்கும்போது பூல்கூட சிலும்பாதே" (பக்குவப்பட்டவர்), வேண்டுதல் வேண்டாமை இலான்- பற்றற்றவன், இறைவன் - சட்டங்கள் இயற்றி நீதிவழுவாது ஆள்பவன.

நல்லியல்புகளுடைய தலைவன் - ஐந்தவித்தான் - ஐம்பொறிகளால் ஏற்படும் உணர்வுகளை அடக்குபவன், தனக்குவமை இல்லாதவன். வாழ்வாங்கு வாழ்பவன், அறவழி அந்தணர் - அறவர், எண் குணத்தார்- எண்ணுகின்ற எண்ணற்ற நற்குணங்களையுடையவன், போன்ற உயிருள்ள மாந்தரையே வள்ளுவர் தனது பத்துக் குறள்களிலும் குறிக்கின்றார். அத்தோடு வள்ளுவர் யாரைத் தெய்வமாகப் பார்க்கின்றானர்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும் (குறள் 50)

தெய்வத்தான் ஆகாதெனினும் முயற்சித்தன்
மெய்வருத்தக் கூலிதரும் (குறள் 619)

குடிசெய்வல் என்னும் ஒருவருக்குத் தெய்வம்
மடிதற்றுத்தான் முந்துறும் (குறள் 1023)

தெய்வம் தொழாள் கொழுநற்றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை (குறள் 55)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயப்படா அது அகத்துணர்வனைத்
தெய்வத்தோடொப்பக் கொளல் (குறள் 702)

வள்ளுவர் பார்வையில் வாழ்வாங்கு வாழ்பவனையும், கொழுநன் இல்லாள் (தலைவன் தலைவி) இருவரையும், முயற்சியாளனையும், குமுகாயத்தொண்டனையும், ஐயம் அற்றவனையும் (தெளிந்த சிந்தனையாளன்) தெய்வநிலைக்கு உயர்த்துகிறார். தொழுதற்கு உரியவர் யாரெனச்சுட்ட,

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும் (குறள் 260)

இளவரின் வாழாத மானமுடையார்
ஒளிதொழுது ஏத்தும் உலகு (குறள் 970)

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின் செல்பவர் (குறள் 1033)

இங்கு தொழுதலென்பது பாராட்டுதலை, புகழ்தலை, மதித்தலையே குறிக்கும். விழுந்து கும்பிட்டு வணங்குவதல்ல. எனவே கொலை செய்யாதவனை, புலால் உண்ணாதவனை, மான இளிவுவரின் அதற்கு நாணி தன் வாழ்வை முடித்துக் கொள்பவனை, உழவனை உலகத்தார் பாராட்டுவார்கள். மதிப்பார்கள், புகழ்வார்கள் என்பதனையுமே வள்ளுவர் உணர்த்துகின்றார். அத்தோடு சாதிய மேலாண்மையை ஒடுக்க,

பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமைகள் (குறள் 972)

பிறப்பு எப்படி எல்லோருக்கும் பொதுவானதோ அதேபோல்தான் தொழிலுமென்கின்றார். அன்றைய ஆரிய வேத மரபின் வழி வேள்விகள் (யாகம்) பெரிய குண்டுகள் (குண்டம்) அமைத்துத் தீ மூட்டி அதில் குதிரை (அசுவ) ஆ (பசு) போன்றவற்றை இட்டுப் பொசுக்கி உண்ணும் வழக்கம் இருந்தது. இதை எதிர்த்தே வள்ளுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவிசொரிந்து ஆயிரம் வேட்டலில் ஒற்றன்
உயிர் செகுத்து உண்ணாமை நன்று (குறள் 259)

என்றார். உழவுத்தொழில் இழவானதென்றும் இதை மூன்றாம் சாதியார் (வைசிகர்) செய்ய வேண்டுமென்றும் வேதமரபு கூறியதால் உழவுக்கென்று 104 ஆம் அதிகாரத்தை ஆக்கி பத்துக் குறள்களாலும் உழவனை உழவுத் தொழிலைப் போற்றி அவன்தான் உலகில் வாழத் தகுதியுடையவனென்றும் மற்ற உயர் சாதியரும் அவன் பின்தான் செல்ல வேண்டுமென்றும் கூறுகின்றார். கல்வியும் பிராமணர் அரசர்க்கு என்பதற்கு எதிராகவும் எல்லா உயர்திணை உயிர்களுக்கும் கல்வி கண்ணுக்கு ஈடானதாகப் பறைசாற்றி அதற்கும் தனி அதிகாரம் வைத்தார்.

எண்ணென்ப ஏனைஎழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழுமுயிர்க்கு (குறள் 392)

மானம் பற்றிக் கூறவந்த வள்ளுவனார் அதற்கும் ஒரு தனி அதிகாரம் வைத்து மானத்தைவிட உயிர்தான் உயர்வானது என்றும் வேதமரபார் கொள்கைக்கு மாறாக

மயிர் நீப்பின் வாழாக் கவரிமான் அன்னார்
உயிர் நீப்பர் மானம் வரின் (குறள் 969)

என்றவாறாகக் கூறி உயிரை விட மானம் தான் உயர்வானதெனச் செப்புகின்றார். இந்த வைதீக வேத மரபாரிடம் சிக்குண்டதாலேயே தமிழ் மன்னர்கள் (சேர, சோழ, பாண்டியர்) வேளிர், குறுநில மன்னர் தம்முள் முரண்பட்டு தமிழினத்தைத் தாமே சின்னாபிக்கப்படுத்தி கொன்று குவித்தார்கள் போர் அரசர் அறமென்று கற்பிக்கப்பட்டதனாலன்றோ. இந்தத் தன்னின அழிப்பு இன்றும் கூட மக்களாட்சி என்னும் போர்வையில் இந்த ஆரிய மரபார் தமிழனை எடுப்பார் கைப்பிள்ளையாக்கி சின்னாபின்மாக்கி அவன் ஒற்றுமையை வலுவிளக்கச் செய்து வல்லாண்மை செய்கின்றனர்.

கரிகால் பெருவளவனுடன் ஏற்பட்ட போரிலே முதுகில் விழுப்புண்பட்டு தோற்றுவிட்டான் மன்னன் சேரலாதன் இது தன்மானத்திற்கு ஏற்பட்ட இழுக்கென்று நாணி வடக்கிருந்து உயிர்விடுகின்றான். இவ்வெற்றியைக் கொண்டாடிய பெரு வளவன் அவையிலே **வெண்ணிக்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குயத்தியாரென்னும பெண்பாற் புலவர், உன் வெற்றியைவிட மானத்திற்காக தன்னுயிர் நீத்த சேரலாதன் மேலானவனென்று புகழ்கின்றார். (புறநானூறு 66) இதுதான் பண்டைத் தமிழன் பண்பாடு. ஆரிய வேதமரபு போர் செய்வதும், சூதாடுவதும் அரசர் (சத்திரியர்) அறம் (தர்மம்) என்கிறது. ஆனால் வள்ளுவரோ சூதிற்கும் ஒரு தனி அதிகாரம் வைத்து அழிவிற்கும் வீழ்ச்சிக்கும் ஒரு காரணியாகக் காட்டுகிறார்.

பழகிய செல்வமும் பண்பும் கொடுக்கும்
கழகத்துக் காலை புகின் (குறள் 937)

என்ற குறள் மூலம் வாழ்வின் வளத்தின் பண்பின் சரிவைச் சுட்டுகிறார். போரிடுதலையும் வள்ளுவர் ஏற்றுக் கொள்ளவில்லை. இறைமாட்சியில் அரசன் எப்படித் தன்நாடு மக்களை காக்கவேண்டும் என்பதையே வரையறை செய்கிறார். "போர் அறம்" என்ற சூழ்ச்சிக் கூற்றால் தென்நாட்டில் மறவர் மடிவு, மக்கள் அழிப்பு, சொத்துக்கள் அழிப்பு ஆநிரை பெண்கள் சூறையாடல், போன்ற இன்னோரன்ன துன்பங்கள். இங்கு ஒட்டு மொத்தமாக அழிந்தது. தமிழர்களும் அவர் தம் சொத்துக்களுமே அந்தளவிலும் போர் வெறி அடங்காமல் வென்றவன் தோற்றவனுடைய பயிர் செய் நிலங்களை (நன்செய்) கோட்டை மதில்களை கழுதை கொண்டு உழுது எருக்கலை விதைத்தானாம். ஏனெனில் இனி எந்த வாழ்வுப் பயிரும் இந்நிலத்தில் வளரக்கூடாது, பயிரிடக் கூடாது என்ற வெறி. போர் அறம் (தர்மம்) என்ற நிலையில் தமிழன் தமிழனால் அழிக்கப்பட்டதும் தமிழன் பொருள் தமிழனால் சூறையாடப்பட்டதுமே 2000 ஆம் ஆண்டுகளுக்கு முற்பட்ட நிலையுமாகும் இதைத் தடுத்து நிறுத்தி தமிழ் வேந்தரை ஒன்று பட வைக்க எழுந்ததே இளங்கோவடிகளின் சிலப்பதிகாரம்.

வேத மரபின் பெண் இழிவுக் கருத்துக்களுக்கு எதிராகப் பல முற்போக்கான புரட்சிக் கருத்துக்களை திருக்குறள் முழுவதுமே பரக்க விட்டுள்ளார். (இது விரிக்க நீளும்)

பெற்றான் பெறின் பெறுவார் பெண்டிர் பெருஞ்சிறப்பு
புத்தேளிர் வாழும் உலகு (குறள் 58)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று மொழிகின்றார். எல்லாவகையிலும் தன்னோடேத்த நற்குண நற்செயற்க் கணவன் கிடைக்கப் பெற்றால் மற்றவர் கூறும் மறுமையில் (விண்) கிடைக்கும் இன்பக்களிப்பை புது இணையர்போல் இம் மண்ணுலகிலேயே பெறுவார் என்பதாகச் செப்புகிறார். வள்ளுவர் காட்டுவது, "இல்லாத ஊருக்குத் தெரியாத வழியை அல்ல". மேலுலகமென்றும், விண்ணுலகமென்றும், மறுபிறவி என்றும் பலர் பலவாறு கூறுகின்றனர், அங்கு இன்ப வாழ்வு முடிவிலா மகிழ்ச்சி என்கின்றன. வள்ளுவரோ விண்ணை மண்ணில் காட்டுகிறார். அறம், பொருள், இன்பம், வீடுபேறு (மறுமை)என்று பல் சமயத்தாரும் காட்ட வள்ளுவரோ அறத்துடனான இன்பம் அறத்துடனான பொருள் அறத்துடனனான அறம் என்று காட்டுகிறார். இன்ப மகிழ்ச்சி விண்ணிலல்ல மண்ணில்தான் என்பதை ஐயம் திரிபுக்கு இடமின்றி எடுத்தாள்கின்றது திருவள்ளுவரின் வேதம்.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு (குறள் 642)

மக்கள் குமுகாயத்தின் ஒட்டுமொத்த நலனுக்கான அடிப்படைப் பகுத்தறிவுக் கூறே இந்த மெய்ப்பொருள். திருக்குறள் பற்றிக் கூற வந்த தமிழ் நேயம் (தமிழ்நாடு) சிற்றிதழாசிரியர் "ஞானி" அவர்கள் அறத்தின் பால் வள்ளுவன் கொண்ட அன்பு, உண்மை பற்றிய தேடல் போற்றுதற்குரியது. குமுகாய முரண்பாடுகள் முற்றிய நிலையில் ஒரு குமுகாயம் இன்னொரு குமுகாயத்தை மேலாண்மை செய்ய வெளிப்படும் நிலையில், அச்சூழலில் வைத்துப் பார்க்கும்போது வள்ளுவனின் மக்கள் சார்பை நீதியிடம் கொண்ட வேட்கையை அன்பிடம் கொண்ட நேயத்தை விளங்கிக் கொள்ள முடியும். கடவுள் என்பது அன்பு, அறத்தினூடான ஓர் உணர்வு நிலை மட்டுமே என்கின்றார். குறளின் பார்வை பரந்துபட்டது. தன் அறிவினால் தனது முடிவை மேற்கொள்ளும் உரிமை மாந்தனுக்கு உண்டு.

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டிப் பரந்து
கெடுக உலகு இயற்றியான். (குறள் 1062)

இக்குறள் ஒரு மேலாண்மைக் குமுகாயம் அல்லது அரசுக்கு எதிராய் அமைந்த நிலைப்பாட்டையே சுட்டுகின்றது. இங்கு இயற்றியான் என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டம் கவிதை போன்ற மாந்தனால் செய்யப்பெறும் செயலைக் குறிக்கும். என்றும் அரசேர், அரசனோ தான் அந்நாட்டின் வாழ்வியல் கொள்கைகளை இயற்றினான். எனவே ஒருவன் தன் ஏழ்மையின் காரணமாக இரக்கப் புகுகின்றான் என்றால் அதற்கு அந்நாட்டு அரசே முழுப்பொறுப்பும் உடையது. எனவே இப்படியான ஒரு தனி மனிதனை வாழவைக் முடியாத அரசு அழிந்து போகட்டும் என்று வைகிறார். அதாவது இப்படியான ஒரு அரசு, அரசனுக்கு எதிராக மக்கள் கிளர்த்து எழுந்து புரட்சி செய்யவேண்டும் என்பதுதானே இதன் பொருள். இது குடிமக்கள் சார்ந்த ஒரு புரட்சிக் கருத்தேயாம். 19ம், 20ம் நூற்றாண்டிலேயே மாந்தன் அறிவியலில் கல்வியியலில் என்றுமில்லாதவாறு முன்னேறிய காலச் சூழலிலேயே கால்மார்ச்சு, லெனின், மாசேதுங், சேக்குவாரா போன்ற பல சமத்துவ சமவுடைமைவாதிகள் தோன்றினார்கள் ஆனால் 2000 ஆம் ஆண்டுகளுக்கு முன் புரட்சி வாதியாகச் சமத்துவ சமவுடைமை வாதியாக தமிழ் மண்ணில் பூத்த தமிழினத்தின் மீட்பர் திருவள்ளுவர். இதே காலகட்டத்தில் இச்ரவேல் மண்ணில் வேதபாரகர் பரிசேயர் போன்ற மேலாண்மை வாதிகளை எதிர்த்து சமத்துவம் காண விளைந்தார். இயேசு கிறீத்து (விரிக்க நீளும்.) கிறீத்து பிறந்த ஆபிரகாம் தலைமுறையினரின் முன்னோர் நாவலந்தேயமாகிய இந்திய மண்ணிலிருந்து புலம்பெயர்ந்தவர் என்றும் (தமிழர்) சில வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

அன்றைய பெண்ணிழிவை, சாதிய மேலாண்மையை உடைத்து, மூட நம்பிக்கைகளுக்கு ஆப்பு வைத்து, மறுமை என்னும் மாயையை நெறி கெட்ட வாழ்வைச் சீர் செய்ய, இனம் மொழி, நாடு, ஆண், பெண் என்ற எல்லைகள் கடந்து விண்ணை மண்ணில் காட்டிய அன்பின் அறத்தின் ஒழுக்கத்தின், பண்பின் உச்சி திருக்குறளே. ஆனால் 2000 ஆம் ஆண்டுகளின் பின்னும் தமிழனின் நிலை என்ன? வள்ளுவன் சீர்செய்ய முற்பட்டது நிறைவேறியதா? தமிழனின் இன்பியல் துன்பியல் நிகழ்வுகளில் தமிழ் உண்டா? அல்லது தமிழ்த் தெய்வங்களுக்கு முன்னுரிமை உண்டா? அவர்கள் அவர்களின் தமிழ்ப் பெயர்களால் போற்றி (பூசனை) செய்யப் பெறுகின்றனரா? இல்லையே ஏன்? இன்னும் இந்த மேலாண்மை உணர்வுகள், செயற்பாடுகள் வைதீகத் தேவாரியாரின் கொள்கையில் தமிழ் தீட்டு (நிச) மொழி இன்று வரை தமிழனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வில் வைதீக மரபேதான். வேதவாரியாரால் உள்வந்த விநாயகர், இலக்சுமி, சரஸ்வதி, கிருச்ணன், அனுமான், துர்க்கை, இராமன் போன்ற முப்பத்து முக்கோடி தேவர்களையும் வணங்குகின்றனர். தவறில்லை. இது மாந்தனின் அடிப்படை உரிமை. ஆனால் உலகம் முழுவதும் பரந்துபட்டிருக்கும் பல் சமயத்தாரும் அவர்தம் கடவுளாரைப் போற்றியை (பூசனை) அவர்களின் இன்பியல் (திருமணம், புதுமனைப் புகுதல் போன்றன), துன்பியல் (இறப்பு, நினைவுகூரல் போன்றன). நிகழ்வுகளை அவர்களின் தாய்மொழியில் நடத்துகின்றனர். ஆனால் தமிழச் சைவர்களின் நிலை!

சோழ இளவரசன் அருள்மொழித்தேவர் இவருக்கு முடிசூட்டுவிழா அரசவைப் பிராமணர்கள் இதற்கு உடன்படவில்லை. ஏனெனில் இவனது பெயர் தூய தமிழப்பெயர். தீட்டமொழிப் பெயர், இதனால் மறுப்பு. இளவரசன் அருள்மொழித்தேவர் இராசராசனாகத் தன் பெயரை வடமொழியில் மாற்றிக் கொண்டான். முடிசூட்டப்பெற்றான். இது வரலாறு, அதே போன்று தமிழ்க் கடவுளரும் தீட்டுமொழிப் பெயர்களை மாற்றிக் கொண்டனர். சிவன் மும்மூர்த்தி ஆக்கப்பெற்று, பிரம்மா (படைத்தல்), விஷ்ணு (காத்தல்), உருத்திரன் (சிவன் அழித்தல் மட்டும்) என்கின்றனர். முருகனை சண்முகன் சுப்பிரமணியன் என்றனர். கொற்றவையை துர்க்கை என்றனர். இது அன்று அரசனுடன் சேர்ந்த மேலாண்மைத் திணிப்பு. இன்று அன்றைய மேலாண்மை அரசனுடன் சேர்ந்த திணிப்பு எள்ளளவும் இல்லை. தமிழன் முறுக்கி விட்ட பம்பரம் போல் சுழல்கிறான். முடிவு வருமா? இன்று பிறக்கின்ற குழந்தைக்குப் பெயரிடும்போது இலக்கணம்தான் இல்லை. ஆனால் வடசொற்களை வட எழுத்துக்களைப் புகுத்துவதில் எவ்வளவு நாட்டம். தந்தை பெயரின் முதல் எழுத்தை ஆங்கிலத்தில் எழுதுவதில் எவ்வளவு அக்கறை வேறெந்த மொழிக்காரனாவது தமிழ் எழுத்தைத் தம் மொழியுடன் புகுத்திப் பெயர் வைப்பானா? நடக்காது சிலர் தம் பல்கோணப் பார்வையில் இதைக் குறுகிய நோக்கு என்றும் சொல்லக் கூடும். உலகத்தையே சிற்றூராக்கித் தம்மேலாண்மையைச் செலுத்த இந்தியன் அமெரிக்கன், யப்பானியன், சீனன், நினைக்கும்போது தமிழன் தன் மொழி பற்றிச் சிந்திப்பது தவறா?

சிந்தனையாளர் அடிகள் (சுவாமி) விவேகானந்தர கூறுகிறார்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உண்மைச் செய்திகளை அறிந்து கொள்ளக் கூடிய வரலாற்று ஆய்வின் சிறப்பை மக்கள் மிகவும் குறைத்து மதிப்பிடுகின்றனர். முடிவு நல்லதாயின் வழி கெட்டதாயினும் தவறில்லை என்கின்றனர். உண்மையை ஆராய்ந்து உணரவேண்டும் என்ற எண்ணம் இல்லாமல் மூடநம்பிக்கையை அப்படியே ஏற்றுக் கொள்வது தொன்று தொட்டு எம் மரபாய் உள்ளது. உண்மையில் மட்டுமே உங்கள் பார்வையைப் பதிக்க வேண்டும். பிற மூடநம்பிக்கைகளில் இருந்து அறவே விலகியிருக்க வேண்டும்." இதனையே திருக்குறளும் பறைசாற்றி நிற்கின்றது.

அண்மையில் தலைநகரில் (கொழும்பு) நடைபெற்ற ஓர் ஆடற் கலை அரங்கேற்றத்திற்குச் சென்றிருந்தேன். அங்கு நடவரசனின் (நடராசர்) சிலையை மேடையில் அழகுபடுத்தி வைத்திருந்தனர். ஆடற் கலையின் முதல்வனும் தமிழனின் முழுமுதற் கடவுளும் படைத்தல், காத்தல் அழித்தலுக்கு உரித்துடையவனுமாகிய நடவரசனுக்கே போற்றி செய்யப் பெறுமென்று எதிர்பார்த்தபோது "விநாயகர் போற்றி" ஓதப்பெற்றது. ஆடலரங்க நிறைவிலும் "சிறிராமமங்களமே' இசைக்கப்பெற்றது. அவர்களுக்கும் ஆடற்கலைக்கும் தொடர்புண்டா? தமிழர் கலை, தமிழர் பண்பாடு என்று மேடையில் முழங்குகின்றோம். தமிழக் கடவுளர் முதன்மைப் படுத்தாத நிலை. தமிழ் இல்லாத தமிழர் கலை ஏற்புடையதா? எப்போ உணரப்போகிறோம். திருக்குறளைப் போற்றுவோம். பகுத்தறிவை வளர்ப்போம். தனித்துவமான தமிழர் பண்பாட்டில் உயர்ந்து நிற்போம். திருக்குறளுக்கு என்றுமே வேண்டாம். இன, மத, நாடு, ஆண், பெண் என்ற மூலாம்கள்.

வாழ்க தமிழ்! வளர்க பகுத்தறிவு !! மறு மலர்ச்சி பெறுக
தமிழர் பண்பாடு !!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழருக்குத் தமிழ்ப் புதியவாண்டுத் தொடக்கம் தைத்திங்களே

சுழன்றும் ஏர் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை (கு.1031)

இது நம் தமிழ் மறையோனின் பொன் போன்ற, பொருள் பொதிந்த நிறைமறை மொழியாம். இன்றைய அறிவியல் உலகிற்கு இது ஏற்புடையதா? உழுதவன் கணக்குப் பார்த்தால் உழவுக் கூலியும் மிஞ்சாது என்பது ஒரு சொல் வழக்கு. ஆக உழவுக்கு ஏற்றமில்லை. கணினிக் கல்வியில் கைநிறையக் காசு என்ற கனவில் உலகம் மிதக்கிறது. ஆனால் நாம் என்னதான் உயர உயரப் பறந்தாலும் உயிரைக் காப்பதும் வளர்ப்பதும் இவ் உழவேயாகும்.

ஆயிரமாயிரம் அறிவியல் கண்டுபிடிப்புக்கள், உருவாக்கங்கள், புத்தம் புது தொழில்கள் தோன்றலாம், மாறலாம், மறையலாம். ஆனால் அன்றும் இன்றும் என்றும் மாறாத இன்றியமையாத ஒரே தொழில் உழவு மட்டுமே. எனவே உலகம் எப்படி உழன்றாலும் உழவே தலையாம். பழம் தமிழ் காலம் தொட்டு இன்று வரை அரச ஆட்சிக்குரிய வருவாயின் பெரும் பகுதி இதுவேயாகும். இன்று நடைமுறையில் உள்ள இரு பெரும் பருவங்களான சிறுபோக வேளாண்மை, பெரும்போக வேளாண்மை அல்லது வானாவாரி வேளாண்மைகளேயாகும். பெரு விளைவைத் தந்த வானாவாரி பயிர்ச் செய்கையினால் உழவர்தம் உள்ளமும், இல்லமும் நிறைந்திருக்கும். இக்காலப்பகுதியிலேயே ஆட்சியாளர்கள் தமக்குச் சேரவேண்டிய நிலவிளைவு வரியை மக்களிடமிருந்து அறவிட்டார்கள். இக்காலப்பகுதியை வரி அறவிடும் காலமென்றும் குறிப்பிட்டனர். எனவேதான் வானாவாரி அறுவடை தொடங்கும் காலம் வேளாண் ஆண்டின் தொடக்கமாகக் கொள்ளப்பட்டது. அத்துடன் ஒரு அரசன் முடிசூடிய ஆண்டு ஆட்சியாண்டாகவும், வானாவாரி அறுவடை தொடங்கி வரி அறிவிடும் காலத்தை வேளாண் ஆண்டுத் தொடக்கமாகவும் இரு ஆண்டுத் தொடக்க நடைமுறை பழம் தமிழ்க்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்திலே நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது. இவற்றைச் சங்க இலக்கியங்கள், கல்வெட்டுக்கள், செப்புப்பட்டயங்கள் மூலமாக அறிய முடிகிறது.

பேராறுவடையாகிய வானாவாரி பருவ பயிர்களின் அறுவடைக்காலம் தைத்திங்களையே சார்ந்து முன் பின் தொடங்குவதாலும், வேளாண்மையே அன்றைய இன்றைய பெரும் தொழிலாகவும் அடிப்படைத் தொழிலாகவும் இருப்பதாலும் ஞாயிற்றின் வடதிசைச் செலவு தைத்திங்களில் தொடங்குவதாலும், மேழவிழுவைத் தழுவியதாகவும் இருப்பதால் தை முதல் நாளே பண்டைத் தமிழர் ஆண்டின் முதல் நாளாகக் கொண்டிருந்தனர் எனலாம். இது மண்ணின், மொழியின் மைந்தர்களின் புதுவருவாய்க்கான காலமாகையால் தை முதல் நாளை ஆண்டின் முதல் தொடக்க நாளாகக் கொள்வதில் வியப்பொன்றும் இல்லையே! இதுவே இன்றும் இயற்கையோடு இணைந்த வாழ்வுக்கும், அறிவுக்கும் ஏற்புடையதாகும்.

எமது வாழ்வில் திரும்பப் பெறமுடியாதவை உயிர், மானம், காலம் ஆகிய மூன்றுமாம். குடும்பம், குமுகாயம், (சமுதாயம்) ஊர், நகர், நாடு, உலகம் பற்றி அறிய வேண்டின் அதற்குக் காலவளவு போன்றன மிகவும் இன்றியமையாதனவாகும். நம் முன்னோர் **காலத்தை நொடி, நாளிகை, நாள், கிழமை, மாதம், ஆண்டு, ஊழி என்று வானியல்** முறைப்படி வரையறை செய்துள்ளனர். **இது போலவே 60 நாளிகையை ஒரு நாளென்றும், ஒரு நாளை வைகறை, காலை, நண்பகல், ஏற்பாடு, மாலை, யாமம் என்று சிறு பொழுதுகளாகவும், ஓர் ஆண்டை இளவேனில், முதுவேனில், கார், கூதிர், முன்பனி, பின்பனியென்றும் ஆறு பெரும்** கூறுகளாகவும் பிரித்துள்ளனர். இப்படிக் குறுகிய காலக் கணக்கீடுகளில் கவனம் செலுத்தியவர்கள் வாழ்க்கை வரலாற்று நிகழ்ச்சிகளை எமது மொழி, இனம், நாடு ஆகியவற்றுக்குப் பொதுவான தொடர் ஆண்டுக் கணக்கால் குறிப்பிடும் வழக்கத்தைப் பின்பற்றவில்லை என்பது வியப்பாகவும், வருத்தம் தருவதாகவும் உள்ளது. இருப்பினும் நம் முன்னோர்கள் இரண்டாயிரமாண்டுக்கு முன்னரே பல ஆண்டுக் கணிப்புக்களைக் கொண்டிருந்தனர். குறிப்பாக "உவா மாத **ஆண்டு**, ஞாயிறு உடுமாத **ஆண்டு**, வியாழன் மாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு, திங்கள் ஞாயிறு உவா மாத ஆண்டு, தொல்காப்பிய ஆண்டு, மலையாள பரசுராம ஆண்டு, திங்கள் உடு மாத ஆண்டு, வெப்ப மண்டில ஆண்டு" போன்றவையாகும். உவா மாத ஆண்டு முறையானது ஒரு காருவா (அமாவாசை) நாளிலிருந்து அத்த காருவா வரையிலான நாட்களை உள்ளடக்கிய மாதமாகும். ஒரு நாள் வேற்றுமை ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதன் நீட்சி 29 நாள் 12 மணி 44 நியமம் (நிமிடம்) ஆகும்.

ஞாயிறு 27 நாண் மீன்களூடாகப் பெயர்ந்து ஒரு சுற்றுக்கு எடுக்கும் 365 நாள் 9 நியமம் 9.6 நொடி காலத்தை உள்ளடக்கிய நீட்சியே ஒரு "**ஞாயிற்றாண்டாகும்**". ஞாயிற்று மாதங்களை மேழவிழுவையும் குறிப்பிட்ட நாண்மீனையும் நிலையாக வைத்து மேழவிழுவிலிருந்து பெயர்ந்து செல்லும் ஞாற்றைக் கொண்டு கணித்தனர். இம்முறையானது கடைச்சங்க காலம்வரை நடைமுறையில் இருந்ததென்பதை 12 ஓரைகளில் ஒன்றாகிய "**ஆட்டை (மேழம்)**" முதலாவதாக "**நெடுநல்வாடை**" குறிப்பதன் மூலம் அறியலாம். வானியல் கணிப்பு முறையும் இரு வகைப்படும். ஒன்று ஞாயிறை உடுக்களோடு மட்டும் தொடர்புபடுத்துவது. மற்றையது மேழவிழு முன்னுறலை ஞாலப் பருவங்களுடன் ஞாயிற்றைச் சார்புபடுத்துவதாகும். விண்மீனைக் குறிக்கும் மேழமே தொன்றுதொட்டு முதலோரையாகக் கொள்ளப்பட்டதெனலாம். மேழ ஓரையிலிருக்கும் புரவி (அசுவினி) நாண்மீன் மேழவிழுவிலிருப்பதை வைத்து நாளைக் கணக்கிடும் முறை கி.மு 274 இல் தொடங்கியிருக்க வேண்டுமென்பர். இந்த ஊழியாண்டு முறையே வரலாற்றின் மீதும், அறிவியலின் மீதும் தன் அடிச்சுவட்டைப் பதித்துள்ளது. இதைப் பண்டை கிரேக்க, இலத்தீன் பண்பாடுகளும் ஏற்றுக் கொண்டுள்ளன. உலகும் மேழ ஓரையை முதல் ஓரையாக ஏற்றுக் கொண்டுள்ளது.

ஓர் ஓரையைச் சேர்ந்த ஞாயிறை வியாழனாகிய கோள் சுற்றிவர எடுக்கும் காலம் 12 ஆண்டுகள். கோள்களில் பெரியதும், ஆண்டளப்பான் அல்லது ஆசான் எனப் பெயர் பெற்றதும் ஆனகோள் வியாழன் ஆகும். வியாழ மண்ணடலத்தில் 1/12 சுற்றே வியாழனாண்டு எனலாம். இதுஞாயிற்றாண்டு முறையுடன் ஏறக்குறைய பொருந்தியதாகும். மகநாண் மீனில் அல்லது அதற்கண்மையில் வியாழனிருக்க அதில் வெள்ளுவா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(பூரணை) நிகழும் நாளையே மாமகமென்று 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை குடந்தையில் விழாவெடுக்கின்றனர். இந்த வியாழன் ஆண்டு முறையை திங்கள் ஞாயிறு ஆண்டு முறையுடன் பொருத்தினர் பார்ப்பார்... அத்தோடு வியாழன் ஞாயிறை ஐந்து முறை சுற்றிவர எடுக்கும் 60 ஆண்டு வியாழ வட்டத்தையும் (சக்கரம்) ஏற்படுத்தினர். இந்த 60 ஆண்டுகளுக்கும் **நாரதர் பெண்ணாக மாறி லீலைக் கண்ணனுடன் (வைதீகக் கடவுள்) கலவி செய்து பிறந்த 60 சங்கத** (சமற்கிருத)ப் பெயர்களைத் தாங்கிய பிள்ளைகளின் பெயர்களை **பிரவயில்த்** தொடங்கி **அட்சயவில்** முடியச் சூட்டினர். (அபிதான சிந்தாமணி 1934 ஆண்டுப் பதிப்பு 1392 ஆம் பக்கம்) ஓர் ஆண்டின் பெயர் தன்னும் தமிழ்ப் பெயரைக் கொண்டு இருக்கவில்லை. ஏனெனில் **வைதீக வேதமரபார் கொள்கைப்படி தமிழ் ஒரு தீட்டு (நீச) மொழி அல்லது பேய்மொழி** ஏனென்றால் **"பெருங்கதை"** பேய்மொழியில் எழுதப்பெற்றதாக வைதீக வாரிய வேத மரபார் கூறுவர். எனவே எப்படித் தமிழருக்குச் சித்திரை மாதம் ஆண்டுத் தொடக்கமாகும். இந்த அறுபது ஆண்டுச் சுழற்சி முறையும். கி.பி 317 இல் அல்லது கி.பி 426 இல் தொடங்கியிருக்க வேண்டுமென்று இரண்டுபட்டு நிற்கின்றனர். அத்தோடு செய்தித் தாள்களில் கட்டுரை எழுதுவோர் ஆண்டுத் தொடக்கம் என்பதற்குப் பதில் வருசப் பிறப்பென்கின்றனர். உயர்திணையினரான ஆண்,பெண் கூடிப் பெற்றெடுக்கும் பிள்ளையே பிறப்பிற்கு உரியது. அப்படியானால் ஆண்டுப் பிறப்பென்பது மேற்குறித்த அருவருக்கத்தக்கதும் பகுத்தறிவுக்கும் ஒவ்வாததும், வெட்கக்கேடானதும், தமிழ்மொழி மரவு, வரலாறு, பண்பாட்டிற்கு இழுக்குடையதுமான இழிவின் தொடர்ச்சியா? வருசம் என்ற வடசொல்லையும் தங்கு தடையின்றி பயன்படுத்துவதையும் காணலாம். இச்சொல்லின் பொருள் மழையென்பதாகும். சிங்களத்திலும் மழையைக் குறிக்க"வர்சாவ" என்பர். ஒரு மழைக்காலம் தொடங்கி அடுத்த மழைக் காலம் வரையிலான காலத்தையும் வருசம் என்பர். அப்படியாயின் சித்திரைப் புத்தாண்டில் மழைக்காலம் தொடங்குகிறதா? எந்தப் பொருத்தப்பாடும் இல்லையே.

மழைக் காலத்தொடக்கமாதத்தை ஆண்டின் தொடக்கமாக தொல்காப்பிய ஆண்டு முறையில் கடைப்பிடிக்கப் பெற்றதாகும். பொருள் தேட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிசென்ற தலைவன் மழைகாலம் தொடங்குவதற்குச் சற்று முன்னதாக வீடு வருகின்றான் தான் தேடிய செல்வத்துடன. இது இல்லங்களில், குடும்பங்களில்,குமுகாயத்தில் மிக்க மகிழ்வைக் கொடுக்கின்றது. எனவே விழாவெடுக்கின்றனர். இவ்வாண்டுத் தொடக்கம் மடங்கலில் (ஆவணி) தொடங்குகின்றது. கார் காலத் தொடக்கமாகிய ஆவணி புரட்டாதியை ஆண்டுத் தொடக்கமாகவாக்கியது **தொல்காப்பியவாண்டு** முறை. இம்முறை கி.மு.669ல் ஏற்பட்ட மிகப்பழய முறையாகும் என்பர்.

வடஇந்தியாவில் வழங்கிய திங்கள் மாத ஆண்டைச் சரிப்படுத்த ஏற்படுத்தப்பட்டதே திங்கள் ஞாயிறு உவாமாத முறையாகும்.இதைக் கன்னட தெலுங்கர் பயன்படுத்துகின்றனர். திங்களாண்டில் பன்னிரண்டு கருவாக்களும்(அமாவாசை) 12 வெள்ளுவாக்களுமாக (பூரணை) 354 ஞாயிறு நாட்களுக்கு ஈடாகும். ஞாயிற்றாண்டில் 365 நாள் 6 மணியாகும் எனவே இந்த மிகை 11 நாள் 6 மணியை ஈடுசெய்ய 3 ஆண்டுகளுக்கொருமுறை ஒரு மிகை மாதத்தைத் திங்களாண்டு முறையில் சேர்க்க வேண்டியதாயிற்று. அத்தோடு மாதப் பெயர்களையும் 27 நாண் மீன்களிலிருந்து தெரிவு செய்தனர். **திங்களாண்டு நாட்காட்டியில் வரும் மிகை மாதத்தை ஞாயிற்றாண்டுடன் சமன் செய்ய 30 ஆண்டுச் சுழற்சியை ஏற்படுத்தினர் ஆரியப் பார்ப்பாரென "சதபத பிராமணம்"** கூறுகிறதாம். இந்நடைமுறையை ஏற்றவர்களும் ஏற்காதவர்களுமாகப் பலதரப்பட்டு நிற்கின்றார்கள். உடுப்பருவங்களான **இளவேனில், முதுவேனில், கூதிர், பனி** பற்றி குறிப்பிடப்பட வேண்டிய **"இருக்கு வேதம்"** தமிழரின் இலக்கிய மரபுடன் ஒன்றித்த ஆறு பருவங்களான **முன்பனி, பின்பனி, முன்இளவேனில், பின்இளவேனில், கார், கூதிர** என்பவற்றைக் குறிப்பிடுகிறதாம். திங்களாண்டையும், ஞாயிற்றாண்டையும் பொருத்தவே **திங்கள் ஞாயிற்றாண்டை** வடித்தனரென **"இருக்குவேதம்"** செப்பும். இவ்வாண்டு முறையின் முதல் மாதமாக வைகாசி (வைகாசம் - விசாகம்) யை வைத்தவூழியாண்டு கி.மு255 என்பர். எனவே **இருக்குவேதத் தொகுப்பு கி.மு 255 க்கு பிந்தியதாகும்.** சமய நோன்புகள், சடங்குகள், வேள்விகள் திங்களாண்டைச் சார்ந்தும், வாழ்வியலுக்கு (வேளாண்மை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிய பருவங்கள் பற்றிய அறிவு, நுட்பம், முரணாகிக் குழப்பங்கள் e þ o e | j h f "சதபத பிராமணம்" குறிக்கிறதாம். இதைக் கண்டறிந்து பருவ காலங்களுக்கு ஏற்ற வகையில் ஞாயிற்றாண்டு வடிக்கப்பெற்று நடைமுறைப்படுத்தப்பட்டதாம். இந்த ஞாயிற்றாண்டு முறையாலும் கன்னடத் தெலுங்கு முறையாலும் ஐந்திர (பஞ்சாங்க)க் குளறுபடிகள் தொக்கி நிற்கின்றன.

**தமிழ் வள்ளுவக் கணியர்கள் ஆக்கிய திங்கள், வியாழன், ஞாயிறு மாதவாண்டுக் கணக்குகளைத் தமதாக்கிக் கொண்டு ஆரியப்பார்ப்பார் வகுத்த ஆரிய சித்தாந்தத்தைத் தழுவி ஞாயிற்று மாதங்களுக்கு மட்டுமிருந்த பெயர்களை நீக்கிவிட்டு திங்கள் மாதப் பெயர்களைத் திணித்து கி.பி 300க்குப் பின் இன்று வழங்கும் ஆண்டுக் கணக்கை** ஆரியப் பார்ப்பாரின் தொண்டரடிப்பொடியராகிய தமிழ்ப்பார்ப்பார் புகுத்தினர். சித்திரையை முதல் மாதமாகக் கொள்ளும் முறை வைகாசியை முதல் மாதமாகக் கொள்ளும் முறைக்குப் பிந்தியதாகும். இப்படிப் பலதரப்பட்ட ஆண்டு நாட்காட்டிகளும் கணிப்புப் பகுப்புக்களும் ஐந்திர (பஞ்சாங்க) கணிப்புக் குளறுபடிகளையே சுட்டும். (வாக்கிய, திருக்கணித) இதனாலேயே **சித்திரையில் வைத்து ஐந்திரம் கணிப்பது எல்லாத் தவறிற்குமான காரணமென்கின்றார் இந்துத் தத்துவவாதியான பாலகெங்காதரதிலகர், மகாகவி சுப்பிரமணிய பாரதியார் போன்ற** பல அறிஞர்கள். அத்தோடு மேழமுன்னுறல் (மேழ விழு) நடைபெறும் பங்குனி உத்தரத்தன்றிலிருந்து ஐந்திரக் கணிப்பு செய்யப்பட வேண்டுமென்றும் கூறுவர்.

**"பங்குனி உத்தரம்"** சைவர்களால் போற்றப்பட வேண்டிய உயரிய சிறப்பு மிக்க நாளாகும். ஏனெனில் அன்றுதான் சைவர்களின் முழுமுதற் கடவுளாம் சிவனின் நெற்றிக் கண்களிலிருந்து **முருகன் தோன்றிய நாள்,** காமனாகிய மன்மதனை நெற்றிப் பொறியால் அழித்தநாள், **மருதநிலக் கடவுளாம் இந்திரனின்** (இருக்கு வேதம் கூறும் சிந்துவெளி நாகரீகத் தொல் தமிழரை அழித்த இந்திரனல்ல) **இந்திரவிழா தொடங்கும் நாள்.** இந்தப் பங்குனி உத்தரத்தன்றே (மேழவிழு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாலநடுவரையில் ஞாயிறு வருகிறதாம். அத்தோடு உலகில் அதிகமக்கள் பின்பற்றும் கிறீத்த மதத்தவரின் "உயிர்த்தெழுந்த ஞாயிறு" பங்குனி உத்தரத்தை அடிப்படையாக வைத்தே கணிக்கப் பெறுகிறது. உயிர்த்தெழுந்த ஞாயிறு (ஈச்சுடர்) பங்குனி 21 ஆம் நாளிலோ (மீனம்8) அல்லது அதைத் தொடர்ந்து வரும் வெள்ளுவா (பூரணை)வுக்கு அடுத்து வரும் ஞாயிற்றில் கொண்டாட வேண்டுமென்கிறது "வைற்ரேக்கேர்ச் அல்மனைக் **(Whitaker's almanach** ஆண்டு 1945 பக்கம் 181") அத்தோடு உயிர்த்தெழுந்த ஞாயிறைக் குறிக்கும் "ஈச்சுடர்" என்ற சொல்லுக்கு விளக்கம் தரும் "சேம்பர்ச் **(Chambers)** 20 ஆம் நூற்றாண்டு (1972) அகரமுதலி, "இளவேனில் விழுவில் (பங்குனி 21 மேழவிழு) நடைபெறும் பெண் தெய்வ விழா" என்கிறது. இது "இந்திர விழாவைக்" குறிப்பதாகும். பல்லாயிரமாண்டுகளுக்கு முன் கடலில் அமிழ்ந்துபோன முதற்சங்கத் தலைநகரம் தென்மதுரை நில நடுவரையில் இருந்ததாகவும் கதிரவன் "மீன் இரவி" என்னும் பங்குனி மாத உத்தர நாளில் மேழ ஓரைக்குள் நுழைவதாலும் இந்நாளில் கதிரவன் உச்சிக்கு (பகலிரவு சமவேளை) வருவதாலும் சிறப்புற்றிருந்ததாம். ஞாயிற்றாண்டு முறைப்படி கணக்கிட்ட ஆண்டுடன்திங்கள் முறைகொண்டு கணக்கிட்ட மாத முறையை ஒட்ட வைத்ததால் வந்ததே ஐரோப்பிய நாட்காட்டி. இதைச் சுட்டும் "கில்பெர்ட் சிலேட்டர்" வியக்கத்தக்க முறையில் தமிழரால் அமைக்கப்பெற்றுள்ள இந்த ஞாயிற்றாண்டு நாட்காட்டியைக் கண்டு மலைத்து நிற்கின்றார். இது ஒரு சமயம்சரா ஆண்டு முறையெனவும் பகருவார் (விரிக்கப்புகின் நீளும்).

தமிழுக்கு தமிழனுக்கு, பௌத்தம், கிறீத்தவம் வழங்கும் தனிமனித அடிப்படை முன்னுரிமைகளைக்கூட இந்த வைதீகவாரிய இந்துத்துவ வேதமரபார் எந்தக் காலத்திலும் வழங்க முன்வர மாட்டார்கள் என்பதை 13.4.08 இல் வீரகேசரி சித்திரைப் புத்தாண்டு சிறப்பிதழில் வைதீகவாரிய இந்துதத்துவத்திற்கு முண்டுகொடுக்கும் கட்டுரை மூலமாகத் தெட்டத் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். இக்கட்டுரை "குத்தி முறிந்து நீர்ச்சீலையை (கோவணத்தை)ப் பியப்பது" போன்ற சொல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கிற்குப் பொருந்துவதாயுள்ளது. இன்று பௌத்தத்தை, கிறீத்துவத்தை எடுத்துக் கொண்டால் அது எந்தெந்த நாட்டினரால் பின்பற்றப் பெறுகிறதோ அந்த நாட்டு மக்களின் தாய்மொழியிலேயே கோவில் வழிபாடுகள், இன்பியல் (திருமணம், புதுமனைப் புகுதல்),துன்பியல் (இறப்பு, கருமாதி, நினைவுகூரல் போன்றன) நிகழ்வுகள் நடத்தப் பெறுகின்றன. கி.மு. 1700ல் அன்றய இந்தியாவுட் புகந்தவாரியர் தென் தமிழ்நாடு வர 2000 ஆண்டகளுக்கு மேல் சென்றன. வாதாபி **கணபதியாகிய ஆரியவைதீகக் கடவுள் விநாயகர் வணக்கம் கி.பி 7 ஆம் நூற்றாண்டையொட்டியே தொடங்கியது.** பல்லவர்களும் பிற்கால சோழர்களுமே இந்த வைதீகவாரிய வேதமரபு வளர வழி சமைத்தவர்கள் (விரிக்க நீளும்). இக்கால கட்டத்திலேயே **திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரமூர்த்தியார், மாணிக்கவாசகர் போன்ற** நாயன்மார்கள் **தோன்றி தமிழையும் சைவத்தையும் வளர்க்கப் பெருமுயற்சி** எடுத்தனர். இவர்களைக் கடவுள் ஆட்கொண்டார் எனக் கூறிக் கொன்றனர். (கண்ணப்பர், நந்தனார் போன்ற சிலரும், சமயத்தின் பெயரால் தம்மைத் தாம் அழித்துக் கொண்ட சிலரும் இதில் அடக்கம்) **இலங்கையைப் பொறுத்தவரையில் வைதீகக் கடவுளான விநாயகர் வணக்கம் கி.பி 12,13ஆம் நூற்றாண்டுக்குப் பின்பாகவே தொடங்கியது.** இவற்றைச் சற்று விரிவாக எழுதக் காரணம், குறித்த கட்டுரையின் வைதீகவாரியம் சார்ந்த மேலாண்மைக் கூற்றுக்களேயாகும். வைதீகவாரியர் வேறு, தமிழர் வேறு, தமிழனின் ஆண்டுத் தொடக்கம் பற்றி முடிவெடுக்கவோ, எதிர்வு கூறவோ ஆரியருக்கு எந்த உரிமையுமில்லை என்பதை எல்லாத் தமிழருமே ஒத்துக் கொள்வார்கள். இலங்கையில் வைதீகவாரியர் இல்லை. ஆனால் அவர்களுக்கு முண்டு கொடுக்கும் தமிழர்கள்தான் உள்ளனர். இந்திய வைதீகவாரியர் இலங்கையிலிருக்கும் வைதீகவாரியரென்று சொல்லிக் கொள்பவர்களை சூத்திரரென்றே (கறுப்பர் - தமிழர்) கூறுகின்றனர். இவர்களுடன் உண்ணல் கலத்தல் இல்லையாம். இந்தியாவிலும் வடநாட்டு **வைதீகவாரியர் புலால் உண்டு வேதங்களிலும் மிருதிகளிலும் சொல்லியபடி, சாத்திரப்படி நடந்து கொள்வதாகவும்,** ஆனால் தென்னாட்டவர் இவற்றிற்கு முரணாக சைவ தந்திரங்களின் படி நடப்பதால் பிராமணராகார், சூத்திரரே என்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையாளம், கன்னடம், தெலுங்கு நாடுகளிலும பலகுளறுபடிகள் இங்கு யார்தான் உண்மை வைதீக வாரியப்பார்ப்பார்.

இந்துத்துவமென்பது ஆசீவகம், உலகாய்தம், சைவம், வைணவம், வைதீகம், சமணம், பௌத்தம் (கீதையின் 2ஆம் அதிகாரம் 55 தொடக்கம் 72 வரையிலான சுலோகங்கள் பௌத்தக் கோட்பாடுகளை உள்ளடக்கியதென்பர் டி. கோசம்பி) போன்ற பலமதக் கோட்பாடுகளை உள்வாங்கிய ஒரு கலவை. இதன் மூலம் வைதீக மதத்தார் மற்றைய மதத்தார் மேல் மேலாண்மை செலுத்த ஏற்படுத்திக் கொண்ட ஒரு அடக்குமுறை. சைவத் தமிழர்கள் எந்தச் சமயக் காழ்ப்புணர்வும் அற்றவர்கள். இது இன்று நேற்றல்ல பல்லாயிரமாண்டுகளாகக் கைக்கொள்ளும் கருவின் குணம். வைணவம், பௌத்தம், சமணம், ஆசீவகம் போன்ற பல்மதக் கோட்பாடுகளை உருவாக்கி வைத்தவர்களும் அவர்களே. ஆனால் பல்வகை மாபாரத, இராமாயண திணிப்புக்களின் நடுவிலும் இராமனை, கண்ணனை, இலட்சுமியை, சரசுவதியை, அனுமானைக் கடவுளராக்கிக் கோவில் கொண்டு வணங்கவில்லை. சிலர் மதிப்பதால் அவர்களும் மதிக்கிறார்கள் வணங்குகிறார்கள். சைவமும் தமிழும் தம் இரண்டு கண்களென்பர் சைவர்கள். ஆனால் அது வெகு விரைவில் வைதீகமும் சமற்கிருதமுமாக மாறிவிடும்(மாறிவிட்டது) என்ற ஐயப்பாடிருந்தாலும், பல தடைகளைத் தாண்டி பல்லாயிரமாண்டு தாக்குப் பிடித்தவர்கள் அறவியலும், அறிவியலும் , பகுத்தறிவும் மிக்க இன்னாளில் விழுந்துவிட மாட்டார்கள். தொன்றுதொட்டுத் தமிழனுக்கு வாழ்வாக, வளமாக, அறமாக, அறிவாக இருந்தது இந்த வேளாண்மையே. அவன் அன்றிலிருந்து இன்றுவரை மகிழ்ந்திருந்தது இவ்வேளாண்மையை ஒட்டியே. பல ஆண்டு முறைமையைக் கலவையாக்கி முரண்பாடுகளும், குழறுபடிகளும், குழப்பங்களும் நிறைத்து ஆக்கப்பெற்ற மாந்தனின் வாழ்வியலுக்கேற்ற கூறுகளைக் கொண்டிராத ஐந்திர (பஞ்சாங்க)க் கணிப்புக்காக மட்டும் சித்திரையை ஆண்டின் தொடக்கமாகக் கொள்ளச் சொல்வதும், தொன்ம (புராண) இழிவுகளைத் தொடர்ந்து சுமக்கச் சொல்வதும் சற்றும் பொருத்தமற்றதாகும். அத்தோடு வைதீக ஆரியத்திற்கு முரணான நடவடிக்கைகளை முளையிலே கிள்ளியெடுக்க வேண்டுமாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலங்காலமாக ஆரியர் நாவலந்தேயமாகிய இந்தியாவினுள் புகுந்த காலந்தொட்டு தமிழனின் முதுபெரும் நாகரீகம், வானியல், அணுவியல், மொழியியல், சமயம் போன்ற பல்வகைக் கூறுகள் முளையிலே கிள்ளியெறியப் பெற்று அழிக்கப்பெற்றன. (விரிக்கின் நீளும்) ஏன் எல்லாத் தகுதிகளிலிருந்தும் என்றோ உலகச் செம்மொழியாகி இருக்கவேண்டிய தமிழ்மொழியை நேற்றுவரை அத்தகுதியைப் பெறாமல் தடுத்து நிறுத்தியவர்கள் இந்தத் தமிழ்க் காழ்ப்புணர்வு கொண்ட வைதீக வேதவாரியரும், அவர் சார்புடையோருமாவார். ஒரு இனத்தின் வாழ்வியற் பண்பாட்டுடன் தொடர்புடைய ஆண்டுத் தொடக்க விழாவை விடுத்து இன்னொரு இனத்தின் நெருக்கத்தைப் பேண அந்த இனத்தின் விழாவோடு ஒன்றித்துப் போகவேண்டுமாம். மேற்குறித்த கணிப்புக்களால் ஆக்கப்பெற்று பல்நூறு ஆண்டுகளாக ஆண்டுத் தொடக்கத்தை ஒன்றாகக் கொண்டாடியும் (இலங்கையில்: தமிழர், சிங்களவர், இந்தியத் தென்னாட்டில்: தமிழர் கேரளர், தெலுங்கர், கன்னடர்களுக்கிடையில்) சமாதானம், ஐக்கியம் எள்ளளவும் உருவாகவில்லை. விரிசல்தான் கூடுகின்றது. இராமாயண, மகாபாரத காலங்களாக 6000 ஆண்டு (மீகைப்படுத்தல், ஆய்வுக்குரியது)களுக்கு முன்பிருந்தே சித்திரையை ஆண்டுத் தொடக்கமாகக் கொண்டாடுகிறார்களாம். எப்படியெல்லாம் கரடி விடுகிறார்கள் தமிழனை ஏமாற்ற.

எனவே இவ்வாறான உருட்டுப் பிரட்டுக்களிலிருந்து விடுபட்டு தமிழன் வாழ்வியலோடு தொடர்புடைய வேளாண்மையையும், உலகம் ஓங்க அறவியலளித்த திருவள்ளுவப் பெருந்தகையின் பிறப்பையும் அடிப்படையாகக் கொண்டு தைத்திருநாளாம் தைப்பொங்கல் நாளை ஆண்டுத் தொடக்க நாளாகக் கொண்டு விழா எடுப்போம்.

**வாழ்க தமிழ்! வளர்க பகுத்தறிவு! மறுமலர்ச்சி பெறுக தமிழர் பண்பாடு!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மகள் ஔவையார் நூல் அணிந்துரை

ஔவையார்! சங்ககால ஔவையார் (கி.மு 2ம் நூற். - கி.பி 2ம் நூற்.), நீதிநூல் ஔவையார் (பிற்காலச் சோழர்காலமாகிய கி.பி 10 - 12ம் நூற்.), ஔவைக்குறள் அல்லது ஞானக் (அருள்) குறளென்று வழங்கும் 310 குறள்களையும் விநாயகரகவலையும் பாடியவராகக் கொள்ளப்படும் சித்தர் மரபினரான குண்டலினியோகி ஔவையார், இன்னும் காலத்திற்குக் காலம் இப்பெயருடன் வாழ்ந்த பலரையும் இப்பெயர் குறிக்கும். இவர்களில் நீதிநூல் ஔவையார், சங்ககால ஔவையார் இருவருமே மிகவும் போற்றிப் புகழப் பெறுபவர்கள். **சங்ககாலத் தொகை நூல்களான புறநானூறு, அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை** போன்ற நூல்களில் பல பாடல்களைப் பாடிய ஔவையார் உலகப் புகழ்பெற்ற பெண்பாற் புலவர்களாகிய கிரேக்கத்து சாபோ, பிரௌனிங், யோர்யிய றொசற்றி, எமிலிடிக்சன் போன்ற பன்னாட்டு புலவர்களின் ஆக்கங்களுடன் ஒப்பிலக்கிய ஆய்வொன்றைச் செய்தால் ஔவையார் இவர்களுக்கெல்லாம் இமயமாய்க் காணப்பெறுவார் என்கிறார் வரலாற்றுப் பேராசிரியர் ந. சுப்பிரமணியம். நீதிநூல் ஔவையார் எளிமை, இனிமையானவராக பட்டி, தொட்டிகளெல்லாம் படித்தவர், பாமரர் என்றில்லாமல் எல்லோர் நெஞ்சங்களிலும் நீங்கா இடம் பிடித்த அற, அறிவியற் கன்னி. உலக அளவிலேயே போற்றப்படும் உயரிய தகைசார் பெண்பாற் புலவர். தமிழர் நடுவில் ஒருவனுக்குத் தன்னும் ஔவையைத் தெரியாதென்றால் அது தமிழினத்திற்கே இழுக்காகும். இதைக் கருப்பொருளாக வைத்தே மாணவ சமுதாயமும் தமிழ் சமுதாயமும் ஔவைப் பாடல்களில் பொதிந்துள்ள கருத்துக்கள், உண்மைகள், நுட்பங்கள் போன்றவற்றை நன்கு புரிந்து கொள்ளும் வகையில் யாக்கப் பெற்றிருக்கிறது இந்நூல்.

கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக தமிழுக்காகவே தன்னை ஈகம் செய்து, தமிழே மூச்சாகக் கொண்டு, தமிழ்த் தொண்டு புரியும் தமிழக் காவலர் திரு. வே. இறைபிள்ளை (பரமநாதபிள்ளை) அவர்களால் தொகுக்கப் பெற்றதுதான் இந்தத் "தமிழ் மகள் ஔவையார்" என்னும் நூல். இதில் உள்ளடங்கியிருப்பவை பெரும்பாலும் அறிவுரைகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறவுரைகளும் ஏன் சில அருளுரைகளும் பொதிந்த பாடல்களே. சிறந்த நன்நெறிக் கவிதை வித்துக்களை மக்களின் மனவயலில் விதைத்து, உயர் பண்புப்பயிரை வளர்க்கும் ஒப்பற்ற **"சொல் ஏர் உழவர்"** ஔவைப் பெருமாட்டியே என்றால் அது மிகையில்லை. நீதிநூல் ஔவையார் பாடியனவாக **ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி, மூதுரை** தவிர எண்ணற்ற பாடல்கள் **தனிப்பாடற்திரட்டு, தனிச் செய்யுட் சிந்தாமணி** போன்றவற்றில் குறிப்பிடப்பெற்றுள்ளன. ஒரு தேச நாகரீகத்திற்கு அடையாளம் அத்தேசத்தின் இலக்கியமே என்பார் அறிஞர். சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் கவிதை மரபில் மிக உயர்வுடையது. இதில் ஔவையார் ஒப்பற்றவர். கடுமையான நுட்பமான தகவல்களை எவரும் புரிந்து கொள்ளும்படி எளிய நடையிற் தருவதில் ஈடு இணையற்ற திறைமைசாலி என்பதும் வெள்ளிடைமலை.

உலகிலுள்ள அனைத்து மொழிகளுள்ளும் நீதிநெறி, அறிவுரை, உயர்ந்த கொள்கைகள் கருத்துக்கள் மெய்யியல் (தத்துவம்) போன்ற பண்புகளை நிரம்பப் பெற்றுள்ள நூல்கள் தமிழ் மொழியில் மட்டும்தான் உள்ளன. இது தமிழனின் உயர் பண்பாட்டு நாட்டத்தினை வலியுறுத்துவதாகும். **பதிணெண் கீழ்கணக்கு நூல்களில் திருவள்ளுவமாலை (திருக்குறளல்ல), நாலடியார், இன்னாநாற்பது, இனியவைநாற்பது, திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழிநானூறு, முதுமொழிக்காஞ்சி, ஏலாதி, நான்மணிக்கடிகை, சிறுபஞ்சமூலம்** போன்ற நுர்ல்கள் முழுக்க முழுக்க நீதிநெறிகளை உள்ளடக்கியவைகளே. இவற்றுள் அடங்குவன, அடங்காதனவாகிய நீதிநெறிகளும் அற, அறிவுரைகளில் சிறந்த பல ஔவையின் நூல்களிற் காணலாம். ஔவையார் ஆக்கிய நீதிநூல்கள் மாந்த உடல், மனவளர்ச்சிக்கேற்ப எளிய நடையில் சிக்கனச் சொற்களில் அமைந்த விதமே அதற்கான சான்றுகள். ஆத்திசூடியைப் **"பாலடைத் தமிழ்"** என்றும் அதாவது மழலைப் பருவத்தினருக்குப் பாலும் மருந்தும் புகட்டுவதற்கென்றே பயன்படுத்தும் "பாலடை" போன்றதாகும். கோப்பையில் குடிக்கத் தெரியாதவர் கொண்டியில் பாலை உறிஞ்சிக் குடிப்பதைப் போன்று சிறார்க்கென்றே எளிய ஒரு வரியில் மூன்று, நான்கு சொற்களைக் கொண்டு ஆக்கப் பெற்ற கொன்றைவேந்தன் **"கொண்டித்தமிழ்"** என்றும், வளர்ந்தவர்க்கென்று வாழ்வியற் கருத்துக்களை நான்கு வரிகளாலான பாக்களின் வழி ஆக்கப் பெற்றவையே மூதுரை, நல்வழி, தனிப்பாடற்திரட்டு போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதிநூல்களுமாகும். ஆத்திசூடி, கொன்றைவேந்தனை தமிழ்நெடுங்கணக்கு வரிசையிலே ஆக்கித் தந்துள்ளார். ஆத்திசூடி 108 தொடர்களாலானது. **"மாற்றானுக்கு இடங்கொடேல்"** என்றவர் எச்சூழலில் **"முனை முகத்து நில்லேல்"** என்பார். இதற்குப் போர்ப் பயிற்சி இல்லாமல் போர் முனைக்குச் செல்வது தவறு என்பதுதானே பொருள். அத்தோடு **"போர்த் தொழில் புரியேல்"** என்றும் கூறுகின்றார். உயிர்க் கொலை, பொருட்சூறை, பாலியல் வன்முறை போன்ற பண்பாட்டுச் சீரழிவுகளை உருவாக்கும் போரை கூலி பெற்றுச் செய்யும் ஒரு தொழிலாகக் கொள்ளக் கூடாதென்பதை அன்றைய தமிழரசரிடையே, தமிழ் அந்நிய அரசரிடையே ஏற்பட்ட போர் காரணமாய் தமிழினம் சீரழிந்ததை நோக்கித் துன்ப மேலீட்டால் அது அறம், அறிவு அல்ல என்னும் நோக்கில் கூறியிருக்க வேண்டும். பல ஆத்திசூடிகள் ஒருவரின் தன்னுறுதி தன்முயற்சியையும் ஆளுமையையும் (**"பீடுபெறநில்)**, விழிப்புணர்வையும் (**"தோற்பனதொடரேல்"**), முன்னேற்றத்தையும் (**"திருந்தச்செய்"**), உழைப்பையும் (**"பூமிதிருத்தி உண்"**) போன்ற பல தொடர்களால் ஊக்குவிக்கின்றார். பழகும் பண்பாடுகள் பற்றி 16 சூடிகளில் கூறுவார். குறிப்பாக **"வல்லமை பேசேல்"**, **"பழிப்பன பகரேல்"**, **"மொழிவது அறமொழி"**, **"பிழைபடப்பேசேல்"**, **"சுழிக்கப்பேசேல்"** போன்ற பண்பாட்டு வழிகளை வளமாக்குகிறார். ஒருவரோடொருவர் பழகுவதற்கும் **"இணக்கமறிந்து இணங்கு"** என்றும் கல்வியில் பலகோணப் பார்வையைச் செலுத்தி **"நூல்பல கல்"**, **"ஓதுவதுஒழியேல்"** போன்ற பல சீர்களை முன்வைக்கின்றார். **"மனையாளுடன் கூடிவாழ்"** என்றவர் **"மைவிழியாள் மனையகல்"** என்கின்றார். அதாவது மனையாளிருக்க இன்னொருவள் வீடு செல்லாதே என்பதுதானே பொருள். அத்தோடு **"தையல் சொற் கேளேல்"** என்றும் கூறுவார். இது அன்றைய நாட்களில் பல வேந்தர்கள் தம் துணைவியர் சொற்கேட்டு செயற்பட்டதால் அரசு, நாடு சீரழிந்தது போன்ற நிகழ்வுகளால் ஔவை அப்படிக் கூறினார் எனலாம். திருவள்ளுவரும் அரசியல் சார்ந்த நட்பியலிலேயே **"பெண் வழிச்சேரலை"** வைப்பதால் இது துல்லியமாய்த் துலங்கும். **"ங்"** என்னும் மெய்யொன்றே பயன்பட்டு உயிர் மெய்யில் **"ஙகர"** வரிசையை காப்பாற்றுகிறது. அந்த **"ங"** போல் நீயும் உன் சுற்றத்தைக் காக்க வேண்டும். என்பதற்காக **"ங போல்வளை"** என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மின அறிவியல் (விஞ்ஞான) அழிவுக்கு நாமே வித்தென்பதை ஔவையின் **"கைவினை கரவேல்"** என்னும் சீர் உறுதி செய்யும். அன்றிருந்த பல அறிவியல் நுட்பங்களை, மருத்துவமுள்ளிட்ட தொழில்களை, சித்து உள்ளிட்ட அரிய கலைகளை தம் வழித்தோன்றல்களுக்கே மறைத்து இருட்டடிப்புச் செய்ததால் அவை இன்று அழிந்து போய்விட்டன. அத்தோடு அந்நியராகிய வைதீகவேதவாரியார், வடமொழியாளர், அராபியர், ஐரோப்பியர் போன்றோர் வரவால் **தமிழினம் நாட்டை, மொழியை, மெய்யியல், அறிவியல், வானியல், கட்டடக்கலை, இயல், இசை, நாடகம்** போன்ற பலவும் சிதைக்கப்பட்டு, அழிக்கப்பட்டு, அறிவு களவாடப்பட்டுப் போனதால் இன்று நாம் தாழ்ந்து போனோம். இது இவ்வந்தேறியர்களின் அடுத்துக் கெடுத்தலினால் ஏற்பட்டதே. இதையே **"வேண்டிவினை செயேல்"** (சதி செய்யாதே) என்றார் ஔவை. இன்றும் அடுத்துக் கொடுப்போருக்கு பக்கபலமாக, முண்டு கொடுப்பவர்களாகவே தமிழினம் உள்ளது.

கொன்றைவேந்தனே பெரும்பான்மையாகக் கற்றார், கல்லாதவர் நாவினில் களிநடனம் புரிவதைக் காணலாம். சில பழமொழிகள் போலவும் **"ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்", "கற்பெனப்படுவது சொற்திறம்பாமை"** போன்றனவும் சில ஆத்திசூடியின் விரிவாகவும் **"நைபரெனினும் நொய்ய உரையேல்", "மைவிழியார் தம்மனை அகன்றொழுகு"** போன்றனவும் இன்னும் சில திருக்குறட் சிந்தனையின் வழிப்பட்டனவாயும் **"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப கண்**................ (கு. 392)", **"பிறற்கு இன்னா முற்பகல் செய்யின்**...................(கு. 210)" என்னும் குறள்களை முறையே **"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"** என்றும் **"முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்"** என்றும் சூடுகிறார். இப்படிப் பல குறள்களை நடுவகமாகக் கொண்டு பல கொன்றைச் சூடிகளை யார்த்துள்ளார் ஔவைப்பாட்டி. **"கோட்செவிக்குக் குறளை காற்றுடன் நெருப்பு"** என்னும் கூற்று கவின் நயம்மிக்க ஒரு தொடராகும். அதாவது கோள் கேட்கும் செவி பிறர்மீது கோள் சொல்லும் வாய் இரண்டும் சேர்வது நெருப்புடன் காற்றுச் சேர்வதற்கு ஒப்பானது (காட்டுத்தீயைப் போன்றது) என்று செப்புகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஔவைக் கதைகள் என்ற தலைப்பின் கீழ் மாணவர்க்கு அறிவையும் அறத்தையும் விளக்கும் வகையில் மூதுரை, நல்வழி, தனிப்பாடற் திரட்டு போன்ற நூல்களின் பாடல்களிலிருந்து சிலவற்றைத் தெரிவு செய்து இத்துடன் இணைத்துள்ளார் ஆசிரியர் திரு. வே. இறைபிள்ளை அவர்கள். குறிப்பாக உழவையும் உழவனையும் முதன்மைப்படுத்தி அவனே உலகத்தின் அச்சாணி போன்று செயற்படுகின்றான் என்பதைத் தெளிவுபடுத்த **"வரப்புயர நீருயரும் நீர் உயர நெல்லுயரும்................** என்னும் பாடலினூடாக வெளிப்படுத்துகின்றார் ஔவை. இதையே திருவள்ளுவரும்

**"சுழன்றும் ஏர்பின்னது உலகம் அதனால்**
**உழன்றும் உழவே தலை" என்றார்.**

அடுத்து புல்லறிவாளராகிய நன்றியறிவில்லாத கீழோர்க்குச் செய்யும் உதவி எவ்வளவு கொடிய தீங்கை விழைவிக்கும் என்பதை **"வேங்கை வரிப்புலி நோய் தீர்த்த விடதாரி..........."** என்னும் மூதுரைப் பாடலினால் உணர்த்துகின்றார். இதையே திருவள்ளுவனாரும் **"நன்று ஆற்றாலுள்ளும் தவறுண்டாம் அவரவர் பண்பறிந்தாற்றாக்கடை"** என்பார்.

இதையே இன்னும் ஆழமாக நீதிவெண்பா 74 செப்பும்.

> **"நன்றறியாத் தீயோர்க்கு இடம் கொடுத்த நல்லோர்க்கும்**
> **துன்றுகிளைக்கும் துயர்சேரும் - குன்றிடத்தில்**
> **பின்னரவில் வந்தகரும்பிள்ளைக்கு இடம் கொடுத்த**
> **அன்ன முதல் பட்டது போல்"**

அதாவது யாரும் ஏறமுடியாது செங்குத்தான மலையுச்சியில் அரச அன்னம் தன்னினத்துடன் வாழ்கின்றது. ஒரு நாள் இரவு மழையில் நனைந்தபடி ஒரு காகம் தங்க இடம் கேட்கின்றது. அரச அன்னம் உடன்படுகிறது. விடியற்காலை காகம் பறந்து போய்விடுகிறது. ஆனால் அது அன்றிரவு இட்ட எச்சத்திலிருந்து ஒரு ஆலமரம் வளர்கின்றது. பரந்து படர்கின்றது. விழுது விடுகின்றது. பல ஆண்டுகளானதால் அன்ன இனமும் பல்கிப் பெருகுகின்றது. ஆலமர விழுதுகள் நிலத்தைத் தொடுகின்றன. இதைப் பற்றி ஒரு வேடன் மலையுச்சிக்கு ஏறி அன்னங்களைக் கண்ணிவைத்துப் பிடிக்கின்றான். காலப்போக்கில் அன்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனமே அழிந்து போவதற்கு வழி சமைக்கிறான். பல நூற்றாண்டுகளுக்கு முன் அந்த அரச அன்னம் விட்ட தவறு அந்த இனமே அழிவதற்குக் காரணமாயிற்று. இதுவே தமிழரின் 4000 **ஆண்டுகளுக்கு மேலான அழிவு நோக்கிய நிலையுமாகும்.** அடுத்து **"அன்பில்லாள் இட்ட அமுது"** என்னும் தலைப்பில் கற்பனையுடன் கூடிய நகைச்சுவை மிக்க கதையைக் காண்கின்றோம். முருகக் கடவுளுக்குக் **"கொடியது"** பற்றிக் கூறும் போது அன்பில்லா மனைவியின் கையால் உணவுண்பது **"கொடிதினும் கொடிதென்று"** கூறுவார். அத்தோடு இல்லாள் நற்செயல், நற்காரியங்களில் கணவனுடன் இசைந்தொழுகவில்லையானால் அவள் உயிர்பறிக்கும் கூற்றவனுக்குச் சமமென்பார் மூதுரையில். பழிக்கஞ்சாப் பெண்ணுடன் கூடிவாழ்வதை விட தனிமை சிறந்ததென்பார். நல்வழியில் இவை எல்லாவற்றுக்கும் மேலாக இல்லாள் இழந்த இல்லத் தலைவன் அனைத்தையும் இழந்தவனென்பதை உணர்த்த

"தாயோடு அறுசுவைபோம் தந்தையோடு கல்விபோம்
சேயோடுதான் பெற்ற செல்வம்போம் - ஆயவாழ்வு
உற்றார் உடன்போம் உடன்பிறப்பால் தோள்வலிபோம்
பொற்றாலியோடு எவையும் போம்" என்பார் தனிபாடற் திரட்டு வழி

ஒரு குடும்பத்தில் மனையாளே தலைவனுக்குத் தாயாய், தந்தையாய், குழந்தையாய், உற்றாராய், உடன்பிறப்பாய், எல்லாமாய் இருந்து வாழ்பிப்பவள் என்பதை உறுதி செய்கிறார்.

மாந்தனுக்கு ஆறு அறிவென்று கூறுகிறார்களே! அது உண்மைதானா? தன்னலமே தலைவிரித்தாட, எனக்கு, உனக்கென்று பகைமையும் பொறாமையும் கொண்டு முட்டி மோதிக் கொள்கிறானே அவனது கோபம் சினம் எவ்வளவு பொல்லாததாய் இருக்கிறது. ஆனால் அது அவனுக்கு இயல்பாயிருக்கிறதே. உடன்பிறந்தே இருக்கிறதே. கோபத்தால், பழிவாங்கும் உணர்வால், அழிந்த, அழிகின்ற குடும்பங்கள், அரசுகள், அரசர்கள், நாடுகள் எத்தனை? நெஞ்சம் நடுங்குகிறதே. கோபம் பாவங்களின் தாய் தந்தையாய் இருக்கின்றதே. அழிவுகளுக்கெல்லாம் மூலகாரணமாய் இருக்கின்றதே. சிந்திக்கும் அறிவைத்தானே ஆறாவது அறிவென்றனர். ஆனால் அவன் சிந்தனை கொடூரங்களில் மூலமாய் உள்ளதே. மீட்சியில்லையா? இவைகளைத்தானே ஔவை **"மூவகைச்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினத்தாராய்'' பிரித்தார். என்னே அவரின் ஆழ்ந்த அறிவின் ஆளுமை.

முருகக் கடவுளின் வேண்டுகோளுக்கிணங்க ஔவை பெரியது, அரியது, இனியது, பற்றிக் கூறும் போது

1. இறைவனோ தொண்டர் உள்ளத் தொடுக்கம், தொண்டர் பெருமையே உலகில் மிகப் பெரியது என்றும்
2. அரியவற்றுள் அரியது அறமும் (தானம்), துறவு அல்லது தொண்டு (தவம்) செய்தலென்றும்
3. இனியவற்றுள் இனியது அறிவுள்ளோரை கனவிலும் நனவிலும் காண்பதென்றும் சுட்டுகிறார்.

இத்ததனிப்பாடல் வழி தொண்டனையும் கொடையாளனையும் பற்றறுத்தவனையும் அறிவாளனையும் ஔவையார் வெளிப்படுத்துகின்றார். அதாவது அறம், அறிவு அருள் நிறைந்த வாழும் மாந்தனையேயாகும். இதையே வள்ளுவன்

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்'' என்பார்.

சங்க நூல்களில் சங்ககால ஔவையின் அற, அறிவுரைகளைப் பரக்கக் காணலாம். இவர் ஏழு கொடை வள்ளல்கள் காரி, பாரி, ஓரி, பேகன், நள்ளி, ஆய் போன்றோரில் ஒருவனாகிய குறுநில மன்னன் அதிகமான் நெடுமான் அஞ்சியின் அவைப் புலவராக உற்ற நண்பராக தூதுவராகவும் இருந்து செயற்பட்டவராவார். இவரது சில பாடல்கள் அன்றைய வரலாற்றுச் செய்திகளை (நற்றிணை 295) வெளிக் கொணர்பவையாகவும் காதல், போர், கொடை, புகழ் பற்றிக் கூறுபனவாகவும் உள்ளன. அன்று தமிழ் மூவேந்தர்களாகிய சேர, சோழ, பாண்டியர்களும் குறுநில மன்னர்களும் தம் வீரத்தை வெளிப்படுத்துவதற்காகப் போரை முதன்மைப்படுத்தி தம்முள் பொருதுற்றமையால் என்றும் மறவர் மடிவும், சொத்துச் சூறையும் பரத்தையர் பெருக்கமும் கண்டு அன்றைய சான்றோர் வெந்து வெதும்பிக் கொண்டிருந்த வேளை இம் மூவேந்தரும் தமிழ் நாட்டின் உறையூரில் இருப்பதறிந்து அங்கு சென்று அவர்களைக் கண்டு மட்டில்லா மகிழ்வுற்றும் என்றும் அவர்கள் ஒன்று சேர்ந்திருக்க வேண்டிய முக்கியத்தை விளித்து புறநானூறு 367 ஆம் பாடல்வழி உணர்த்துகின்றார்.அத்தோடு அதிகமானுக்கும் தொண்டமானுக்கும் இடையிலேற்பட்ட போர் முறுகலைத் தீவிர்க்க தூதுவராகவும் செல்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னே அவரின் அறிவு ஆளுமை. எனவேதான் தனக்குக் கிடைத்த கிடைத்தற்கரிய நெல்லிக் கனியை **தமிழ்வாழ, தமிழினம் வாழ, கோலோச்சும் மன்னனைவிட நீடுவாழவேண்டியவர் அறிவுடைச் சான்றோரே** என்று கொண்டதால் அஞ்சி ஔவைக்கு ஈந்தான். அத்தோடு ஔவை அவனைவிட மூப்படைந்த முதிர்ந்தவராக இருந்திருக்கவேண்டும். அதை உண்டதால் ஔவை பல நூற்றாண்டுகள் வாழ்ந்திருக்கவும் கூடும். இச்செயலின் மூலம் அதிகமான் நெடுமான் அஞ்சியும் அவள் வாழும் நாள்வரை வாழ்வான். ஔவைப் பாடல்கள் தமிழன் வாயில் உச்சரிக்கப்படும் வரை வாழ்வான். உலகியலை எடுத்துக்காட்டி நிலையான அறிவுரைகளைக் கூறுவதே **பொருண்மொழிக் காஞ்சி**யாகும். இதில் ஒரு பாடலையே பாடியுள்ளார் ஔவையார். அதுவும் ஆண் மேலாண்மை உலகைப் பார்த்தே அறைகூவல் விடுகிறார்.

"நாடாகொன்றோ காடாகொன்றோ! **அவலா கொன்றோ மிசையா கொன்றோ, எவ்வழி ஆடவர் நல்லவர்! அவ்வழி நல்லை வாழிய நிலனே**" (புறநானூறு 187)

ஒரு நாடு நல்லதென்று கூறிடின் அது அங்கு வாழ்கின்ற ஆண்களிலேதான் தங்கியுள்ளது என்பதை துலக்குகின்றார். அன்று ஆண் மேலாண்மை கோலோச்சியதென்பதை இக்கூற்று தெளிவு செய்கிறது. நாடு நலம்பெற, நீதி, நேர்மை மேலோங்க **பெண்ணிய விடுதலையின் முதற் கூற்றாகச் சங்ககால ஔவை இதை வெளிப்படுத்துகின்றார்.**

ஔவையாரைப் பலராகக் கொண்டாலும் சரி, ஒருவர் இருவராகக் கொண்டாலும் சரி, ஔவையின் கூர்ந்த மதியினையும் ஆழ்ந்த புலமையையும் ஆசுகவி (நினைத்தவுடன் கவிபாடல்) பாடும் ஆற்றலையும் யார்தான் வியக்கமாட்டார்கள். கவிநயத்தை, கற்பனைத் திறனை, கருத்தாழத்தை, யாப்பிமைதியினை, சொல்லடுக்கு நளினத்தை, இசையின்பத்தைச் செவிமடுக்க எத்தனை காதுகள்தான் தேவை. எனவேதான் ஔவை உலக, கிரேக்க, இலத்தீன், ஆங்கில பெரும் புலவர்களோடு ஒப்பு நோக்கப்படுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு
16
11
1924



உதிர்வு
02
11
2011

நெடுந்தீவு மத்தியை பிறப்பிடமாகவும் செல்வாநகரை
தற்கோதைய வதிவிடமாகவும் கொண்ட

அமரர்

## வைத்திலிங்கம் நாகமுத்து

பாசத்தை பயிராக்கிநேசத்தை உறவாக்கி
நேர்மையுடன் வாழ்ந்த எங்கள் அக்கா
காலத்தை வீணாக்காது
கம்பீர நடையுடன் உமது
வாழ்நாளைப் போக்கி வந்தீரே!
எண்பத்து ஏழு வருடங்களாய்
எல்லோருடனும் இனிமையாய் பழகி
எம்மையும் இனிதாய் வழி நடத்தி வந்தீர்
உள்ளத்தை ஒருங்கினைத்து
ஒற்றுமையை வலுப்படுத்தி
உமக்கென உறவுகளையும்

உருவாக்கி - வந்தீரே

*இவற்றையெல்லாம் செதுவிட்டு எங்களுடன் இருக்காமல்*
*இறைவனின் அரவணைப்பை நாடிச் சென்றதேனோ அக்கா*

**ஓம் சாந்தி ! ஓம்சாந்தி !! ஓம்சாந்தி !!!**

மு.கார்த்திகேசு குடும்பம்
157, பாண்டியன்குளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் பூக்கள்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 16 | 02 |
| 11 | 11 |
| 1924 | 2011 |



அமரர்

## வைத்திலிங்கம் நாகமுத்து

விழிகள் கரைகிறது
வேதனை நெஞ்சை முட்டுகிறதே....
ஓடி ஓடி திரிந்து உலாவிய இதயம்
நிரந்தரமாய் உறங்கியதேன்?
உலகத்து வாழ்க்கைதன்னில்
உத்தமியாய் வாழ்ந்தீர்கள்
அனைவருக்கும் மறக்கமுடியாத நல்ல
நினைவுகதைத் தந்தீர்கள்...
உறவுக் ஓலமிட
ஊரவர்கள் கண்ணீர் மழை பொழிய
உங்கள் உயிரை காலன் பறித்ததுதான் ஏனோ
அயலில் இருந்து அறிவுரைகள் பல கூறிய
அன்புத்தாயின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்வதுடன்
அன்னாரின் ஆத்ம சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

**வேழன் பதிப்பகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயர் பகிர்வு

| | | |
|---|---|---|
| மண்ணில் | | விண்ணில் |
| 16 | | 02 |
| 11 | | 11 |
| 1924 | | 2011 |



அமரர்

## வைத்திலிங்கம் நாகமுத்து

காலனவன் தீன் கணக்கை சாலவே செய்யவே
ஞாலம்விட்டு வானம் சென்றீரா?
வானம் சென்ற கானம் கேட்டு
கண்ணீர் விட்டுக் கரைகின்றோம்.
மீளாத் துயரில் தவிக்கிறோம்
வானம் சென்ற அம்மாவே
எந்நாளும் நீங்காது
உன் நினைவுகள்...

வைத்திலிங்கம் நாகமுத்து அவர்களின் பிரிவுத் துயரில் ஆழ்ந்திருக்கும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

வர்த்தகசங்கம்
பொதுச்சந்தை கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் துளிகள்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 16 | | 02 |
| 11 | | 11 |
| 1924 | | 2011 |



அமரர்

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், ஜெயந்திநகரை வாழ்விடமாகவும் கொண்ட வை.மகெந்திரராசா (ஓய்வுபெற்ற மின்சாரசபை அத்தியட்சகர்) அவர்களின் தயாருமான

## திருமதி.வைத்திலிங்கம் நாகமுத்து

வழியினைத் திறந்து விடியல் காட்டி
வழியிதுவன வாழ்வும் காட்டி
எல்லோருக்கும் இமையெனவிருந்து
ஆலமரமாய் அன்புக்கரம் விரித்த - தாயே
ஆண்டவன் அழைப்பில் - உன் உறவை
பிரிந்த எங்களின் இதய தெய்வமே
உங்கள் பிரிவால் துயருற்ற
உறவுகளின் துயரத்தில் பங்கெடுத்து
ஆத்ம சாந்திக்காய் இறைவனை
இறைஞ்சுகின்றோம் என்றென்றும்.

*அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.*

**ஓம் சாந்தி ! ஓம்சாந்தி !! ஓம்சாந்தி !!!**

**ஜெயந்திநகர் கிராம சேவையாளர், பொதுமக்கள் சார்பில்**
**வீ.எம்.ஜோசப் 330 ஜெயந்திநகர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு

16

11

1924



உதிர்வு

02

11

2011

எமது சங்கத்தின் முன்னாள் தலைவர் கௌரவ வைத்திலிங்கம் குகராசா அவர்களது அன்புத்தாயார்

அமரர்

## வைத்திலிங்கம் நாகமுத்து

**(இல.677, கனகபுரம் வீதி, செல்வாநகர்)**

இப்படியொரு செய்தியுடன்
இன்றைய நாள் விடிந்திரக்கவே வேண்டாம்
புலன்களெல்லாம் மங்கிப் போக ஏங்கி நிற்கின்றோம்
உண்மையா? இது உண்மையா?
இப்படித் திடீரென்று ஒவ்வோர் நெஞ்சையும்
ஏங்க வைத்துவிட்டு நெடுந்தூரம் சென்றதேன்?
உறவுகள் உன்னை இழந்து பெருந்தவிப்பு
தவிக்கின்றார்கள்
உற்றார்க் உன்னைக்காண் உதிரம் தான்
வடிக்கின்றார்கள்
உன்னுடன் பழகியோர்கள் உன்னையெண்ணி கதறி

***அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த***

**ஓம் சாந்தி ! ஓம்சாந்தி !! ஓம்சாந்தி !!!**

தங்கள் இழப்பிலும் துக்கத்திலும் பங்குபெறும்...
பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு
16
11
1924



உதிர்வு
02
11
2011

கரைச்சி பிரதேசசபையின் கௌரவ தவிசாளர் திருவைத்திலிங்கம் குகராசா அவர்களின் தாயாகிய

**அமரர்**

## வைத்திலிங்கம் நாகமுத்து

**(இல.677, கனகபுரம் வீதி, செல்வாநகர்)**

இரு விழி மூடியதால் பல வழிகள்
ஈரத்தால் நனைகின்றன எங்கள் கண்ணீர்ப் பூக்களை
காணிக்கையாகச் செலுத்துகின்றோம்
இனிய பொழுதில் காலனவன் செய்த செயலால்
எம்மையெல்லாம் கலங்க வைத்துப் போனதேன்
கடமை எல்லாம் முடிந்ததென்றா
காலன் உங்களைக் கவர்ந்தெடுத்து
எம்மைக் கண்ணீரில் மூழ்க விட்டான்
குடும்பத்தின் தலைவியாய் நீர் இருந்தீர்
அன்பையும் பண்பையும் பொழிந்த நீங்கள்
ஒரு நொடியில் பிரிந்தது ஏன்?
உங்களின் நினைவலைகளைச் சுமந்து நிற்கின்றோம்.

***அன்னாரின் மறைவினால் ஆறாத்துயருறும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.***

**ஓம் சாந்தி ! ஓம்சாந்தி !! ஓம்சாந்தி !!!**

தங்கள் இழப்பிலும் துக்கத்திலும் பங்குபெறும்...
உபதலைவர், உறுப்பினர்கள், செயலாளர்,
உத்தியோகத்தர்கள் / ஊழியர்கள்
ஊழியர் நலன்புரிச்சங்கம்,
கரைச்சிப் பிரதேச சபை, கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

பிறப்பு

16

11

1924



இறப்பு

02

11

2011

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், சக்திபுரம்
உருத்திரபுரத்தைவாழ்விடமாகவும், இல 677, செல்வாநகரை

அமரர்

## வைத்திலிங்கம் நாகமுத்து

காலமெல்லாம் கண்மணிகளுககாய் வாழ்ந்த
நற்குணத் தாயே! அம்மா - நீங்கள்
காலமான செய்தி காலை - எங்கள்
காதோரம் வந்ததேனோ?
கண்கள் கரைய கதறியழும் - உங்கள்
உறவுகளுக்கு என்சொல்லித் தேற்றுவோம்
எங்கள் வார்த்தைகூட விக்கித்துப் போயிற்றே
ஓயாதுழைத்த உத்தமியே - நீங்கள்

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது

ஓம் சாந்தி ! ஓம்சாந்தி !! ஓம்சாந்தி !!!

நண்பர்கள்
சந்திரன், ஜெயா, நாகராசா, காந்தன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி பகர்கின்றோம்

***"பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலிலும் பெரிது" (கு103)***

எமையெல்லாம் சமூகமெனும் பெரும்பரப்பில் ஆல்போல், அரசுபோல் ஆக்கி ஆறா மீளாத்துயரில் ஆழ்த்தி இயற்கையெய்திய எம் அன்புத்தெய்வம் அன்னை திருவாட்டி நாகமுத்து வைத்திலிங்கம் அவர்களின் இழப்புச் செய்திகேட்டு வந்து உதவிகள் பலபுரிந்த அயலவர், உற்றார்க்கும் நேரடியாக வரமுடியாமல் உள்ளூர், வெளியூர், வெளிநாடுகளிலிருந்து தொலைத்தொடர்பு மூலமும், மின் அஞ்சல் மூலமும் எம்முடன் தொடர்புகொண்டு தமது இரங்கங்களையும், ஆறுதல் கூற்றுக்களையும் பகிர்ந்து கொண்ட உற்றார் உறவினர் நண்பர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிகளை பதிப்பித்து வெளியிட்டோர், இறுதிக்கரண நல்லடக்க நிகழ்வுகளின் போது நேரடியாக கலந்து உதவியவர்களுக்கும், கல்லுத்தள்ளல், எட்டுச்செலவு, 31ஆம் நாள் நினைவுகூறல் போன்ற நிகழ்வுகளில் கலந்து இவை சிறப்புற நடைபெற பல வழிகளிலும் உதவிய அயலவர் நண்பர்கள் உற்றார், உறவினர்க்கும் நினைவு மலரை பதிப்பித்துத்தந்த வவுனியா வாணி கணனிப் பதிப்பகததாருக்கும் உள, உடல் ஆறுதல் வழங்கித்தேற்றிய அன்புநிறை நெஞ்சங்களுக்கும் எமது மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


***"திணைத்துணை நன்றி செய்யிலும் பனைத்துணையாக
கொள்வார் பயன் தெரிவர்" (கு104)***

***கனகபுரம் முதன்மைச்சாலை***
***(டிப்போவீதி) செல்வாநகர்,***
***கிளிநொச்சி.***

இங்ஙனம்
**குடும்பத்தினர்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனிநாயகமுதலி தலைமுறையினர் -தொடர்ச்சி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிநாயகமுதலி தலைமுறையினர் -1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவள்ளுவரின் வாழ்க்கை விளக்கம்

அடக்கம் அமரருள் உய்க்கும்
அருட்செல்வம் செல்வத்துட் செல்வம்
அறிவுடையார் எல்லாம் உடையார்
அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு
அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை
அவையறிந்து ஆராய்ந்து சொல்லுக
ஆதிபகவன் முதற்றே உலகு
ஆறாதே நாவினார் சுட்டவடு
இடுக்கண் களைவதாம் நட்பு
உள்ளத் தனையது உயர்வு
உடையார் எனப்படுவது ஊக்கம்
உழவார் உலகத்தார்க்கு ஆணி
எல்லார்க்கும் நன்றாம் பணிதல்
ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்
கற்றபின் நிற்க அதற்குத் தக
சான்றோர்க்குப் பொய்யா விளக்கே விளக்கு
பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்
பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்
முகந்திரிந்து நோக்கக் குழையும் விருந்து
முயற்சி தன் மெய்வருத்தக் கூலி தரும்.



நாகமலர் 02.12.2011

Printed By: Vaani Computer Printing Centre 024 2223658

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org